அறைவு 03 இயம் 54 July 11-17, 2015
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்
# மலைமுரசு
MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
பக்கங்கள் : 20+4 விலை : 30.00

aat
@
VBC
0770203201
026-2227622

HELLO MOBILE WORLD

122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# தமிழரசுக் கட்சிக்குள் பிளவு !
## பேரினவாதத்தின் சதியா?





திருகோணமலை தமிழரசுக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதை அதன் உறுப்பினர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை (09) வேட்பாளர் தெரிவில் எழுந்த கடும் இழுபறிநிலையை அடுத்தே தமிழரசுக் கட்சியின் இடைநிலை உறுப்பினர்கள் உட்பட கடைநிலை உறுப்பினர்கள் சிலரும் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறும் தமது முடிவை அறிவித்துள்ளனர்.

தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறினாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவளிப்பதாகத் அவ்வுறுப்பினர்களிற் சிலர் தெரியப்படுத்தியுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஆசனத் 21

# திருகோணமலையில் “கன்சைட்”
# நிலத்தடி வதை முகாம்???


வைப்பகப்படம்


இலங்கைக் கடற்படையினர் திருகோணமலை மற்றும் கொழும்பில் இரகசியத் சித்திரவதைத் தடுப்பு முகாம்களை நிலத்துக்கடியில் பேணிவந்திருப்பதான செய்தியொன்று வெளியாகியுள்ளது.

ஏற்கனவே திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் ‘‘கோத்தா’’ என்றவொரு தடுப்பு முகாம் இருந்தமைக்கான ஆதரங்கள் தன்னிடம் இருப்பதாக தமிழத் தேசியக் கூட்டமைப்பின் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்திருந்த நிலையில் தற்போது நலாம் கட்டையில் அமைந்துள்ள சமுத்திரவியல் கற்கைகள் கல்விப் பீடப்பகுதியில் நிலத்துக்கடியில் “கன்சைட்” என்ற பெயரில் சித்திரவதைத் தடுப்பு முகாமொன்று பேணப்பட்டதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

2008ம் ஆண்டில் தெஹிவளை, பெர்னாண்டோ மாவத்தையில் வைத்து ரஜீவ நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஸ்வரன் ராமலிங்கம், மொஹம்மட் நிலான், மொஹம்மட் 21

# வேட்புமனுத்தாக்கல்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (தமிழ் காங்கிரஸ்) திருகோணமலை மாவட்டத்திற்கான நாடாளுமன்றத் தேர்தல் வேட்பு மனுவை நேற்று (10) மாலை 2.30 மணியளவில் தாக்கல் செய்தது.



அக்கட்சியின் வேட்பாளர்களாக இரா. ஸ்ரீஞானேஸ்வரன், க. தங்கே-ஸ்வரன், இ.ஜீவேந்திரன், ஞா. ஜெகதீஸ்வரன், க. சந்திரகுமார், திருமதி. செ. செல்வகுமாரி, திருமதி ஆ. வாசுகி ஆகியோர் பெயரிடப் பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருகோணமலை மாவட்டத்திற்கான நாடாளுமன்றத் தேர்தல் வேட்பு மனுவை நேற்று (10) மாலை 3.00 மணியளவில் தாக்கல் செய்தது.

திருகோணமலை மாவட்டத்திற்கான அக் கட்சியின் வேட்பாளர்களாக இரா சம்பந்தன், துரைரெட்ணசிங்கம், ஜீவரூபன், கனகசிங்கம், யதீந்திரா, சரா புவனேஸ்வரன், திருமதி இந்திராணி ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## தமிழர்களின் தேர்வும் தீர்வும்!!!

தமிழர்களின் அரசியற் களத்தில் புதியதோர் திருப்பு முனையாக தமிழ்த்தேசிய ஆதரவுக் கட்சியொன்று தேர்தலில் களமிறங்கியுள்ளது.

ஒரு தசாப்த காலத்தின் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலில் இந்தப்புதிய அலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் அரசியல் வெளியை உதிரிகளாக நிரப்பி வந்த நான்கு தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைத்து 2001ம் ஆண்டில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இப்புதிய அரசியல் கூட்டணியானது ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 2009ம் ஆண்டு வரைக்கும் கொண்டிருந்த நிலைப்பாட்டை, அதற்குப் பின்னரான காலப்பகுதியில் கைவிட்டு விட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை அடுத்து 2010ம் ஆண்டில் அக்கூட்டமைப்பிலிருந்து பிரிந்து வெளியேறியே தமிழ்க்காங்கிரஸ் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற கொள்கை பற்றுடன் தாம் செயற்படுவதாக விடுத்த அறிவித்தலை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் விடுதலைப்புலிகளால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட கஜேந்திரன் மற்றும் பத்மினி ஆகியோர் தமிழ்க்காங்கிரஸ் உடன் இணைந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்றொரு கட்சியை ஆரம்பித்து தமிழ்த்தேசியத்திற்காக குரல் எழுப்பி வருகின்றனர்.

தமிழ்த் தேசிய அரசியலில் இன்று இரு பெரும் கட்சிகளாக உருவாகியுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழர்களுக்கான தீர்வு என்ன என்பதையிட்டு இரு வேறுபட்ட முன்மொழிவுகளை கொண்டுள்ளன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது தமிழர்களுக்கான தீர்வாக அதிகாரப்பரவாலக்கத்தின் ஊடாக சுயாட்சி முறையொன்றைத் தாபித்து கொள்வதே! என முன்மொழிந்து வருகின்றது. அம் முன்மொழிவிற்கு எதிராக தமிழர்களுக்கான தீர்வு தமிழ்த் தேசத்திற்கான அங்கீகாரமே என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்மொழிவினை செய்து வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்மொழியப்படும் அதிகாரப்பரவலாக்கமானது நிலையானதொரு தீர்வாக தமிழ் மக்களுக்கு அமையப் போவதில்லை எனத் தெரிவிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழங்கப்படும் அதிகாரங்களை மீளப்பெற்றுக் கொள்ளும் வலு மத்திய அரசிற்கு எப்போதுமே இருப்பதாகக் கூறியுள்ளது.

வலுவில் ஆசைகொண்ட ஒருவர் ஆட்சிக் கட்டிலில் ஏறினால் அதிகாரப் பரவாலாக்கம் ஊடாகத் தரப்பட்ட அதிகாரங்களைத் திருப்பிப் பெற்றுவிடும் வாய்ப்பும் உருவாகும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆட்சியின் இறுதிக்காலப்பகுதியில் திவிநெகும சட்டமூலம் ஊடாக மாநில அரசிற்கு வழங்கப்பட்ட சில அதிகாரங்களை மத்திய அரசு மீளப்பெற்றுக்கொண்டதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மேற்சொன்னதற்கு உதாரணமாகத் தெரிவித்துள்ளது.

அவ்வாறே கஜேந்திரகுமார் பொன்னப்பலத்தின் கட்சியால் முன்மொழியப்படும் ஒரு தேசம் என்ற முடிவைச் சாதிக்கமுடியாத, வெற்றுப்பகல் கோசம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாடிவருகின்றது. எனினும் த.தே.கூவின் மொத்த ஆளுகைக்கு உட்பட்டுள்ள வடமாகாணசபை அமர்வொன்றில் முதல்வர் சி.வி.வி அவர்கள் ஒருநாடு, இரு தேசமே ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வு என பேசியிருப்ப குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர்களின் சார்பு நிலையைக் கொண்டுள்ள இந்த இரண்டு கட்சிகளிடையேயும் கடும் போட்டி தமிழ்த் தேசமான வடக்கு கிழக்கு எங்கும் இருக்கும் என்றே எதிர்வு கூறப்படுகின்றது.

இந்நிலையில் தமிழ் மக்கள் வழங்குகின்ற வாக்கே மேற்போந்த கொள்கைகளுள் எக் கொள்கையின் பின்னே மக்கள் அணிதிரளத் தயாராயிருக்கின்றனர் என்பதை உலகிற்குப் பறைசாற்றிவிடும்.

எனவே இன்றைய காலப்பகுதியில் தமிழரின் தீர்வு எது என்பதைத் தீர்மானிக்கத்தக்க வல்லமையுள்ளவர்களாகத் தமிழர்களின் வாக்குகள் மாற்றமடைந்துவிட்டன.

தமிழர்களுக்கான தீர்வு எதுவென்பதை சிந்திப்பார்களா?

## போதையற்ற உலகிற்கான பேரணி

கிண்ணியா பிரதேச செயலகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட "சுயகண்ணால் போதையற்ற உலகை காண்போம்" எனும் தொனிப்பொருளில் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான ஊர்வலம் நேற்று வெள்ளிக்கிழமை கிண்ணியாவில் இடம்பெற்றது. இவ் ஊர்வலத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் கிண்ணியா பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், கணக்காளர், கிராம சேவை உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




## நஜீப் ஏ. மஜீத் களத்தில். . .

எதிர்வரும் பொதுத்தேர்தலில் முன்னாள் முதலமைச்சரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூதூர்த்தொகுதி அமைப்பாளருமான நஜீப் ஏ.மஜீத் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார். ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் வேண்டுகோளுக்கமையவே எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## வெற்றிலையில் மீண்டும் களமிறங்கும் முன்னாள் முதல்வர் பிள்ளையான்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுலைப் புலிகள் கட்சி வெற்றிலைச் சின்னத்தில் களமிறங்கவுள்ளதாக அக்கட்சியின் தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பு கிரான் பிரதேசத்தில் ரெஜி கலாசார மண்டபத்தில் நடைபெற்ற பொதுச்சபை கூட்டத்தில் கலந்துகொண்டு சிறீலங்கா சுதந்திர கட்சியில் தன்னுடன் தேர்தலில் களமிறங்க இருக்கும் வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவிடம் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தான் வெற்றிலைச் சின்னத்தில் இம்முறை போட்டி- யிடுவதாக அவர் தெரிவித்தார்.



## மாடுகளை திருடி விற்றவர்கள் கைது

கடந்த வருடம் மொரவெள பகுதியில் இரண்டு மாடுகளை திருடி அவற்றை அறுத்து இறைச்சியை விற்பனை செய்ததாகக் கூறப்படும் இருவர் தொடர்பில் வழக்கு திருகோணமலை நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்த நிலையில், அவ்வழக்குத் தவணைகளுக்கு சமூகமளிக்காது தலைமறைவாக இருந்த அந்த இரண்டு சந்தேக நபர்களையும் கடந்த புதன்கிழமை நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, இம்மாதம் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். சந்தேக நபர்கள் இருவரும் தலைமறைவாக இருந்த காலத்திலும் பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்பு இருப்பதாகவும், இவர்கள் இதற்கு முன்னரும் பல தடவைகள் சிறைவாசம் அனுபவித்துள்ளதாகவும் மொரவெள காவல்துறையினர் தெரிவித்தனர்.

## யானை தாக்கி இரு பிள்ளைகளின் தந்தை மரணம்

வெருகல் பிரதேச செயலகத்துக்கு அருகில் இன்று வெள்ளிக்கிழமை காலை காட்டு யானை தாக்கியதால், இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக வெருகல் பிரதேச செயலாளர் எம்.தயாபரன் தெரிவித்தார். வட்டவான் கிராமத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கதிர்காமத்தம்பி விஜயகுமார் (வயது 31) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

மீன்பிடித் தொழிலுக்காக வீட்டிலிருந்து புறப்பட்டு திருகோணமலை – மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இவரை, யானை விழுத்திவிட்டு தலையில் ஏறி மிதித்துள்ளது. அத்துடன், இவரின் சைக்கிளையும் யானை நொருக்கியுள்ளது.

## கஞ்சா சந்தேக நபர் விளக்கமறியலில்

தம்பலாகமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மையில்தீவு, சிராஜ் நகர் பகுதியில் கடந்த 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு கிலோ கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர் தம்பலகாமம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அப்போது சந்தேக நபருக்கு பிணை வழங்கப்பட்டதோடு, அவ்வழக்கு திருகோணமலை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தது.

இந்த நிலையில், மீண்டும் விசாரணை மேற்கொள்ளவேண்டும் எனக் கருதி விளக்கமறியலில் எதிர்ரும் ஆகஸ்ட் 17ம் திகதி வரை வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## தடம் மாறும் போதனா வைத்தியசாலை அடையாள மாற்றம் வேண்டாம்

வைத்தியசாலையிலே இச்சிகிச்சைகூடம் மிக நீண்ட வயதை கொண்டது. பல நூறு சத்திர சிகிச்சை நிபுணர்கள் இங்கே கண்ணியமாக கடமையாற்றி சென்றுள்ளனர்.

ஆனால் தற்போது மகப்பேற்று விடுதிக்கு புதிதாக நியமனம் பெற்று வந்த இஸ்லாமிய மதத்தை சேர்ந்த பெண் வைத்தியர் ஒருவர் தன்னுடைய விருப்பப்படி அரச பொது விதிகளை மீறி தமது இன அடையாளத்தை வெளிப்படுத்தும் ஆடைகளை சத்திர சிகிச்சைகூடத்தினுள் அணிய முயற்சிக்கின்றார். இதற்கு வைத்தியசாலையினுடைய நிருவாகமும் குறித்த சிகிச்சைப் பிரிவின் தலைமையும் துணைபோக முயற்சிக்கின்றமை அசாதாரணமாகும்.

ஆரோக்கியமான மாற்றத்தை மட்டுமே நாம் ஏற்றுக்கொள்வோம்.மாறாக அடையாள மாற்றத்துக்கு இடமளிக்கப்போவதில்லை. எனவே அதிகாரிகள் மிக நிதானமாக செயற்பட்டு அசாதாரணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகிறோம் என்கின்றது மட்டு செய்திகள்.

## உல்லாச பிரயாண தகவல் நிலையம்

மட்டக்களப்பு நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள உல்லாசப் பிரயாணிகள் தகவல் நிலையம், இம்மாத இறுதியில் திறந்து வைக்கப்படுமென்று மாநகர ஆணையாளர் எம்.உதயகுமார் தெரிவித்தார். இந்த நிலையத்தின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், அதன் வளாகத்தை சுற்றி எல்லை இடும் பணி கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வன்முறைகளை வெளிக்கொணரும் மாநாடு



பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறைகளை வெளிக்கொண்டு வருதல் பற்றிய மாநாடு கிழக்கு பல்கலைக்கழகத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நேற்று வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்தது. பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறைகளை வெளிக்கொண்டு வருதல் எனும் தலைப்பில் இரு நாள் மாநாட்டை கிழக்குப் பல்கலைக்கழகமும் பொதுநலவாய பல்கலைக்கழக ஒன்றியமும் இணைந்து நடத்துகின்றது.

இந்த மாநாட்டில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உயர் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், துறை சார்ந்த நிபுணர்கள், பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்கள் ஆகியோரும் ஆர்வக் குழுக்களும் கலந்து கொண்டனர்.

## துண்டுப்பிரசுர பாவனையை உடன் நிறுத்த முயற்சி



கிழக்கு பல்கலைக்கழகத்தில் அநாமதேயமாக துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கும் நடவடிக்கையை ஒழிக்க-வேண்டுமென்று அப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரீ.ஜயசிங்கம் தெரிவித்தார்.

கிழக்கு பல்கலைக்கழக நிர்வாக அதிகாரி ஒருவரை தொடர்புபடுத்தி தற்போது துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக்-கழகத்தில் பல நல்ல மாற்றங்கள் இந்த அதிகாரியினால் நிகழ்ந்துள்ளன. தங்களின் பிரச்சினைகளை நேரடியாக பேசித் தீர்ப்பதே நாகரிகமானது.

எனவே, இதுவொரு உயர் கல்வி நிறுவனம் என்ற வகையில் அநாமதேய தாக துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக-கப்படுவதை தவிர்ப்பதே சிறந்தது என மேலும் தெரிவித்துள்ளார்.

## போதை ஒழிப்புக்கான பேரணி

ஜனாதிபதி மைத்திரிபாலவின் ஆலோசனைக் கமைய போதைவஸ்து பாவனை அற்ற நாட்டினை உருவாக்கும் திட்டத்தின் கீழ், தேசிய போதை ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு, காத்தான்குடியில் மாபெரும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. காத்தான்குடி காவல் நிலையம் மற்றும் காத்தான்குடி முச்சக்கரவண்டி சங்கம் மற்றும் கல்வி திணைக்களம் என்பவற்றின் ஏற்பாட்டில், போதைப்பொருளை நாட்டில் இருந்து விரட்டியடிக்க தாங்களும் ஒன்றிணையுங்கள் என்னும் தொனிப்பொருளில் இந்த ஊர்வலம் நடாத்தப்பட்டது.

## "விபத்துக்களை தடுப்போம்"

விபத்துக்களை தவிர்க்கும் சமூகமட்ட செயற்றிட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக யுனிசெப் நிறுவனத்தின் சிறுவர் காயங்களுக்கான திட்டத்தின் மட்டக்களப்பு, அம்பாறை முகாமையாளர் எஸ்.பன்னீர்ச்செல்வம் தெரிவித்தார். இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட எட்டு முன்னணி நகரப் பாடசாலைகளை சேர்ந்த சுமார் ஐந்நூறு மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் செயற்பாடு நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பு புனித சிசிலியா உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது. பாதை ஒழுங்குவிதிகள் மற்றும் சிறுவர்களால் அனுசரிக்கப் படவேண்டிய போதனைகளை வினைத்திறனுள்ள மட்டத்தில் விஸ்தரிப்பது குறித்து இந்த செயற்றிட்டம் அமைந்திருந்தது. இலங்கையில் பொதுவாக பாதை நடைமுறைகளை வளர்ந்தோர் சிறியோர் எவருமே பின்பற்றாததால் நாளாந்தம் அதிக விபத்துக்கள் சம்பவிப்பதாக இங்கு இடம்பெற்ற நிகழ்வுகளில் சுட்டிக்காட்டப்பட்டது.

## காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தீர்வு வேண்டும்

காணாமல் போனவர்களின் நிலை என்ன என்பது தொடர்பில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதிக்கு பின்னர் புதிய அரசாங்கம் தெரியப்படுத்த வேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார். அம்பிளாந்துறையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை (09) நடைபெற்ற ஆதவாளர்களுடனான சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு கூறினார். இங்கு மேலும் தெரிவித்த அவர், "பல வருடங்களாக சிறையில் வாடிக்கொண்டிருக்கின்ற எமது உறவுகள் தொடர்ந்தும் சிறையில் வாடிக்கொண்டிருப்பதை அனுமதிக்கமுடியாது. இந்த அவல நிலைக்கு பதில் கிடைக்கவேண்டும். அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல பிரயத்தனங்களை செய்துவருகின்றது" என்றார்.

## பஸ் அடித்து படுகாயம்

மட்டக்களப்பு பிரிவுக்குட்பட்ட அரசடி சந்தியில் தனியார் பஸ் வண்டியொன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியதன் காரணமாக ஒருவர் படுகாயமடைந்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் கதுறுவெலவில் இருந்து கல்முனை நோக்கி சென்ற பஸ் சே இவ்வாறு விபத்தினை ஏற்படுத்தி-யுள்ளது. இதன் காரணமாக மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## "நான் ஒரு போதும் கட்சி தாவ மாட்டேன்"

SLMC
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

எதிர்கால அரசியல் நடவடிக்கை தொடர்பில் கேட்டபோது முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை விட்டு, நான் கட்சி மாறப்போவதாக கூறப்படும் கதைகளில் எவ்வித உண்மையுமில்லை. முஸ்லிம் காங்கிரஸை விட்டு நான் விலகிச் செல்லமாட்டேன். மேலும், எதிர்வரும் பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் வேட்பாளராக களம் இறங்கவுள்ளேன்" எனவும் தெரிவித்துள்ளார்.

## த.தே.கூ வேட்பாளர் விபரம்

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

எதிர்வரும் பொது தேர்தல் களத்தில் தமிழரசு கட்சியில் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் சித்தாண்டியைச் சேர்ந்த கிழக்கு மாகாண காவல்துறை ஆணைக்குழு பணிப்பாளர் சி.சாமித்தம்பி (எல்.எல்.வி) அவர்கள் வேட்பாளராக தெரிவாகியுள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் வேட்பாளர்கள் தெரிவானது இழுபறி நிலை ஏற்பட்டபோதும் மாவட்டத்தில் தேர்தலில் களமிறங்க இருக்கும் வேட்பாளர்கள் பட்டியல் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளது.

அதனடிப்படையில் தமிழரசுக் கட்சி சார்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிறிநேசன், ரெலோ சார்பாக மாகாண சபை உறுப்பினர் கோ.கருணாகரன், ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பாக மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம், புளோட் சார்பாக ச.வியாழேந்திரன் ஆசிரியரும், வேட்பாளர்களாக களமிறங்கவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் சர்ச்சை

## மகிந்த ராஜபக்ஷ வேட்புமனு தாக்கல் செய்தமை தொடர்பாக குழப்பம்



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேட்புமனுவில் எப்போது கைச்சாத்திட்டார் என்பது தொடர்பில் மாறுபட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் குருணாகல் மாவட்டத்தில் மஹிந்த போட்டியிடவுள்ளார் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கமைவாக நேற்றுக் காலை வேட்புமனுவில் மஹிந்த கையெழுத்திட்டதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார். எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவும் இதனை உறுதிப்படுத்தியிருந்தார்.

எனினும் அதற்கு முன்னைய நாளில் மஹிந்த வேட்புமனுவில் கையெழுத்திட்டார் என பசில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். ஆனால் வேட்புமனுவில் மஹிந்த இன்னும் கையெழுத்து போடவில்லை என அவரின் ஊடகப் பேச்சாளர் ரொகான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார்.

மலைமுரசு MALAIMURASU

## தேசிய செய்திகள்

### சத்தியாகிரக போராட்டம்

## பெருந்தோட்ட தொழிலாளருக்கு மேலதிக ரூ1,000

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வை முதலாளிமார் சம்மேளனம் வழங்ககோரியும் ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொடுப்பேன் என்ற தொழிற்சங்கத்தின் வாக்குறுதியை நிறைவேற்ற கோரியும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் தலவாக்கலை விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை சத்தியாகிர போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



தொழிலாளர் தேசியசங்கத்தின் தலைவர் பி.திகாம்பரம், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஸ்ணன், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் ஆகியோர் சத்தியாகிரக போராட்டத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## திடீர் ரத்து

ஜாதிக ஹெல உறுமயவின் புதிய கூட்டணியாக ஐக்கிய நல்லாட்சிக்கான தேசிய முன்னணியை அறிமுகப்படுத்துவதற்காக நேற்று வெள்ளிக்கிழமை நடத்தப்படவிருந்த விசேட ஊடகவியாளர் மாநாடு எவ்வித அறிவித்தலும் இன்றி திடீரென இரத்து செய்யப்பட்டது.

எதிர்வரும் நாட்களில் அரசியல் நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் மூன்றாவது அணியொன்று உருவாவதை தடுக்கும் நோக்கிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




## உடலம் மீட்பு

மன்னார், மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணை இலுப்பைக்குளம் கிராமத்தில் நீரோடை ஒன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

## மகிந்தவுக்கு எதிராக கறுப்பு எதிர்ப்பு அணி

மஹிந்தவுக்கு வேட்பு மனு வழங்கியமைக்கும், மீண்டும் அவர் நாடாளுமன்றத்திற்கு வர மேற்கொள்ளும் முயற்சிக்கும் எதிர்ப்பு தெரிவித்து வீதி எதிர்ப்பு அமைப்பு ஏற்பாடு செய்துள்ள கறுப்பு எதிர்ப்பு இன்று கொழும்பில் நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு எதிர்வரும் பொது தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புரிமை வழங்கியிருந்தார். அதற்கமைய கடந்த வியாழக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் கீழ் போட்டியிடுவதற்கு வேட்பு மனுவில் கையொப்பமிட்டார் என தெரிய வந்ததையிட்டு இவ் எதிர்ப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் எதிர்ப்புக் கூட்டமும் நடைபெற்றது.




## 9 வருடங்களின் பின் விடுவிப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 2006ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனால் கடந்த வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

மேற்படி இருவருக்கும் எதிராக சுமத்தப்பட்ட குற்றம், சரியான முறையில் சாட்சியங்கள் ஊடாக நிரூபிக்கப்படாமையால் அவர்களை விடுதலை செய்ய நீதிபதி தீர்ப்பளித்தார்.

## ஆசிரியர் தாக்கியதால்

### பெற்றோர் ஆசிரியரை தாக்கினர்

காலி - ஹிக்கடுவை ரோஹண வித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் ஆசிரியரின் தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர். குறித்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளதுடன், சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவன் காலி - கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தை அடுத்து பிரதேசவாசிகள் பாடசாலைக்குள் நுழைந்து சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியரை தாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தகவல்கள் தெரிக்கின்றன.




## மாற்றுதிட்டம் விரைவில்

பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஒப்படைகளுக்கு பதிலாக மாற்று செயற்பாடொன்றை தயாரிப்பதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. ஆசிரிய தொழிற்சங்கங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது இந்த விடயம் குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதாக அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க குறிப்பிட்டார். நடைமுறையிலுள்ள முறையினால் தேசிய ரீதியான மதிப்பீடுகளுக்கு சவால் ஏற்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் கூறினார்.

## பேருந்து ஊழியர்கள் பகிஷ்கரிப்பு

ஹட்டன் – கண்டி வீதியூடாக ஹட்டனிலிருந்து சேவையில் ஈடுபடும் பஸ்களின் சாரதிகளும் நடத்துனர்களும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். கண்டி பஸ் தரிப்பிடத்தில் நேர கண்காணிப்பாளருக்கும் பஸ் சாரதி மற்றும் நடத்துனர்களுக்குமிடையில் நேற்று முற்பகல் முறுகல் நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து பஸ் சாரதி மற்றும் நடத்துனர்களிடம் அதிகாரிகள் 5000 ரூபா அபராதத்தை அறவிட்டுள்ளனர்.

பஸ் ஊழியர்களிடம் அபராதம் அறவிடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இப்பணிப்-பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்-பட்டது.

## கொலையாளிக்கு மரண தண்டனை

சாவகச்சேரி பகுதியில் கடந்த 2008ஆம் ஆண்டு மனைவியை மண்ணெண்ணெய் ஊற்றி கொலை செய்தவருக்கு யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் மரணதண்டனை விதித்து, தீர்ப்பளித்துள்ளார். . கடந்த 2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தவமணி மகான் என்ற பெண் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத நாணயக் கடத்தல் முறியடிப்பு

நாட்டிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயங்களை கடத்தி முயன்ற ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 36 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக காவல்துறை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

16 ஆயிரத்து 484 அமெரிக்க டொலர்கள் 39 ஆயிரத்து 500 சவுதி அரேபிய ரியால் மற்றும் 6 அவுஸ்திரேலிய டொலர்கள் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## புதையல் தோண்டிய நால்வர் கைது

கம்பளை – தெல்பிட்டிய பகுதியில் புதையல் தோண்டிய நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் சிலவற்றையும் கைப்பற்றியுள்ளதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

தம்புள்ளை, சேருநுவர மற்றும் தெல்பிட்டிய பகுதிகைளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டதாக தெரிய வருகின்றது.

அத்துடன் அவர்கள் தோண்டுவதற்காக கொண்டுந்திருந்த பொருட்களும் அபகரிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## செல்பி பறித்த உயிர்

ரஷ்யாவில் பாலத்தின் மீது நின்று செல்.்.பி எடுக்க முயன்ற பெண் ஒருவர் தவறி வீழ்ந்து பலியானார். சுற்றுலாத்துறை பற்றிப் படித்தவர் ரஷ்யாவைச் சேர்ந்த அன்னா க்ருபெய்னிகோவா(21). அவர் தனது தோழி ஒருவரின் பிறந்தநாளைக் கொண்டாட பிற தோழிகளுடன் மாஸ்கோ நகரைச் சுற்றிப் பார்க்கச் சென்றார். அப்போது அவர் பாலத்தின் ஓரத்தில் சாய்ந்தபடி செல்.்.பி எடுத்தார். செல்.்.பி எடுக்கையில் நிலைதடுமாறி 40 அடி உயர பாலத்தில் இருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

ரஷ்யாவில் இந்த ஆண்டில் மட்டும் செல்.்.பி எடுக்கையில் 10 பேர் பலியாகியுள்ளனர், 100 பேர் காயமடைந்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

## மிக உறுதியான குழந்தை!!

மகாராஷ்ரா மாநிலத்தில் உள்ள நாசிக்கில் 3 வயது குழந்தை விளையாடியபடியே தனது வீட்டிலிருந்து வெளியே நடந்து சென்றுள்ளது.



அப்போது அந்த வழியாக வந்த கார் ஒன்று குழந்தை மீது மோதியது. இந்த விபத்தில் காரின் முன் சக்கரம் மற்றும் பின் சக்கரம் குழந்தை மீது ஏறி இறங்கி உள்ளது.இதை கவனித்த அக்கம்பக்கத்தினர் காரை நிறுத்தி குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர் குழந்தைக்கு பெரிய அளவில் காயம் எதுவும் ஏற்படாததால் குழந்தை அதிர்ஷ்டவசமாக உயிர்பிழைத்தாக மருத்துவர்கள் தெரிவித்து உள்ளனர். கடந்த மாதம் நடைபெற்ற இந்த சம்பவம் அந்தப் பகுதியில் இருந்த கண்காணிப்பு கேமிராவில் பதிவாகி இருந்தது தற்போது வெளியாகி உள்ளது.

## அதிகரித்த வெப்பநிலையால் அழியப்போகும் நாடு

புவி வெப்பமயமாதலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள, உலகின் நான்காவது மிகச்சிறிய நாடான துவாலு அழிவின் விளிம்பில் உள்ளது. அதனைக் காக்குமாறு அந்நாட்டுப் பிரதமர் தனது உருக்கமான வேண்டுகோளை உலக நாடுகளிடம் விடுத்துள்ளார். பாரிஸில் டிசம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. பருவநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாட்டிற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலைவர்களை ஒன்றிணைக்கும் நோக்கத்திலான பயணத்தை துவாலுவின் பிரதமர் எனிலே ஸ்போகா மேற்கொண்டுள்ளார். பசுபிக் பெருங்கடலில் அவுஸ்திரேலியா மற்றும் ஹவாலிக்கு நடுவே குட்டித் தீவுகளைக் கொண்ட நாடு தான் துவாலு. வெறும் 10,000 பேருக்கான தேசமாக உள்ள துவாலு, பருவ நிலை மாற்றத்தால் உடனடியாகப் பாதிக்கப்படும் நாடாகப் பதிவாகியுள்ளது.

## ஆப்கான் பாராளுமன்றம் தாக்கம்

ஆப்கானிஸ்தான் பாராளுமன்றத்தின் மீது தலிபானியர்கள் இன்று தற்கொலைப் படை தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் சிக்கிய எம்.பி.க்கள் கதி என்ன என்பது தெரியவில்லை. ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இன்று பாராளுமன்ற கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது தலிபான் தீவிரவாதிகளின் தற்கொலைப் படை திடீரென பாராளுமன்றம் மீது தாக்குதல் நடத்தியது. பாராளுமன்றத்தில் அடுத்தடுத்து 4 குண்டுகள் வெடித்தன. இதனால் அச்சமடைந்த எம்.பி.க்கள் பாராளுமன்றத்தை விட்டு தப்பி ஓடினர். தற்போது தலிபான் தீவிரவாதிகளுக்கும் ஆப்கான் இராணுவத்துக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதலில் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்ற அதேவேளை இத்தற்கொலைத் தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மேலாளரினால் தாக்கப்பட்ட பெண் ஊழியர்

வேலையிலிருந்து விலகுவதாகக் கூறிய சக பெண் ஊழியரை அந்நிறுவனத்தின் மேலாளர் கொடூரமாகத் தாக்கிய வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நியூயோர்க்கில் உள்ள ஒரு உணவு விடுதியில் வேலை பார்த்து வந்த பெண் ஊழியர் தன் மேலாளரிடம் சென்று தனக்கு இந்த வேலை பிடிக்காததால் நின்று விடுகிறேன் என்று கூறியுள்ளார். இதனால் கடும் கோபமடைந்த மேலாளர் அப்பெண் ஊழியரைக் கடுமையாகத் தாக்கியுள்ளார். இந்த கொடூர சம்பவத்தை வீடியோ எடுத்த ஒருவர் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றிவிட்டார்.



## பிரச்சாரத்தில் பாபி ஜிண்டால்

அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தல் வரும் 2016 ஆம் ஆண்டு நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு ஹிலாரி கிளிண்டன் உள்பட பல்வேறு பிரபலங்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த வரிசையில் இந்திய வம்சாவளியை சேர்ந்த பாபி ஜிண்டாலும் ஒருவர். இந்து மதத்தில் இருந்து கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய பாபி ஜிண்டால், லூசியானா மாகாண கவர்னராக பதவி வகித்து வருகிறார். அதிபர் பதவிக்கான போட்டியில் பாபி ஜிண்டால் ஸ்டார் வேட்பாளராக அங்கீகரிக்கப்படாவிட்டாலும், பிரசாரத்தில் அவர் கலக்கி வருவதாக அமெரிக்காவின் பிரபல முன்னணி நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## ஒட்டுக்கேட்கப்பட்ட காதல்


பிரித்தானிய இளவரசர் வில்லியம் கேட் மிடில்டனின் உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. செயிண்ட் ஆண்ட்'ரூஸ் பல்கலைக்கழத்தில் ஒன்றாக படித்த இவர்கள் இருவரும் காதலித்து திருமணம் செய்துகொண்டனர். இந்நிலையில், இவர்கள் காதலர்களாக இருந்தபோது, இருவருக்குமிடையே நடந்த தொலைபேசி அழைப்புகளை நியூஸ் ஆப் வேர்ல்ட் என்ற பத்திரிகை ஒட்டுக்கேட்டுள்ளது.

## யூரோ மண்டலத்திலிருந்து வெளியே செல்லும் அபாயம்

கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வரும் கிரீஸ், கடனாளர்களைத் திருப்திப்படுத்தும் வகையிலான பொருளாதார சீர்திருத்தங்களை முன்வைத்துள்ளது. வியாழனன்று சீர்த்திருத்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு ஐரோப்பிய நாடுகள் கிரீஸை வற்புறுத்தி-யிருந்தன.

இந்நிலையில், கெடு முடிவதற்கு 2 மணித்தியாலங்-களுக்கு முன்னரே பொருளாதார சீர்திருத்த முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளார் கிரீஸின் பிரதமர் அலெக்சீஸ் சிப்ராஸ். கிரீஸ் பிரதமர் அலெக்சீஸ் சிப்ராஸ் இடதுசாரி என்பதால் ஐரோப்பிய ஒன்றியத்தின் காழ்ப்புணர்விற்கு ஆளாகி வருகிறார்.

இந்த சீர்திருத்தங்களை அவர் சமர்ப்பித்து அதனை அந்த நாடுகள் ஏற்றுக்கொண்டால், 3 ஆவது பெரிய கடன் தொகை கிரீஸ்"க்கு வழங்கப்படும். இல்லயெனில், கிரீஸ் யூரோ வலயத்திலிருந்து வெளியேற்றப்படும்.



## கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் பலி

நீர் நிலைகளின் தரத்தை ஆய்வு செய்ய ஜி.பி.எஸ். மூலம் இயங்கக்கூடிய இயந்திர வாத்துகளை சிங்கப்பூர் பயன்படுத்தி வருகின்றது. பொருளாதார வளர்ச்சியில் முன்னோக்கிச் செல்லும் சிங்கப்பூர், சுற்றுப்புற சூழலைப் பாதுகாக்க மறப்பதில்லை. அந்த வகையில், அந்நாட்டில் உள்ள பந்தன் நீர்த்தேக்கத்தில் தண்ணீரின் தரம் குறித்து ஆய்வு நடத்த ஜி.பி.எஸ் உதவியால் இயங்கக்கூடிய இயந்திர வாத்து பொம்மையை சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிறுவனம் பயன்படுத்தி வருகிறது. தண்ணீரின் ph அளவை ஆய்வு செய்து

## நீரிநிலைகளை சுத்திகரிக்கும் இயந்திர வாத்து

நீர் நிலைகளின் தரத்தை ஆய்வு செய்ய ஜி.பி.எஸ். மூலம் இயங்கக்கூடிய இயந்திர வாத்துகளை சிங்கப்பூர் பயன்படுத்தி வருகின்றது. பொருளாதார வளர்ச்சியில் முன்னோக்கிச் செல்லும் சிங்கப்பூர், சுற்றுப்புற சூழலைப் பாதுகாக்க மறப்பதில்லை. அந்த வகையில், அந்நாட்டில் உள்ள பந்தன் நீர்த்தேக்கத்தில் தண்ணீரின் தரம் குறித்து ஆய்வு நடத்த ஜி.பி.எஸ் உதவியால் இயங்கக்கூடிய இயந்திர வாத்து பொம்மையை சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிறுவனம் பயன்படுத்தி வருகிறது. தண்ணீரின் ph அளவை ஆய்வு செய்து ஆய்வாளர்களுக்கு அனுப்பும் வல்லமை படைத்த வாத்து பொம்மையை ரிமோட் கண்ட்ரோல் மூலம் ஆராய்ச்சியாளர்கள் இயக்குகின்றனர்.



## கென்யாவில் பயங்கர தாக்குதல்

கென்யாவில் பயங்கரவாதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நிகழ்த்திய தாக்குதலில் 14 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சோமாலிய எல்லைப் பகுதியில் இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு சோமாலியா நாட்டைச் சேர்ந்த அல்-ஷெபாப் பயங்கரவாதிகள் பொறுப்புக் கோரியுள்ளனர். இன்னும் இரண்டு வாரங்களில் அமெரிக்க அதிபர் ஒபாமா கென்யா வரவுள்ள நிலையில், இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வீணையடி நீ எனக்கு...



23

**– கவிஞர் வி.மைக்கல் கொலின்–**

**–சமுத்திரக் கரையின்**
**பூந்தோட்டத்து மலர்களிலே**
**தேன்குடிக்க அலைந்தது ஒரு**
**வண்ணத்துப் பூச்சி**
**வேளை சரிய**
**சிறகின் திசைமீறி**
**காற்றும் புரண்டோட**
**கரையோர மலர்களை நீத்து**
**கடல்நோக்கிப் பறந்து**
**நள்ளிரவு பாராமல்**
**ஓயாது மலர்கின்ற**
**எல்லையற்ற பூ ஒன்றில்**
**ஒய்ந்து அமர்ந்தது.**
**முதல் கணம் உவர்த்த சமுத்திரம்**
**தேனாய் இனிக்கிறது.–**

**– பிறமிள் –**

"புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே
எங்கள் புருசோத்தமன்
புகழ் பாடுங்களே ..."

வந்தாறுமுலை கிருஷ்ணன் கோயில் ஒலி பெருக்கியில் கண்ணன் புகழ் பாடும் அந்த இனிய பாடல் ஒலிபரப்பாகிக்கொண்டிருந்தது. மாலை நேர பூசை நமஸ்காரங்கள் முடிந்து கோயில் வளாகம் அமைதியாக இருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில பக்தர்கள் கோயிலுக்கு வந்த வண்ணமிருந்தனர். நிவேதாவும், ரதனும் கோயிலை சுற்றி வணங்கிவிட்டு வெளியே வரத் தொடங்கினர்.

ரதன் கோயிலின் அருகே இருந்த வேப்ப மரத்தடியில் சாத்தி வைத்திருந்த தனது 'லுமாலா' ஸ்போட்ஸ் சைக்கிளை எடுத்து வந்தான்.

"நிவே போவோமா ...' என ரதனின் கேள்விக்கு 'ரதன் நேரமும் போய்ட்டு என்ன..? என்றபடி சைக்கிளின் முன்னே ஏறிக் கொண்டாள். அந்த சிறிய லுமாலா சைக்கிள் இருவரையும் சுமந்து கொண்டு காற்றைக் கிழித்துக்கொண்டு ஓடத் தொடங்கியது.

நிவேதா தனது கூந்தலில் சூடியிருந்த மல்லிகை பூக்களின் வாசம் ரதனின் நாசியில் நுழைந்து அவனைக் கிறங்கச் செய்தது. கோயிலுக்கு வர வேண்டும் என்பதற்காக அவள் மாலை வேளை முழுகியிருக்க வேண்டும் போல்... அவளது நீண்ட கூந்தல் காய்ந்தும் காயாமல் ஈரத் தன்மையுடன் .... அவன் முகத்தில் உரசவும் அந்த கூந்தலின் மணமும் சேர்ந்து அவனை மேலும் மேலும் என்னவோ செய்தது.

இது நாள் வரை அவன் நிவேதாவை பல முறை சைக்கிளில் ஏற்றிச்சென்றிருக்கிறான். ஆனால் இன்றைய சுகம் போல் அவன் என்றுமே அனுபவித்ததில்லை... அந்த சுகத்தினை மேலும் மேலும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அவனது ஓட்ட வேகம் மெல்ல மெல்ல தடைப் பட்டது.

நிவேதாவுக்கும் அந்த நிலைதான். அவள் கையில் பிரசாத பொருட்கள் இருந்ததால் அவள் ரதனின் கரங்களுடன் அணைந்தது போலவே சாய்ந்திருந்தாள். ரதன் ஒரு கையை ஹெண்டிலில் இருந்து எடுத்தாலும் அவள் சரிந்து விழுந்து விடுவாள் போலிருந்தது. அவளது இடுப்பை ஏன் அவளையே தாங்கியபடி ஒரு வகையில் அணைத்தபடி இருக்கும் ரதனின் கரங்களின் ஸ்பரிசம் அவளுக்குள் ஏதேதோ உணர்வுகளை ஏற்படுத்தியது. என்னதான் புதிய சிந்தனைகளுடன் அவர்கள் ஆத்மார்த்தமாக காதலித்தாலும் தொடுதல் சுகம் என்பது ஆண் பெண் எல்லோருக்குமே புதிய உணர்வுகளை அல்லவா ஏற்படுத்துகிறது?

இது இயற்கையின் நியதியல்லவா. இதற்கு எந்த உயிரினமும் விதி விலக்காகிவிட முடியாது. அப்படித்தான் ரதனும் நிவேதாவும் தங்கள் உணர்வுகளால் தூண்டப்பட்டார்கள்.

பொதுவாகவே தனக்குரிய ஆண் மகனின் அணைப்பை பெண் பெரிதும் விரும்புகிறாள். அந்த அணைப்பில் அவளுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வு ஏற்படுகிறது. தன்னை காப்பாற்ற தனக்காக வாழ ஒரு ஜீவன் இருக்கின்றது என்ற தைரியம் அவளுக்கு ஆத்ம பலத்தைக் கொடுக்கிறது. வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.,

ஆணும் அப்படித்தான் தனக்காக எதையும் செய்ய ஒரு பெண் இருக்கிறாள் தனக்காக அழவும் தனக்காக கவலைப்படவும் தன சோகம் பகிரவும், தன சின்னச் சின்ன சந்தோஷங்களை பங்கிட்டுக் கொள்ளவும் ஒரு பெண் துணையாக இருகின்றாள் என்பதே அவனுக்கு புதிய உத் வேகத்தைக் கொடுக்கிறது.

அதுதான், காதல் எந்த வகையான ஆண்களையும் மாற்றிவிடும் என்கிறார்கள். தனக்காக ஒரு பெண் துணையை அவன் தீர்மானித்துக் கொண்டபின் அவனுள்ளும் மாற்றங்கள் இரசாயன வேகத்தில் ஆரம்பித்து விடுகின்றது

காதல் ஒரு ஆணையும் மாற்றும், ஒரு பெண்னையும் மாற்றும். அது தான் இந்த உலகத்திலேயே காதல் என்ற சொல்லுக்கு அத்தனை பெரிய சக்தி.! அது ஜாதி மதம் பார்ப்பதில்லை. உயர்வு தாழ்வு சொல்வதில்லை. ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு அதற்கு கிடையாது. எங்கே எப்போது பூக்கும் என்று யாருக்கும் தெரியாது. கற்பாறையிலும் அது பூக்கும், பாலைவன மணல் மேட்டிலும் அது பூக்கும்.

காதல் அதுதானே ...!

மும்தாஜ் மீது ஷாஜகானை பைத்தியம் கொள்ளச் செய்து தாஜ்மகாலை தந்தது. லைலாவுக்காய் மஜ்னுவை உயிரை விடச் செய்தது. சலீமுக்காய் அனார்க்கலியை கல்லறை ஏற்றியது. பார்வதிக்காய் தேவதாசை பலி கொண்டது. ரோமியோ ஜூலியட்டை சேர்த்தே அழித்தது. இவர்களை காதல் அழித்தாலும் அதே காதல் அவர்களை, அவர்கள் காதலை காவியங்களில் வாழச் செய்தது.

" நிவே... உங்கட.... கூந்தலில் ... இவ்வளவு வாசனை வருதே.... நீங்க ஏதாவது விசேஷமா ..சம்பூ ..எதுவும் யூஸ் பண்றீங்களா..?" ரதன் கேட்கவும் நிவேதாவின் முகம் சிவந்தது. மஞ்சள் பூசி பூசி எப்போதும் மங்களகரமாக இருக்கும் அவளது முகம் சிவந்ததை ரதனால் பார்க்க முடியாவிட்டாலும் அவள் வெட்கப்படுவதையும் மெல்ல தலையை குனிவதையும் உணர முடிந்தது.

அவனும் மெல்ல குனிந்து அவளது காதருகே "நிவே உண்மையை தான் சொல்றன்.. உங்கட உடம்பில இருந்து வாற வாசனை எவ்வளவு இதமா இருக்கு தெரியுமா...? எனக்கு இப்படியே சைக்கிளை ஓட்டிக்கொண்டே இருக்கணும் போல இருக்கு.." அவன் காதருகில் குனிந்து கதைக்க அவனது உதடுகள் பட்ட ஸ்பரிசத்தில்... அவளது காது நரம்புகள் கூட புடைத்தன.

மிகச் சமீபமாக ... மனசுக்கு பிடித்த ஒரு ஆண் மகன், அதுவும் தனது எதிர் காலமே அவன்தான் என இருப்பவன் தனது அழகைப் பற்றி, தன்னைபற்றி புகழும் போது எந்த பெண்ணுக்குத்தான் கிறக்கம் வராது. ..

நிவேதா தனது கரங்களால் ரதனின் கரத்தை பிடித்து மெல்ல அழுத்தினாள்.

"நிவே .. இப்ப எனக்கு ஒரு கவிதை எழுத வேண்டும் போல இருக்கு ... உதிரியாய் சில வார்த்தைகள் மனசுக்குள் வருது..."

நிவேதா ஒன்றும் பேசாமல் குனிந்தபடியே இருந்தாள் அவள் எதுவும் பேசுவாள் என்றும் ரதன் எதிர் பார்க்கவில்லை. புகழ்ச்சியும் வெட்கமும் சேர்ந்து அவளை பேசவிடாமல் தடுப்பதை ரதன் கண்டான் .



"என் இனியவளே
வானத்து நிலவை
உனக்கு ஒப்பிட்டு
உன்னை கறைபடுத்த
எனக்கு விருப்பமில்லை
எரிந்து விழும்
நட்சத்திரங்களை
உனக்கு உவமானம் சொல்லி
வர்ணிக்க எனக்கு
வார்த்தைகள் தேவையில்லை
நீ
சூரியனைப் போன்றவள்
சுட்டெரிக்கும் உன் சூரிய அழகு
என் கண்களுக்கு மட்டுமே
விருந்தாகும்
தாகத்துடன் பரவும்
என் கரங்களுக்கு
உன் சௌந்தரியம் மருந்தாகும்."

ரதன் கவிதையை சொல்லி முடித்தான். "என்ன கவிஞரே கவிதையெல்லாம் ரொம்ப ஓவரா போகுது? நிவேதா பொய்க் கோபம் காட்டினாள்.

அவர்களது சைக்கிள் வந்தாறுமுலை பொது நூல் நிலையத்தை கடந்து வந்து கொண்டிருந்தது.

"ஏன் உண்மையைத்தானே சொன்னேன்... கோபமா..?" ரதன் கேட்டான். அவனுக்கு தெரியும் அவன் மேல் அவள் எங்கே கோபப்படப் போகிறாள் என்பதும் அவளுக்கும் தெரியும் அவன் மேல் அவளுக்கு கோபம் வராது என்பதும். ஆனால் காதலில் சின்னச் சின்ன கோபங்களும் நடிப்புகளும் தேவையாய் இருக்கிறது.

"நிவே ..அண்மையில் ஒரு இந்திய சஞ்சிகையில் ஒரு கவிதை படித்தன். நல்லா வந்திருக்கு. ஆனா அதனை கவிதை என்றும் சொல்ல முடியாது. ஒரு கவர் ஸ்டோரிக்கு எழுதியிருந்த சில வரிகள் தான் அது"

"யாருடைய கவிதை...?"

"ரமேஷ் வைத்தியா என்ற ஒரு புதிய கவிஞனின் வரிகள்

" பட்ட மரம் தேராகும்
மணலெல்லாம் வீதி
ரெட்டை உயிர்
ஒன்றாகும்
இது காதல் ஜாதி
தொட்ட உடன்
உயிர் பூக்கும்
நீ என்னில் பாதி
விட்டு விட்டால் அணைந்து விடும்
உயிரென்னும் ஜோதி "

இதில் "தொட்ட உடன், உயிர் பூக்கும், நீ என்னில் பாதி என்ற வரிகள் அருமையா இருக்கு" எனக்கு மிகவும் பிடித்திருக்கு ரதன் ..."

"உண்மையில் நிவே உனக்கு ஞாபகமிருக்கா ...நாங்க கம்பஸ்சுக்கு வந்த அன்றைய ரயில் பயணம், கல்லோயா சாந்தி புகையிரத நிலையத்தில் கல் தடுக்கி நீ விழப் போனபோது நான் உன்னை தாங்கி பிடித்ததும் அதுதான் எமது முதல் தொடுகை ..அந்த நேரத்தில் உண்மையில் எனக்குள் ஒரு புதிய உயிர் பூப் பூத்தது போன்ற உணர்வு இருந்தது உண்மைதான் ..."

> **கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

ரதன் சொல்லவும்.. அந்த பழைய ஞாபகங்கள் நிவேதாவையும் வாட்டியது. அன்று ரதனின் கரங்களில் ஒரு பூமாலையைப் போல விழுந்ததும் அவன் தாங்கிக் கொண்டதும் அந்தத் தொடுகை அவளையும் அல்லவா கிறங்கச் செய்தது. மறக்க முடியாத நிகழ்வல்லவா அது? ஏற்கனவே சிவந்திருந்த அவள் மேலும் சிவந்தாள்.

"ரதன் உங்களுக்கு மட்டுமா.. எனக்கும் அப்படித்தான்.. அத மறக்க முடியுமா என்ன..?" நிவேதாவின் குரல் மயக்கத்துடன் ஒலித்தது.

அவர்களது சைக்கிள் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அருகில் வந்து கொண்டிருந்தது. 'நிவே இப்ப மணி 5.45 தானே இருவரும் கொஞ்ச நேரம் இருந்து கதைத்து விட்டு ஆறு மணி போல ஹொஸ்டலுக்கு போவம் என்ன ..?

நிவேதா சம்மதம் தெரிவிக்க முன்னரே சைக்கிள் பல்கலைக்கழக மெயின் கேட்டை தாண்டி உள்ளே வந்தது. அந்த காதல் ஜோடியை பற்றி காவல் கடமையில் இருக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் தெரியுமாதலால் அதில் நின்ற இருவரும் அவர்களைப் பார்த்து சிரித்தபடி தலை அசைத்தனர். ரதன் சைக்கிளை மெயின் ஹோல் பாகத்தால் திருப்பி கம்பியூட்டர் யுனிட்டைக் கடந்து நூலகத்திற்கு முன்னால் அவர்கள் வழமையாக அமரும் அந்த சீமெந்து கட்டுக் கருகில் சைக்கிளை நிற்பாட்டினான். சைக்கிளில் இருந்து நிவேதா இறங்க முற்படும் போது அவன் ஹெண்டிலில் இருந்து கையை எடுக்காமல் இருந்தான்.

"ஏய்... என்ன இது....?" அவள் பொய்க் கோபத்துடன் அவனது கரத்தை பிடித்து மெல்ல தூக்கினாள்... ரதன் அவள் தூக்கிய கரத்தை உயர்த்தி அவளது இடது கழுத்துக்குள்ளால் போட்டு அணைத்தபடி தன்னுடன் சேர்த்து இழுத்தான்.

'ரதன் ... யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க ...கையை எடுங்க...' நிவேதா மெல்ல சிணுங்கினாலும் கையை எடுப்பதற்கு அவளும் முனையவில்லை. தானே தனது கரத்தை எடுத்து அவளை விடுதலை செய்த ரதன் மெல்ல சிரித்தபடி 'என்ன பயமா இருக்கா? ஒருவரும் இல்ல பயப்பட வேண்டாம்" எனக் கூறியபடி சைக்கிளை பக்கத்தில் இருந்த மரத்தில் சாத்திவிட்டான்.

அங்கிருந்த சீமெந்து காட்டில் அமரப் போன நிவேதாவை "நிவே இந்த மரத்துக்கு கீழே இருப்பம்" என்றபடி அங்கிருந்த சிறிய மரங்களுக்கு கீழே தனது காலணியை கழற்றிவிட்டு அமர்ந்து கொண்டான் .

நிவேதாவும் அவனுக்கருகில் வந்து அமர்ந்து கொண்டாள். நிவேதா அவனுக்கருகில் அமரவும் அவன் அவளுக்கு எதிரே அவளது முகத்தை பார்ப்பது போல் அமர்ந்து கொண்டான்.

"நிவே ..நீர் இன்றைக்கு பிரமாதமாய் இருக்கிறீர்.. எனது கண்ணே பட்டு விடும் போல இருக்கு ...நான் கொடுத்து வைத்தவன் தான் ."

"என்ன இன்றைக்கு ஐயாவுக்கு மூடெல்லாம் ஒரு மாதிரி.."அவள் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"நிவே ...நாம ஒரு போட்டி வைப்பமா ...? நன் கண்ணை மூடிக் கொண்டு செய்ற காரியத்தை நீர் கண்ணை திறந்து கொண்டு செய்ய வேண்டும்.. இதில் நீர் தோற்றால் நான் உமக்கு ஒருபரிசு தருவேன். நான் தோற்றா நீ எனக்கு பரிசு தர வேண்டும் என்ன...?

மேவும்.. .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## காணாமற் போனவர்கள்

**- மாயன் -**



நிறைவுறா இரவுகளின்
முடிவில்
நெக்குருகி நிற்கிறது – என்
வாழ்க்கை..

நீர் ஊறா வயலில்
நேற்றெறிந்த நெல் மணியாய்
உன் நினைவுகள்...
வளரும் அப் பயிர் என
வரப்பில் நான்...
ஓர் அப்பனாய் - உன்
வருகைக்காய் காத்திருக்கிறேன்

உன் பிறப்பிற்
பேய்.. தாயைத்
தின்றது..

துணையின்றி நான்
தாயின்றி நீ
பல பகல்கள்
பல இரவுகள்
தாயும் துணையுமின்றி
நாம்...

உன் காலுதைவிற்
காமம்
காணமற் போனேன் நான்

கஞ்சியைப் பாலாய்
உண்டு வளர்ந்தாய்...
நீ வளஊந்த நாட்களின்
முடிவில் - கறுத்த என்
மயிர்கள் நரைத்துப்போனது

காலம் உனை உயர்த்தி
எனை உதிர்த்த
ஒரு நாளில் -
காணாமற் போனாய்
நீ......

என் செல்வமே....
நீ காணாமற் போனாயடா..

வீடும், வயலும்
வாசலும், வரம்புகளும்

வாலை ஆட்டி எம்
வாழ்வுடன் கலந்த இரு
நாய்களும்..

சுத்தமில்லாத உன் அறை..
அதிற் சிதறிக் கிடக்கும்
பாடப்புத்தகங்கள் - இன்னும்
பார்த்து முடிக்காத சில
பட இறுவட்டுக்கள்

தோய்க்கப்படாமல்
தொங்க விட்டிருக்கும்
உன் சறம்....

ஆழச் சுவரிற்
பதிந்த ஆணியில்
கொழுவிக்கிடக்கும்
தவழும் படம்...

இவையெல்லாம்
என்னுடன் இருக்க
நீ – காணாமற் போனாய்

சட்டமிடப்பட்ட உன்
படத்தைக் கையிலேந்தி
முகாம்கள் ஒவ்வொன்றாய் அலைந்து...

முடிவில்
வருவாய் நீ எனும்
நம்பிக்கையற்றுப்போன
இன்னாளில் கூட
நம்பவில்லை நான் - நீ
கடத்தப்பட்டாய் என்று

ஆறு நாள் உணவறுத்துக்
கவசம் பாடி
உனை மீட்டுத்தர – வேல்
முருகனையும் வேண்டித்
தோற்றுப் போனேன் நான்

என் செல்வமே

நாதியற்றுச் சிதையூட்ட
எவருமின்றிப்
பிணமாய்க் கிடக்கும் - அந்
நாளில்

ஆவியாய் ஆவது
வந்து எரியூட்டுவாயா
என் செல்வமே....

## முழுமையான்

*தாமரைத்தீவான் (ஈச்சந்தீவு)*

புத்தகமா? கொண்டு வா !
புகலுவாய் யார் எழுதினார்?
அத்தனையும் படிக்கலாம்.
ஆம் பா வேந்தர் பாக்களே !

பாட்டுப்புலவன் பாரதி
பார்த்த பாவின் வேந்தரின்
பாட்டுப் பாலும் தேனுமே.
பருகப் பருக இனிக்குமே!

தொலைவுக்காட்சி பார்ப்பினும்
சுவைக்கும் நூலும் தேவையே !
மலையளவாய் உண்டு - கை
மண்ணளவாம் கற்றவை !

வாசிப்போனே முழுமையான்.
வாசியான் கால் - அரை மகன் !
மாசிலாநூல் வாங்குவோம்.
மறந்திடாது பயிலுவோம் !

- - - - - - - -

## நானும் நடப்பேனா!!

தி/கன்னியா அ.த.க பாடசாலையில் தரம் 06 இல் கல்வி பயின்று கொண்டிருக்கும் என்.பூஜா எனும் சிறுமி தனது இரு கால்களினதும் நடக்கும் சக்தியை இழந்தவள். இருப்பினும் தனது படிப்பினை இடைநிறுத்தாது பெற்றோரின் அரவணைப்பிலும் ஆசிரியர், அதிபர் மற்றும் சக மாணவர்களின் ஆதரவுடன் தொடர்ந்து கல்வி பயின்று வருகின்றாள்.

அச்சிறுமிக்கு எதிர்வரும் யூலை மாதம் 21ம் நாள் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. அவளுக்கு கால்கள் இரண்டும் பூரண குணமடைந்து அவளும் அனைவர் போல் ஓடித்திரிய அனைவரும் வாழ்த்துவோம்.

சின்னஞ்சிறு சிறுமி வகுப்பில்
நானும் ஒருத்தி
படிப்பதோ தரம் ஆறில்
மாணவர் பலருடன் கூடி
நண்பர்களின் ஆதரவில்
அன்பை மேலுயர்த்தி
வகுப்புகளுக்கு பாட வேளைகளில்
இடுப்பில் என்னை இருத்தி
சுமந்து செல்லும் வேளையில்
எனக்கும் இருக்கும்
உள் மனதில் ஓர் அரிப்பு
எனவும் கருதாமல்
ஓடி விளையாடும் காலில்
இரத்தோட்டம் நிறுத்தி
பல வருட காலத்தில்
இன்னும் சிகிச்சை வருத்தி
யூலை வந்து விட்டதில்
ஓர் மகிழ்ச்சி
அதிலும் 21ம் தேதியில்
வைத்திய சாலையில் நிறுத்தி
காலுக்கு செய்யும் சிகிச்சையில்
வைத்தியருக்கு ஓர் திருப்தி
நானும் நடப்பேனா
மாணவர்களிடையே கேள்வி!
பள்ளி மாணவரின் வேண்டுதலில்
ஆசிரியர்களும் சேர்த்தி
ஊனம் என ஒதுக்காமல்
வெள்ளை மனம் உள்ளவர்கள்
பல இருக்கையில்
நானும் நடப்பேனா
சில்லுகளுள்ள சிறிய சைக்கிளில்
அமர்ந்து செல்லாமல்
சிரித்து சிரித்து சினேகிதிகளுடன்
நானும் நடப்பேனா?

**என்.பூஜா**
**தி/கன்னியா அ.த.க பாடசாலை**
**திருகோணமலை**

## வாழ்விற்காக!



நம் நாட்டு சட்டத்திற்
கடி பணிவோம்
அடக்குமுறை திட்டத்திற்
கடி பணியோம்
வாழ்வில் பண்பாட்டுடன் மனித
குலம் சேர்ப்போம்
என்றும் இனிவாதம் கொண்ட
குரோதத்திற் கடி பணியோம்
வளம் மிக்க எமதினத்தின்
இடர் காப்போம்
தொடர் தடைதந்து
தொடர்வோர்பலம் பார்ப்போம்
யாரும் எடை போடமுடியாத
உறவுகள் துயர்தீர்ப்போம்
துயர்தீர்க்கும் கோணேச பெருமானின்
வரம் சேர்ப்போம்

*மலை நேயன்*

## உண்மையை கண்டறிய துடிப்பு!



வெளிநாட்டு விசாரணைக்கு
மறுப்பு இங்கு:
வெறும் கண்துடைப்பு விசாரணைக்கு
விதந்துரைப்பு:

உண்மையை கண்டறிய
துடிப்பு: பாதிப்புற்றோர்
உறவுகளைத் தேடி இங்கு
உருகிமனம் தவிப்பு:

ஐ.நா விசாரணை இங்கு
அலக்கழிப்புஅது
ஆறு மாத காலத்துக்கு
பின்னடிப்பு:

நீதி கேட்டு தமிழ்மக்கள்
கொதிப்பு நல்லாட்சி
உதிப்பினிலும் ஏற்படுமா
பாதிப்பு?

சலுகைகளை எதிர்பார்த்தோர்
பூரிப்பு: தமிழ் மக்கள்
சுயகௌரவ வாழ்க்கைாழ
துடிதுடிப்பு

*கவிக்குயிலன்*
*சேனையூரான்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பிடம் சில கேள்விகள்

ஓர் பார்வை

நிலாந்தன்

**2009 மே மாதத்துக்குப் பின்னரான இரண்டாவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது.**

விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் வரும் இரண்டாவது பொதுத் தேர்தல் இது. 2009 இற்கு முன்பு வரை ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக புலிகள் இயக்கமே தமிழ் மக்களின் பிரதான அரசியல் போக்கைத் தீர்மானித்தது. 2009 இற்குப் பின் அப்பொறுப்பை கூட்டமைப்பு வகிக்கத் தொடங்கியது. இப்படிப் பார்த்தால் தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம் கூட்டமைப்பிடம் கைமாறிய பின்வரும் இரண்டாவது பொதுத் தேர்தல் இது. எனவே கடந்த ஐந்து ஆண்டுகளில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதைச் சாதித்திருக்கிறார்கள் என்பது தொடர்பில் ஒரு சரியான மதிப்பீடு இருந்தால்தான் அடுத்த நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ன செய்ய வேண்டியிருக்கும்? என்பது தொடர்பாகவும் ஒரு சரியான கணிப்பீட்டுக்கு வர முடியும்.

இம் மதிப்பீட்டை இரண்டு தளங்களில் செய்யவேண்டியிருக்கும். முதலாவது தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கூட்டமைப்பின் அணுகுமுறை எவ்வாறு இருந்தது என்பது. இரண்டாவது தமிழ் மக்களின் நிரந்தரப் பிரச்சினையைத் தீர்ப்பதில் கூட்டமைப்பு எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது என்பது. இவற்றைச் சிறிது விரிவாகப் பார்க்கலாம்.

போர் உக்கிரமடைய இடம்பெயர்வுகளும் புலப்பெயர்வுகளும் வந்தன. கிராமங்கள் வேரைப் பிடுங்கிக் கொண்டு ஓடத் தொடங்கின. மரணம் வாழ்க்கையை விடவும் நிச்சயமானது போலத் தோன்றியது. மனிதர்கள் பதுங்கு குழிக்கும் வீட்டுக்கும் இடையில் இரண்டாகக் கிழிபடத் தொடங்கினார்கள். வீடு அதன் அர்த்தத்தை இழந்தது. குடும்பங்கள் குலைந்தன. கிராமங்களும் குலைந்தன.

போராட்டம் படிப்படியாக வளர்ச்சியடைந்தபோது இயக்கங்கள் சிவில் அமைப்புக்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன. கிராமங்கள் தோறும் கீழிருந்து மேல் நோக்கி தன்னியல்பாக வளர்ச்சிபெற்றிருந்த சிவில் அமைப்புக்கள் யாவும் இயக்கங்களின் அரசியல் பிரிவின் கீழ் மேலிருந்து கீழ் நோக்கி கட்டுப்படுத்தப்படும் ஓரரசியற்சூழல் தோன்றியது. தமிழ்ச் சமூகம் மிக வேகமாக இராணுவமயப்பட்டது. குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் 1986 ஆம் ஆண்டு வசந்தகாலத்தின் பின்னிருந்து தனிப்பெரும் இயக்கமாக வளர்ச்சி பெற்றது. தனது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அந்த இயக்கம் ஒரு நடைமுறை அரசையும் கட்டியெழுப்பியது. இந்நடைமுறை அரசானது குலைக்கப்பட்டிருந்த சமூக அமைப்பை ஒரு புதிய ஒழுங்கின் கீழ் மீளக் கட்டியெழுப்பியது. ஆனால் 2009 மேயோடு அப் புதிய ஒழுங்கும் குலைக்கப்பட்டுவிட்டது. அதன் பின் குலைந்தவை குலைந்தவைகளாகவே காணப்படுகின்றன. இத்தகையதோர் பின்னணியில் குலைக்கப்பட்டவற்றை அப்படியே தொடர்ந்தும் குலைக்கப்பட்டவைகளாகவே பேணுவதன் மூலம்தான் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் தோல்வியுற்றவர்களாக வைத்திருக்கலாம் என்று தென்னிலங்கையில் உள்ள சிங்களக் கடும்போக்காளர்கள் நம்புவதாக வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனும் கூறுகிறார். இவைதான் கடந்த ஆறு ஆண்டுகளாக தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகளை எதிர்கொண்டு குலைந்தவற்றை மீள ஒழுங்குபடுத்தி ஒரு புதிய ஒழுங்கை கட்டி எழுப்பத் தேவையான அரசியல் தரிசனமும் திட சித்தமும் செயற்பாட்டு ஒழுக்கமும் கூட்டமைப்பிடம் இருந்ததா? குலைந்தவை குலைந்தவைகளாகவே இருப்பதைத் தான் எதிர்த்தரப்பு விரும்புகின்றது என்பதை அனைத்துலகின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் அப்பால் குலைக்கப்பட்டிருப்பவற்றை மீளக் கட்டி எழுப்புவதற்கான ஒரு உள்ளூர் பொறிமுறை குறித்து கடந்த ஆறு ஆண்டுகளில் சிந்திக்கப்பட்டதா?

ஆட்சி மாற்றத்திற்கு முன்புவரை ஓரளவுக்கு எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்த ஒரு கட்சியானது மேற்சொன்ன உள்ளகப் பொறிமுறை ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் தடையாகக் காணப்பட்டது என்ற ஒரு விளக்கத்தைக் கூறக்கூடும். ஆனால் எல்லாவற்றுக்கும் அரசாங்கம்தான் காரணம் என்று கூறுவது மட்டும் எதிர்ப்பு அரசியல் ஆகாது. மாறாக சொந்தப் பாதுகாப்பு கவசங்களைக் கட்டி எழுப்புதல் என்பதை ஒரு அசியல் இயக்கமாக அல்லது செயற்பாட்டு இயக்கமாக முன்னெடுக்க கூட்டமைப்பால் ஏன் முடியாது போயிற்று? ஒரு புறம் எதிர்ப்பு அரசியலைச் செய்து கொண்டு இன்னொரு புறம் அரசாங்கத்தால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளையும் முன்னுரிமைகளையும் அனுபவித்தபடி குறிப்பாக மெய்ப் பாதுகாவலர்களை தம்மோடு வைத்துக்கொண்டு தமது சமூகத்திற்கான சொந்தப் பாதுகாப்பு கவசங்களைக் குறித்து அவர்களால் சிந்திக்க முடியவில்லையா?

அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்காக சிறைச்சாலைக்குச் சென்ற தமிழ் அரசியல்வாதிகளில் எவரும் அரசியல் கைதிகளாக சிறைச்சாலைக்குச் செல்லும் அளவிற்கு ஏன் றிஸ்க் எடுக்கவில்லை?

தமிழ் அரசியல்வாதிகள் தனித்தனியாக புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து நிதி உதவிகளைப் பெற்று இங்கே உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவற்றை பொருளாகவும் பணமாகவும் வழங்கி வருகிறார்கள். இது கூட ஒரு தற்காலிகச் செய்முறைதான். புலம்பெயர்ந்த தமிழர்களைக் கொடையாளிகளாகவும் தாயகத்தில் இருப்பவர்களைப் பயனாளிகளாகவும் பேணிவரும் இப்பொறிமுறையானது உடனடிக்கு உதவலாம். ஆனால் இதைவிடப் பொருத்தமான நீண்ட எதிர்கால நோக்கிலான வேறு பொறிமுறைகள் குறித்து நம்பிக்கையூட்டும் உரையாடல்கள் எதையும் கடந்த ஆறு ஆண்டுகளில் காண முடியவில்லை.

வடமாகாணசபையை வென்றெடுத்த போது ஓர் அரை இணக்க அரசியலுக்குப் போக கூட்டமைப்பு முற்பட்டது. ஆனால் ராஜபக்ஷ அரசாங்கம் அதற்கு இடம்கொடுக்கவில்லை. அதில் ஏற்பட்ட படிப்பினைகள் ஏமாற்றங்கள் விரக்தி என்பவற்றின் விளைவாகவே விக்கினேஸ்வரன் இப்போதிருக்கும் நிலைப்பாட்டை வந்தடைந்தார் என கருதவும் முடிவும். அதாவது புலிகள் இயக்கத்தின் சரிவுக்குப் பின் தமிழ் மிதவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு இணக்க அரசியல் முயற்சியும் தோற்கடிப்பட்டதன் விளைவாகவே விக்கினேஸ்வரன் இப்படியெல்லாம் பேசுகிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா? ஆனால் இங்கேயும் சில இடறல்கள் உண்டு. ஒரு புறம் முதலமைச்சர் அரசாங்கத்தை அல்லது ரணில் விக்கிரமசிங்கவை சாடுகிறார். ஆனால் இன்னொருபுறம் அவருக்குக் கீழே உள்ள சில அமைச்சர்களோ தங்களுடைய அமைச்சின் செயற்பாடுகளுக்குப் பெரிய தடைகள் எதுவும் இல்லை என்று கூறுகிறார்கள். தங்களுக்கு இருக்கக் கூடிய வரையறுக்கப்பட்ட வளங்களுக்குள் தாம் அதிகம் சாதித்திருப்பதாக பட்டியலிடுகிறார்கள். ஆயின் இதில் ஏதும் உள்ளோட்டங்கள் உண்டா?

இதுதான் நிலைமை. கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழ் மக்களின் வாழ்வில் ஏற்பட்டிருக்கக் கூடிய பெரிய மாற்றங்கள் எவையும் தமிழ் அரசியல்வாதிகளால் போராடிப் பெறப்பட்டவை அல்ல. மாறாக, போர்ப்பயம் தணிந்துபோகும் ஒரு அரசியல் சூழலில் அனைத்துலக நிர்ப்பந்தங்களை எதிர்கொள்வதற்காக இலங்கை அரசாங்கங்கள் மேற்கொண்ட தற்காப்பு நடவடிக்கைகளின் விளைவுகளே அவை. அதாவது நடந்து முடிந்த ஒரு நாடாளுமன்றக் காலகட்டத்துள் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளில் முக்கியமானவற்றைத் தீர்க்க முடியவில்லை.

இனி நிரந்தரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதாவது இனப்பிரச்சினை தீர்வில் கூட்டமைப்பானது நடந்து முடிந்த நாடாளுமன்றக் காலகட்டத்தில் எதைச் சாதித்திருக்கிறது என்று பார்க்கலாம்.

எல்லாவற்றுக்கும் முதலில், கூட்டமைப்பிடம் ஒரு கேள்வி. இனப்பிரச்சினைக்கான உங்களுடைய இறுதித் தீர்வு என்ன?

சில ஆண்டுகளுக்கு முன் சம்பந்தர் இந்தியாவில் வைத்து வழங்கிய ஒரு பேட்டியில் வடக்குக் கிழக்கு இணைந்த சமஸ்டி பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அதே சமயம் இவ்வாண்டு மோடி இலங்கைக்கு வந்த போது கூட்டமைப்பானது அவரிடம் தாங்கள் இலங்கையைப் பிரிக்கும் ஒரு தீர்வைக் கேட்கவில்லை என்பதை அழுத்திக் கூறியதாகச் சொல்லப்படுகின்றது. ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வையே தாங்கள் கேட்பதாகவும் ஆனால் அத்தீர்வானது தமிழ் மக்களின் ஐக்கியத்தைச் சிதைக்காமல் இருப்பதை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டதாகவும் கூறப்படுகின்றது. இங்கு தமிழ் மக்களின் ஐக்கியம் என்ற கூறப்பட்டது வடக்குக் கிழக்கு இணைப்பைத்தான். இக்கோரிக்கையை சம்பந்தர் மோடியிடம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் திரும்பத் திரும்ப அழுத்திக் கூறியதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் வடக்குக் கிழக்கு இணைந்த ஒரு சமஸ்டி அமைப்பு என்ற விதமாகவே கூட்டமைப்பினர் கூறிவருகிறார்கள். ஒற்றையாட்சிக்குள் இலங்கைக்கேயான ஒரு சமஸ்டி கட்டமைப்பை எப்படி உருவாக்கலாம் என்பது குறித்த ஆழமான உரையாடல்கள் எதையும் அவர்கள் இதுவரையிலும் பகிரங்கமாக வைத்துக்கொள்ளவில்லை.

மேலும் அப்படி ஒரு தீர்வை பெறுவதற்குரிய மூலோபாயத்திலும் அவர்களிடம் துலக்கமான வழிவரைபடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஜனாதிபதித் தேர்தலின் போது இந்தியாவோடும் மேற்குநாடுகளோடும் பேரம் பேசக் கிடைத்த சந்தர்ப்பதை அவர்கள் பயன்படுத்தவில்லை. இப்பொழுதும் நாடாளுமன்றத் தேர்தல் வரையிலும் அவர்கள் பகிரங்கப் பேரம் எதையும் வைத்துக்கொள்ள தயாரில்லை என்றே தோன்றுகின்றது. ஆனால் தேர்தலுக்குப் பின் மகிந்தவுக்கு எதிரான அணியானது ஆட்சியமைப்பதற்காக தங்களிடம் தங்கியிருக்க வேண்டி வரும் என்று கூட்டமைப்பு நம்புகின்றது. அவ்வாறு புதிய அரசாங்கமானது கூட்டமைப்பில் தங்கியிருக்கும் போது அது கூட்டமைப்பின் பேரம் பேசும் சக்தியை உச்சத்தில் வைத்திருக்கும் என்று அவர்கள் திட்டமிடுவதாகத் தெரிகிறது.

ஆனால் அங்கேயும் பிரச்சினைகள் வரும். முதலாவதாக பொது எதிரணியின் பங்காளியாக இருக்கும் ஜாதிக ஹெல உறுமயவைச் சமாளிக்க வேண்டியிருக்கும். அடுத்ததாக மகிந்த அணி ஏற்படுத்தக் கூடிய அழுத்தங்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். இவ்வாறான அழுத்தங்களைத் தாண்டி வடக்குகிழக்கு இணைந்த ஒரு சமஸ்டியை உருவாக்க முடியுமா? அதற்கு வெளிச்சக்திகளின் அழுத்தங்கள் தேவையில்லையா? குறிப்பாக இந்தியா 13 ஆவது திருத்தத்தைத் தாண்டிப்போகும் முயற்சி-களுக்குப் பக்கபலமாக இருக்குமா? ஆட்சி மாற்றத்தைப் பாதுகாக்க விளையும் மேற்கு நாடுகள் மாற்றத்தின் ஸ்திரத் தன்மையைக் குலைக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு தருமா?

மகிந்த இப்பொழுதும் பலமாக இருக்கிறார் என்பதே கூட்டமைப்பின் பேரம் பேசும் சக்தியைத் தீர்மானிக்கிறது. அதே சமயம் ஒரு தீர்வைப் பற்றி உரையாடும் போது மகிந்த பலமடையக் கூடாது என்பதைக் காரணம் காட்டியே தீர்வை வீரியமிழக்கச் செய்யவோ அல்லது ஒத்தி வைக்கவோ புதிய அரசாங்கம் முயற்சித்தால் கூட்டமைப்பு என்ன செய்யும்?

உண்மையில் இவையெல்லாம் எதிர்காலத்தில் கேட்கப்பட வேண்டிய கேள்விகளே. இக்கட்டுரையின் குவிமையமானது கடந்த ஐந்தாண்டுகளுக்குள் கூட்டமைப்பின் அடைவுகளை தொகுத்தாய்வதே. அடுத்த நாடாளுமன்றத்தில் அவர்கள் என்ன செய்யக் கூடும் என்பதை அனுமானிப்பதற்கு கடந்த நாடாளுமன்றத்தில் அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதே தமிழ் மக்களுக்குள்ள ஒரே அளவுகோலாகும். அந்த அளவுகோலின் அடிப்படையில் இக்கட்டுரையானது கூட்டமைப்பை நோக்கி பின்வரும் அடிப்படைக் கேள்விகளை எழுப்புகிறது.

**1. கடந்த ஐந்தண்டுகளில் தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளில் உங்களால் தீர்க்க முடிந்தவை எவை எவை?**

**2. தீர்க்க முடியாதவை எவை எவை?**

**3. ஏன் அவற்றைத் தீர்க்க முடியவில்லை?**

**4. குலைக்கப்பட்டிருக்கும் சமூக அமைப்பை மீளக் கட்டி எழுப்புவதற்-குரிய செயற்திட்டங்கள் எவை பற்றியும் ஏன் இதுவரையிலும் சிந்திக்கப்பட-வில்லை?**

**5. கூட்டுக் காயங்களுக்கும், கூட்டுமனவடுக்களுக்கும் உரிய கூட்டுச் சிகிச்சையாக அமையவல்ல கூட்டுபொறிமுறைகள் குறித்து ஏன் இதுவரையிலும் சிந்திக்கப்பட-வில்லை?**

**6. இறந்தவர்களையும் காணாமல் போனவர்களையும் ஏன் இதுவரையிலும் எண்ணிக் கணக்கெடுக்க முடியவில்லை?**

**7. அரசியல் கைதிகளை ஏன் இதுவரையிலும் விடுவிக்க முடியவில்லை?**

**8. இனப்பிரச்சினைக்கு உங்களுடைய இறுதித் தீர்வு என்ன?**

**9. அத்தீர்வை அடைவதற்கான உங்களுடைய வழிவரைபடம் என்ன?**

**10. அத்தீர்வை அடைவதற்காக கடந்த ஐந்து ஆண்டுகளில் நீங்கள் எதிர்கொண்ட இடர்கள் (றிஸ்க்) எத்தனை?**

இக்கட்டுரையானது சரத்பொன்சேகா போன்றவர்களின் அரசியலை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் மகிந்தவுக்கு எதிராக அவர் றிஸ்க் எடுத்தார். சிறையும் போனார். அவரைப் போலவே சந்திரிகாவும் மைத்திரியும் கூட றிஸ்க் எடுத்தார்கள். மைத்திரி ஜனாதிபதித் தேர்தல் அன்று ஒரு தென்னந் தோட்டத்துக்குள் ஒளித்திருந்தார். கடந்த ஐந்தாண்டுகளுக்குள் சிங்களத் தலைவர்கள் எதிர்கொண்ட ஆகப் பெரிய ஆபத்துக்கள் அவை.

இவர்களைப் போல நீங்களும் உங்களுடைய அரசியல் இலக்குகளுக்காக **உங்களுக்கு வாக்களித்த மக்களுக்காக இதுவரையிலும் எத்தகைய இடர்களை எதிர்கொண்டீர்கள்?**

- www.globaltamilnews.net -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் தெரிவு யார்????

- -முத்துக்குமார்- -
- www.ithunamthesam.com -

பாராளுமன்றத் தேர்தலுக்குத் திகதி குறித்தாகி விட்டது. வருமா? வராதா? எனப் பல்வேறு விவாதங்களும் இடம்பெற்ற சூழலில் தேர்தல் வந்துவிட்டது. மைத்திரி அரசாங்கத்திற்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத நிலையில் தேர்தல் நடத்துவதைத் தவிர வேறு தெரிவு மைத்திரிக்கு இருக்கவில்லை. மகிந்தரின் மீள்எழுச்சியை பலவீனப்படுத்துவதற்காகத் தான் மைத்திரி தேர்தலைத் தொடர்ச்சியாகத் தள்ளிப் போட்டார். ஆனால் அவர்நினைத்ததற்கு மாறாக மகிந்தர் ஒவ்வொரு நாளும் பலம் பெற்று வருகையில் மேலும் தாமதிப்பது பயன்தராது எனத் தெரிந்து கொண்டார்.

தென் இலங்கையில் மும்முனைப் போட்டி என்பது உறுதியாகிவிட்டது. மகிந்தர் அணி எவ்வளவோ முயன்றும் பிரதமர் வேட்பாளர் விடயத்தில் விட்டுக் கொடுக்க மைத்திரி தயாராக இருக்கவில்லை. அவருக்குப் பின்னால் நின்று வழி நடத்தும் இந்திய – அமெரிக்க கூட்டும் ஒருபோதும் இதனை அனுமதிக்கப் போவதில்லை.



ஒருபக்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறவினைப் பேணவேண்டிய கட்டாயநிலை. மறுபக்கத்தில் பாரம்பரியமாகவே ஐக்கிய தேசியக் கட்சியுடன் பகைமை கொள்ளும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தலைமைதாங்க வேண்டிய நிலை. இந்த இரட்டை நிலைப்பாடு காரணமாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியை தனது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க மைத்திரியினால் முடியவில்லை. நோர்வேயில் இருக்கும் புலம்பெயர் ஆய்வாளர் கலாநிதி சர்வேந்திரா இதனை இரட்டைவிசுவாசம் என அடையாளப்படுத்துகின்றார்.

தமிழ்ப் பிரதேசங்களிலும் இந்தத் தடைவ பலமுனைப் போட்டி நிலவுகின்றது. வெவ்வேறு மாவட்டங்களில் வெவ்வேறு போட்டிநிலை இருந்தாலும் வடகிழக்கு முழுவதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழ்த் தேசியமக்கள் முன்னணிக்கும் இடையே தான் போட்டி இருக்கின்றது. இந்த இடத்தில்தான் மக்களின் தெரிவு எதுவாக இருக்கவேண்டும் என்ற பலமான கேள்வி எழுகின்றது.
பெரிய, சிறிய போட்டியாளர்கள் அனைத்தையும் இணைத்துப் பார்க்கின்ற போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்பன போட்டியில் பங்குபற்றுபவையாக உள்ளன. இவற்றில் தமிழ் மக்களின் தெரிவு எதுவாக இருக்க வேண்டும் என்பதுதான் இங்கு மிகப் பெரிய விவாதப் பொருள்.

இந்த விவாதத்திற்குப் பதில் தமிழ்த் தேசிய அரசியல் தான். எந்தக் கட்சி தமிழ்த் தேசிய அரசியலை பிரக்ஞை பூர்வமாக முன்னெடுக்க முயல்கின்றதோ அதனைத்தான் தமிழ் மக்கள் தெரிவு செய்யவேண்டும். தமிழ்த் தேசிய அரசியல் என வருகின்ற போது இலக்கும் அதற்கு அடிப்படையான கொள்கைகளும், இலக்கினை நோக்கிய செயற்பாடுகளும் முக்கியமானவையாகும்.

இலக்கு என வரும் போது தமிழ்த் தேசிய அரசியலின் இலக்கு யாது? என்ற கேள்வி எழுகின்றது. இங்கு தான் இனப்பிரச்சினை என்றால் என்ன? அதற்கான தீர்வு எவ்வாறானதாக இருக்கவேண்டும் என்பவை பற்றிய ஆய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. தமிழ் மக்கள் தமக்கென தனியான நிலம், தனியான பொருளாதாரம், வளமான மொழி, தனியான கலாசாரம் என்கின்ற அடையாளங்களுடன் ஒரு தமிழ்த் தேசமாக எழுச்சியடைந்துள்ளனர்.

இந்த எழுச்சியை தடுப்பதற்காகத் தமிழ் மக்களின் அடையாளங்களை, அவர்களைத் தேசமாகத் தாங்கும் தூண்களை அழிக்கும் முயற்சியில் சிங்கள அரசு ஈடுபட்டு வருகின்றது. இந்த அழிக்கும் முயற்சிகளுக்கும் மறுபக்கத்தில் அதனைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் முயற்சிகளுக்கும் இடையிலான விவகாரத்தையே இனப்பிரச்சினை என்கின்றோம். இந்த இனப்பிரச்சினை தமிழ்த் தேசம் திட்டமிட்டு அழிக்கப்படுவதனால் ஏற்பட்ட பிரச்சினையே. இனப்பிரச்சினைக்கான தீர்வு அழிவிலிருந்து நிரந்தரமாகப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை மையப்படுத்தியதாகவே இருக்க வேண்டும்.

இந்த நிரந்தரப் பாதுகாப்பு தேசத்தை அங்கீகரித்தல் மூலமே சாத்தியப்படும். அதிகார விவகாரம் எல்லாம் இரண்டாம் பட்சமான விடயம். தேச அங்கீகாரமே முதன்மையானது. தேச அங்கீகாரம் என்பது தனிநாடாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஒரு நாட்டுக்குள்ளேயே பரஸ்பர உடன்பாட்டுடன் தேசஅங்கீகாரத்துடன் வாழலாம். தேசங்கள் இணைந்து ஒரு நாட்டை உருவாக்குவதன் மூலம் இவற்றைச் சாத்தியப்படுத்தலாம். இந்த தேச அங்கீகாரத்தைப் பெறும் அரசியலுக்கு அதனை முன்னெடுக்கின்ற அமைப்பு இந்த இலக்கில் பிரக்ஞை பூர்வமானதாகவும் சுயாதீனமானதாகவும் இருக்கவேண்டும். சுயாதீனம் இல்லாமல் பிரக்ஞைபூர்வ அரசியலை ஒரு போதும் முன்னெடுக்கமுடியாது.

தமிழ்ப் பிரதேசங்களில் போட்டியிடும் கட்சிகளில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, பிள்ளையானின் விடுதலைப் புலிகள் மக்கள் கட்சி என்பவை தமிழ்த் தேசிய அரசியலுக்கு நேரடியாகவே துரோகமிழைத்த கட்சிகள். அவற்றை மக்கள் எப்போதோ ஒதுக்கிவிட்டனர். அவற்றை விட்டுவிடுவோம். ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசத்தை ஒடுக்கும் தென்னிலங்கைக் கட்சி அதனையும் கவனத்தில் எடுக்கத் தேவையில்லை.

மக்களின் தெரிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழ்த் தேசியமக்கள் முன்னணிக்கும் இடையிலேயே உள்ளது. இங்குதான் மக்களுக்கு மேலே கூறியது போலத் தமிழ்த் தேசிய அரசியல் பற்றிய புரிதல் அவசியமாகின்றது. புலிகளினால் ஆதரிக்கப்பட்ட கட்சி என்ற வகையிலும் ஐக்கியப்பட்ட கட்சி என்ற வகையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பற்றிய ஒரு மாயை மக்களிடம் இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2009 ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தேசிய அரசியலைக் கைவிட்டுவிட்டது. இன்று சிங்கள அரசியலுக்குள் தமிழ்த் தேசிய அரசியலைகக் கரைக்கும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது. 13ஆவது திருத்தத்தை அரசியல் தீர்வாக ஏற்றுக் கொண்டமை, வடக்கு- கிழக்குப் பிரிப்பினை ஏற்றமை, சிங்கக் கொடியை ஒடுக்கு முறையாளரான ரணிலுடன் சேர்ந்து உயர்த்திப் பிடித்தமை, சுதந்திர தினத்தில் பங்குபற்றியமை, மைத்திரி அரசின் பங்காளிக் கட்சியாகி தேசிய நிறைவேற்றுச் சபையில் அங்கம் வகித்தமை, சர்வதேச விசாரணையை நிராகரித்து உள்ளக விசாரணையை ஏற்றுக் கொண்டமை என அனைத்து நடவடிக்கைகளும் சிங்கள மேலாதிக்க அரசியலுக்குள் தமிழ்த் தேசிய அரசியலைக் கரைக்கும் செயற்பாடுகளே.

கூட்டமைப்பின் இத்தொடர்ச்சியான செயற்பாடுகள் தமிழ்த் தேசிய அரசியலை செங்குத்தாகக் கீழிறக்குகின்றன. இந்தக் கீழிறக்குகையை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். இன்று தமிழ்த் தேசிய அரசியலை மேல் நோக்கி நகர்த்துவதல்ல பிரச்சினை. கீழ்நோக்கி செங்குத்தாக சரிந்து வீழ்வதை எவ்வாறு தடுப்பதென்பது தான் பிரச்சினை. இதற்கான ஒரு தடுப்புக் கட்டை தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

கடந்தகால ஆதரவு, விசுவாசம் போன்ற சொற்களின் மூலம் தேசத்தை இல்லாமல் செய்வதா என சற்று விழிப்புணர்வுடன் தற்கால கள நிலைமையினை புரிதலுடன் எதிர்கொள்வதற்கு மக்கள் தாம் சிந்தித்து மாற்றம் ஒன்றை நிலைநாட்டும் நோக்கில் செயல்பட வேண்டிய மிக முக்கியமான தேர்தல் இப்பொதுத்தேர்தல் ஆகும். இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் தெரிவு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாகவே இருக்க வேண்டும். இந்தத் தடுப்புக் கட்டை உருவாக்கப்படாவிட்டால் தமிழ்த் தேசம் அழிந்து போவதை கடவுளாலும் தடுக்க முடியாது. இந்தத் தேர்தல் தமிழ்த் தேசிய அரசியலை அழியவிடுவதா? உயிர்ப்புடன் வைத்திருப்பதா? என்பதைத் தீர்மானிக்கும் ஒருதேர்தலாகும்.

## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

**சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட இரு தேசம் ஒரே நாடு என்ற எமது கொள்கையை அடைய எமது கட்சியைக் கிராமம் தோறும் நிறுவி, புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளையும் தமிழக உறவுகளையும் இணைத்து போராடுவோம் – இவ்வாறே தீர்மானம் நிறைவேற்றியுள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**

1. தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட, கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பெரும் இன அழிப்புக்கு எதிராகச் சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்தக்கோரி, எமது செயற்பாடுகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெருமளவில் முன்னெடுத்தல்.
2. காணாமற் போனர்கள், அரசியல் கைதிகள் என்பவர்களின் விடுதலையை வலியுறுத்தியும், நில அபகரிப்புக்கு எதிராகவும் பன்முகப்படுத்தப்பட்ட போராட்டங்களை முன்னெடுத்தல்.
3. வடக்குகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியப் பேரவையை நிறுவி, தமிழ் மக்களை நிர்கிக்கும் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குதல்.
4. போரினால் பாதிக்கப்பட்ட அவயவங்களை இழந்தவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பப் போராடுதல்.
5. புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பேராதரவுடன் வடக்கு கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு எமக்கான பொருளாதாரக் கொள்கையை வகுத்துச் செயற்படுதல்.
6. எமக்கான கல்விக் கொள்கை, விளையாட்டுக் கொள்கை, கலை, பண்பாட்டுக் கொள்கை, சுகாதாரக் கொள்கை என்பவற்றை உருவாக்கி முன்னெடுத்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆலடி விநாயகர் ஆலயம்


**அமைவிடம்** :- திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் அருகே அதன் ஈசானமூலையில் அமைந்துள்ளது. ஆலயமுன்றலில் நின்றவாறு ஈழத்தில் மிகப்பிரசித்தி பெற்ற பழம்பெரும் ஆலயமாகிய திருக்கோணேசர் ஆலயத்தினை அடியவர்கள் தரிசிக்கலாம் என்பது சிறப்பம்சமாகும்.

**வரலாறு** - சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் மாத்தளையிலிருந்து வியாபார நிமிர்த்தம் வந்தவர்கள் ஐயனார் கேணியடியில் வைத்து வழிபட்டுவந்த கேணியடிப்பிள்ளையாரை எடுத்து வந்து தற்போது ஆலடி விநாயகர் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் பிரதிஷ்டை செய்து 1905 இல் மடாலயம் அமைத்து வழிபட்டு வந்திருக்கிறார்கள்.

**சிறப்பம்சம்** - கிழக்கு மாகாணத்தில் இவ்வாலயத்தில்தான் முதன்முதலாக பஞ்சமுகவிநாயகர் பிரதி'டை செய்யப்பட்டுள்ளார்.

**திருவிழாக்கள்**- சித்திராபூரணையைத் தீர்த்ததினமாகக் கொண்டு பத்து நாள் அலங்கார உற்சவமும், மாதசதுர்த்தி, விநாயகவிரதம், கஜமுகாசூரசம்காரம், சர்வாலயதீபம், திருவெம்பாவை, சுவர்க்கவாயில் ஏகாதசி, தைப்பூசம் முதலியனவும் நைமித்திய பூஜை வழிபாடுகளாக நடைபெற்று வருகின்றன.

மார்கழி மாதம் முழுவதும் திருப்பள்ளியெழுச்சிப் பூசையும், சங்காபிஷேகமும் இங்கு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சித்திராபூரணையன்று ஆலடி விநாயகப் பெருமான் கடற்தீர்த்தம் ஆடச்செல்வார்.







வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

# திருகோணமலை சனீஸ்வரன் ஆலயம்

சனீஸ்வரன், ஒன்பது நவக்கிரகங்களில் ஒருவர். (கிரகங்கள் என்றால் பிடிப்பது என்று பொருள்) பெரும்பாலான பக்தர்களால் பயத்துடன் அணுகப்படும் கடவுள். அதே வேளை துன்பம் நேர்கையில் பக்தர்களால் நிறைய அர்ச்சிக்கப்படும் கடவுளும் இவராகத்தான் இருக்க வேண்டும்.

திருகோணமலையில் நிறைய ஆலயங்கள் இருந்தாலும் சனீஸ்வரனுக்கு தனியாக அமைக்கப்பட்டிருக்கும் ஆலயம் இதுவொன்றுதான். இலங்கையிலுள்ள ஒரேயொரு சனீவரன் ஆலயம் இதுவென நினைக்கிறேன். இந்தியாவிலுள்ள சனீஸ்வரனை பிரத்தியோ'கமாக வழிபடும் தலம் திருநள்ளாறு.

நளன் சனிபகவானிடமிருந்து விடுபட்ட இடமாக கருதப்படும் இங்கு சனீஸ்வரனுக்குத் தனியான சன்னிதி உண்டு.

சனீஸ்வரன் ஆலயம் திருகோணமலை நகரத்தின் மடத்தடி என்றழைக்கப்படும் பிரதேசத்தில் ஸ்ரீ கிருஸ்ணண் கோயிலுக்கு எதிரே அமைந்துள்ளது. இவ்வாலயம் 1885 ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டது.

வழமையாக ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விசேட வழிபாடு நடைபெறும். இவ்வாலயத்தில் புரட்டாதி மாதத்தில் பெருந்திரளான பக்தர்களுடன் புரட்டாதிச் சனீஸ்வர விரதம் சிறப்பாக அனுஸ்டிக்கப்படும். இவ்வாலய தலவிருட்சமாக தாண்டி மரம் கொள்ளப்படுகிறது.



பாலா. சங்குப்பிள்ளை

# சொன்னால் தான் காதலா ??

## குட்டிக் கதை

மதளா அவசர அவசரமாக பாடசாலைக்கு புறப்பட ஆயத்தமானாள். இரவு சற்று அதிகமான வேலை இருந்த படியினால் அவள் நேரம் சென்றே படுக்கைக்கு சென்றாள். மதளா ஒரு பாடசாலை ஆசிரியை. அன்று பாடசாலை பரீட்சைகள் ஆரம்பமாவதால் சற்று நேரத்துடன் புறப்பட நினைத்தாள்.

அவள் தோல்பை, புத்தகங்களுடன் வெளியே வந்த போது தபால்காரர் அவளை நோக்கி வந்தார். கடிதத்தை அவளிடம் கொடுத்து விட்டு நடந்தார். மதளா விலாசத்தை பார்த்தாள். வசந்தி எழுதியிருந்தாள். அவள் மறுபடியும் உள்ளே சென்றாள். கடிதத்தை பரபரப்புடன் வாசித்தாள்.

''அன்பின் மதளா நீ இந்தக் கடிதத்தை படிக்கும் போது நான் வெளிநாட்டில் இருப்பேன். எனது அக்கா வெளிநாட்டில் திருமணம் செய்து அங்கேயே இருப்பது உனக்குத் தெரியும். அவளிடம் சென்று விட்டேன் மதளா. நான் மாதவனை உயிருக்குயிராக நேசித்தேன்.

ஆனால் அவர் எப்போது உன்னை விரும்புகிறார் என்று அறிந்தேனோ அப்போதே நான் என்னை தேற்றிக் கொண்டேன். அவர் மேல் நான் கொண்ட காதலை என்னால் வெளிப்படுத்த முடியவில்லை. ஆரம்பத்தில் அவர் என்னுடன் பழகிய போதே நான் அவரை நேசிக்க தொடங்கினேன். ஆனால் சிறுவயதிலிருந்தே உள்ளத்தில் உள்ளதை வெளியில் சொல்லும் பழக்கம் இல்லாததால் இதையும் என்னால் சொல்ல முடியவில்லை.

காதல் கொண்ட வாழ்வில் முட்கள் இருக்கும் தான். காதல் இல்லாத வாழ்வில் ரோஜாக்களே இருக்காது. இனி என் வாழ்வில் வசந்தமே இல்லை. என் வாழ் நாள் முழுவதையும் ஏழை, எளியவர்களுக்கு சேவை செய்வதிலே கழிக்கப் போகிறேன். என் தோழியான உன் வாழ்வில் வசந்தம் வீசி வாழ்நாள் முழுவதும் சந்தோசம் பரவ வாழ்த்துகிறேன்.''

கடிதத்தை வாசித்து முடித்த மதளாவின் கண்களில் கண்ணீர் பெருகி, கடிதத்தை நனைத்தது. அவளால் வாய்விட்டு அழ முடியவில்லை. மதளா, மாதவன், வசந்தி மூவரும் ஒரே பாடசாலையில் ஒன்றாக ஆசிரியர் தொழில் செய்பவர்கள். கடந்த இரண்டு மூன்று வாரங்களாக வசந்தி பாடசாலைக்கு வரவில்லை.

மதளா அப்படியே இருக்கையில் சாய்ந்தாள். அவளுக்கு தலை சுற்றியது.

வசந்தி நீ அவசரப்பட்டுட்டியேடி... மாதவன் உன்னைத் தானேடி நேசித்தார். நீ அவரை விரும்புகிறாயா இல்லையான்னுறது அவருக்குத் தெரியாம போனதால் தான் என்னை நேசிக்கிற மாதிரி நடிச்சாரே. நான் வேணாம்னு எவ்வளவோ சொன்னேன். ஆனா உன் வாய் திறக்கணும்னு அவர் மன்றாடி என்னை சம்மதிக்க வச்சாரு. ஆரம்பத்துல உன் முன்னாடி நானும் நடிச்சேன். உண்மையை உன்னிடம் சொல்ல நினைச்சு சொல்லாமலே இருந்திட்டேன். ஆனா எனக்கும் மன சாட்சின்னு இருக்குத்தானே. என்னோட தவறை உணர்ந்து உன்னிடம் உண்மையெல்லாம் சொல்லிட நினைச்சப்ப நீ ரெண்டு மூணு வாரமா வரலை. இப்ப எதையுமே தெரிஞ்சுக்காம அவசரப்பட்டு போயிட்டியேடி...

காட்டிலே எரித்த நிலாவாலும் காலையிலே பெய்த மழையாலும் பிரயோசனமில்லன்னு சொல்லுவாங்க. உன்னோட காதலும் அப்படியாயிடுச்சே. சொல்லாம உன் மனசிலையே இருந்த காதலை கடைசி வரைக்கும் வெளிப்படுத்தாம எனக்கு உதவி செய்யிறதா நினைச்சி உன் தலையிலே நீயே மண்ணையள்ளி போட்டுக்கிட்டியே... நான் என்ன செய்வேன்.. சரியான சமயத்துல உன் கிட்டே உண்மையை சொல்லாம மறைச்சது என் குற்றம் தான். ஆனா அது இவ்வளவு பெரிய விபரீதத்தை உண்டாக்கும்னு நான் சத்தியமா நினைக்கவேயில்லை...

மதளா குலுங்கி குலுங்கி அழுதாள். ஆனால் தலைக்கு மேல் வெள்ளம் போய் விட்டது. இளமை என்பது மிக இனிமையான பருவம்.ஆனால் முதுமையில் தான் அது புரிகிறது. என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிறார். அதே போல தான் காதலும். அது ஓர் அபூர்வ கனி. கையில் கிடைக்கும் போது அலட்சியப்படுத்தி விடுகிறோம். அப்புறம் தான் அருமை தெரிகிறது. மதளா கண்களை துடைத்துக் கொண்டாள். இனி அழுது என்ன பயன்? இரண்டு பேரின் காதலும் இலவு காத்த கிளியின் கதையாக போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 61

# "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு"



(வி.என்.சந்திரகாந்தி)

இந்திய தமிழக அரசியலில், மக்களைக் கவர்வதற்காக அதிகம் பேசப்பட்ட வார்த்தை 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்பதாகும். இந்த பண்புகளை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் அல்லாமல், மக்களுக்கு தொண்டு செய்ய தெரிவு செய்யப்பட்ட தமது உறுப்பினர்கள் கடைப்பிடிப்பார்கள் என்ற வாக்குறுதியே அதிகம் தொனித்ததாக கொள்ள வேண்டும்.

தேர்தல் அண்மிக்கும் காலங்களில் கட்சிகள் அனைத்துமே மக்களைக் கவர்வதில் அதிக கவனம் செலுத்து-கின்றன. மக்களது வாக்குகளை பெற்று தாம் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்பதே அவர்களது முக்கிய நோக்கமாகும். ஒருமுறை தெரிவு செய்யப்பட்டவர்கள் பாராளுமன்றத்தின் ஆட்சிக்காலம் முடிவுறும் வரை மக்கள் பக்கம் திரும்பிப்பார்ப்பதில்லை.

ஒரு காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் சார் நன்மைகளுக்காக 'அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்' என்ற ஒரே ஒரு கட்சி இருந்தது. பிரபல சட்டத்தரணி ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் தலைமையின் கீழ் அந்த கட்சி தமிழர்களின் நன்மைக்காக பாராளுமன்றத்தில் உரத்துக் குரல் கொடுத்தது. சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் சரிசமமான அங்கத்துவம் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்பதே 'ஐம்பதுக்கு ஐம்பது' என்ற கோரிக்கையாக பின்னர் பிரபல்யம் அடைந்தது. உண்மையில் 'ஐம்பதுக்கு ஐம்பது' என்ற கோரிக்கை அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் இலங்கையில் இரு இனங்களும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்திருக்கும். 1958 முதலான பல இன வன்முறைகள் நடந்திருக்க வாய்ப்பிரு-ந்திருக்காது. யுத்தம் காரணமாக மூன்று தசாப்த காலங்கள் இடம் பெற்ற உயிரிழப்புக்கள், சொத்திழப்புக்கள் எதுவுமே சம்பவித்திருக்காது.

'அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்' கட்சிக்குள் ஏற்பட்ட பிளவு 'சமஷ்டிக் கட்சி' என்ற மற்றொரு கட்சியாக உருவெடுத்தது. பெரும் அரசியல்வாதியான எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அக்கட்சிக்கு தலைமை வகித்தார். 'சமஷ்டி' என்ற சொல்லின் வியாக்கியானத்தை பெரும்பான்மையான தமிழ் மக்கள் புரிந்து கொள்ள தவறியதால் தமிழ் பகுதிகளில் அக்கட்சி 'தமிழரசுக்கட்சி' என்ற பெயருடன் செயற்படத் தொடங்கியது. தமிழரசு என்ற சொல் மக்களை மிகவும் கவர்ந்தது. அதனாலேயே அக்கட்சி இன்றுவரை தமிழ் மக்கள் மத்தியில் அதிகம் பிரபல்யம் பெற்று விளங்கக்கூடியதாக உள்ளது. வடக்கு கிழக்கு பகுதிகளில் தொடர்ந்து பல வெற்றிகளை சம்பாதித்த கட்சியாக தமிழரசுக்கட்சி திகழ்கின்றது. மக்களின் நன்மைக்காக அக் கட்சி அகிம்சை வழியில் போராடியது. சிங்கள அரசியல் தலைமைகளுடன் தமிழ் மக்கள் சார்பில் பல பேச்சு வார்த்தைகளை நடாத்தியது. 'பண்டா – செல்வாஒப்பந்தம், 'டட்லி - செல்வா ஒப்பந்தம்' போன்றவை தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு ஓரளவாவது தீர்வைக்கொண்டு வருமென்ற நம்பிக்கை நட்சத்திரங்கள் உதயமாகும் தருணங்களில் அவற்றை பேரினவாதிகள் துவேஷக் கண்ணோட்டத்துடன் பெரும்பான்மை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி ஒப்பந்தங்களை நிறைவேறவிடாமல் தடுத்தனர். இப்படியான நடவடிக்கை-களுக்கு முன்னோடியாக திகழ்ந்தவர் திரு.ஜே.ஆர்.ஜெயவர்தன ஆவார். பெரும்பான்மை இன மக்களுக்கு துவேஷ உணர்வை ஊட்டிய ஒரு கல்விமானாக அவரைக் கணிக்க முடியும்.

'விடுதலைப் புலிகள்' இயக்கம் தோற்றம் பெற்றதானது பெரும்பான்மை இன மக்களுக்கும் அவர்களது அரசியல்வாதி-களுக்கும் பெரும் அச்ச உணர்வை உண்டு பண்ணியது. விடுதலைப் புலிகளின் தனிநாட்டு கோரிக்கையை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. அது ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை இனத் துவேஷிகளின் மாபெரும் சக்தியாக உருவாக்கியதுடன் இலங்கையில் சர்வாதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியையும் உருவாக்கியது.

அடுத்த பக்கமாக விடுதலைப் புலிகளின் பிளவு தமிழ் மக்களுக்கு பெரும் பாதிப்பை உண்டு பண்ணியதென்றே கூறவேண்டும். அந்த சவாலை உடைப்பதற்காக 'ஜே.ஆரின்' கட்டளை-ப்பிரகாரம் பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி தலைமையில் முன்னெடுக்கப்பட்ட தாக்குதல் திட்டமே வடமராட்சியில் 1987ல் இடம் பெற்ற 'ஒபரேஷன் லிபரேஷன்' ஆகும். பொலிகண்டி, நவிண்டில், கரணவாய் ஆகிய மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கூடாக மக்களுக்கு பெரும் அனர்த்தங்களையும் தமக்கு பெரும் இழப்புக்களையும் ஏற்படுத்திக் கொண்டு இராணுவம் பருத்தித்துறை வரை நகர்ந்தது. இளைஞர்கள் தமக்கு சேதம் உண்டாகாதபடியும் இராணுவ நகர்வை-யும் ஆகாய குண்டு தாக்குதல்களையும் சமாளித்தபடியும் வாபஸ் பெற்றனர். இந்திய சமாதானப்படை என்கின்ற பெயரில் இந்திய இராணுவம் வருவதற்கு வழி கோலியது ஜே.ஆரின் மூர்க்கத்தனமே! அதே சமயம் ராஜீவ்காந்தி அவர்களின் மூர்க்கத்தனம் விடுதலைப் புலிகளை ஓரம் கட்டியது. ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பு வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமை-த்தது.

ஜே.ஆரின் ஆட்சிக்காலம் முடிவடைந்து ஆர்.பிரேமதாச அவர்கள் ஜனாதிபதி-யாகியதும் அவர் ஒரு முடிவுக்கு வந்தார். இந்திய இராணுவத்தை எப்பாடுபட்டாவது அனுப்பிவிட்டால் பின்னர் 'எல்.ரீ.ரீ.ஈ'யை அடக்குவது பெரிய காரியமல்ல என்று எண்ணினார். எதிரிக்கு எதிரி நண்பன் என்பதற்கி-ணங்க இந்திய இராணுவத்தின் எதிரியாகிய 'எல்.ரீ.ரீ.ஈ'யுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டதன் மூலம் இந்திய இராணுவத்தை வாபஸ் பெற வைக்கப்பட்டது. அதே சமயம் மாகாண சபை ஆட்சியும் முடிவுக்கு வந்தது.

விடுதலைப்புலிகள் ஒரு போதும் மற்றவர்களை கைமுந்த அனுமதித்த-தில்லை. எனவே தமக்கு சாவு மணி அடிக்க முயலக்கூடும் என தாம் கருதிய ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவுக்கு தற்கொலை குண்டு தாக்கதல் 'மூலம்' முடிவு கட்டினர்.

அதனைத் தொடர்ந்து சந்திரிக்கா அம்மையார் பத்து வருடங்கள் ஜனாதிபதி பதவியில் நீடித்தகாலம் விடுதலைப்புலிகளின் பொற்காலமாக அமைந்தது. நோர்வேயின் தலைமையில் புலிகளை தடவி சமாதானம் செய்ய பல பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. தமிழ் பகுதிகளில் ஏறத்தாள புலிகள் இராச்சியமே இடம் பெற்றது. சர்வதேச உலகுக்கு தமது அகிம்சைக்கான முகத்தை காட்டுவதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பை தம்முடன் அணைத்துக்கொண்டனர். மக்களும் பெரும் நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் அதனை வரவேற்றனர். சந்திரிக்கா அம்மையாரின் பத்தாண்டு ஆட்சிக்காலம் முடிவுற்றதை தொடர்ந்து மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியா-கினார். துரதிர்ஷ்டவசமாக 2009 மே18ல் விடுதலைப்புலிகளின் போராட்டம் பல திட்டமிடப்பட்ட சதிகளால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. சந்திரிகா போலன்றி ஜனாதிபதி மகிந்தவின் ஒரு பக்கச் சார்பான பிடிவாதம் அதற்கு உறுதுணையாக இருந்தது.

இன்று தமிழ் மக்கள் தமது தீர்வுக்காக அஹிம்சை வழிப்பாதை ஒன்றையே நம்பியிருக்க வேண்டிய நிலையே நீடிக்கின்றது. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதற்கமைவாக மகிந்த ஆட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்டு மைத்திரிபால சிறிசேனா அவர்கள் ஜனாதிபதியாக ஆட்சிப்பீடம் ஏறியுள்ளார்.

அதே சமயம் கஜேந்திர குமார் பொன்னம்பலம் அவர்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற கட்சியினூடு திருகோணமலைக்குள் ஒரு நாடு இரு தேசம், தாயகம், தேசியம், சுயநிர்ணயம், ஆகிய கோஷங்களுடன் தேர்தலில் குதித்துள்ளனர். அவர்களும் சாமானியர்கள் அல்ல. அகில இலங்கை தமிழ் காங்கிரசின் வழித்தோன்றல்கள் ஆவர்.

மக்களே! இன்றைய பொது தேர்தலை சந்திக்கபோகும் நீங்கள்தான், பிரதான கட்சிகளில் யார் 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்ற கோட்பாட்டை அதிகம் பேணுவார்கள் என்பதை தீர்மானிக்க வேண்டியவர்கள்!

# வார்த்தைகளின் அழகும் அசிங்கமும்



சஞ்சயன் செல்வமாணிக்கம்

தற்போதெல்லாம் வார்த்தைகளை மிக மிக அவதானமாகவே பொறுக்கி எடுத்து வசனங்களை கோர்க்கின்றேன் என்றே எண்ணத் தோன்றுகிறது. வார்த்தைகளுக்கும் எனக்குமான உறவு நாளுக்கு நாள் மேம்பட்டுக்கொண்டு வருவதாகவே உணர்கிறேன். இங்கும் வாழ்க்கை அனுபவம் எனனைச் செதுக்கியபடியே இருக்கிறது, தினமும்.

ஒரே ஒரு வார்த்தையினால் அவமானப்பட்டு அசிங்கப்பட்டு பலரின் முன் நகைப்பிற்கிடமாய் நின்ற கதையொன்று இருக்கிறது என் வாழ்வில். மறக்கமுடியாத, மறக்கக்கூடாத அனுபவம் அது.

ஏறத்தாள 28 ஆண்டுகளுக்கு முன்பு மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கல்விகற்ற நாட்கள் அவை. பாடசாலையின் முதன்மை மாணவர் தலைவராக தெரிவுசெய்யப்பட்டிருந்தேன். ஓர் நாள் அதிபர் என்னை அழைத்து சகல மாணவர்களையும் பொது மண்டபத்திற்கு அழைத்து வா என்று ஆங்கிலத்தில் கட்டளையிட்டார். மனிதருக்கு தமிழைவிட ஆங்கிலமே பரீட்சயமான மொழி.

நான் ஏனைய மாணவதலைவர்களை அழைத்து அதிபரின் கட்டளையைக் கூறினேன். அவர்களை மாணவர்களை அழைத்துவரவும் பணித்தேன். சற்று நேரத்தில் வரிசை வரிசையாக மாணவர்கள் வந்து, மண்டபம் நிறைந்து-கொண்டிருந்தது. நான் மண்டபத்து வாசலில் நின்றிருந்தேன். அந்நாட்களில் இளைஞர்களாகிய எமது வாயில் ஒரு தூஷன வார்த்தை நர்த்தனமாடிக்-கொண்டிருந்தது. ஒரு மாணவதலைவன் என்னிடம் வந்து இரண்டு மாணவர்கள் சண்டைபிடிக்கிறார்கள் என்றான். என் வாயில் அந்தத் தூஷண வார்த்தை வந்து, அது எனது வாயைவிட்டு வெளியேறிய போது அதிபர் என்னைக் கடந்துசென்றதை கண்டேன். எனது இதயம் வாயினுள் வந்தது போலிருந்தது எனக்கு. இருப்பினும் அதிபர் எதுவும் பேசாது சென்றது மனதுக்கு பெருத்த ஆறுதலைத் தர, அப்பாடா என்று நிம்மதிப்பெருமூச்சு விட்டேன்.

அதிபர் மண்டபத்தினுள் நுழையும் போது எப்போதும் மயான அமைதி நிலவும். அன்றும் அப்படியே. மேடையில் அனைத்து ஆசிரியர்களும் அமர்ந்திருப்பார்கள். அதிபர் மேடைக்கு முன் பகுதியில் இருக்கும் சிறிய பேச்சு மேடைக்கு வந்து கூட்டத்தினை இப்படி ஆரம்பித்தார்: "என்ட பள்ளிக்கூடத்தில ஒரு ரவுடி இருக்கிறார். அவருக்கு தான் ஒரு பெரிய ஆள் என்ற நினைப்பு" இதைக் கேட்டதும் அந்த ஜீவன் யார் என்றும், இன்று அவனுக்கு பகிரங்க தண்டணை கிடைக்கப் போகிறது என்றும் எனக்குள் யோசனை ஓடிக் கொண்டிருந்தது. அவனுக்காக பரிதாபப்பட்டேன்.

அதிபர் ஒழுக்கம் பற்றி உரையாற்றியபடியே என்னை நோக்கி "சஞ்சயன், மேடைக்கு முன் ஒரு மேசையை எடுத்துப் போடு" என்றார் ஆங்கிலத்தில்.

நானும் ஒரு மேசையை எடுத்துப்போட்டுவிட்டு திரும்பவும் எனது இடத்தை நோக்கி நடக்க முற்பட்டபோது "சஞ்சயன், இந்த மேசை யாருக்காக போடப்பட்டது என்று தெரியுமா?" என்றார். நான் "இல்லை சேர்". என்றேன். "இந்தப் பள்ளிக்கூடத்து senior prefect சஞ்சயனுக்குத் தான்" என்றார்.

எனக்கு கீழ் இருந்த நிலம் திடீர் என்று இல்லாது போனது போல் இருந்தது. மொனமாய் ஓடின சில கணங்கள். "மேசையின் மேல் ஏறி நில்" என்று கட்டளை வந்தது. அவரின் கட்டளையை மீறுவது தற்கொலைக்குச் சமனானது என்பதால் தலையைக் குனிந்தபடியே ஏறி நின்றேன். இவர் உங்கள் எல்லோருக்கும் முன்மாதிரியாக இருக்கவேண்டியவர். ஆனால் இவர் கதைக்கிற பாஷை காதால் கேட்க முடியாத பாஷை என்றார். சகலம் புரிந்தது எனக்கு!!

பொது மண்டபம் முழுவதும் மாணவர்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்கள் என் நெஞ்சைத் துளைக்கின்றன. மண்டபத்தில் எனக்குப் பின்னால் அமர்ந்திருந்த ஆசியர்களின் கண்களும் என் முதுகை சல்லடை போடுவது போல உணர்ந்தேன். வியர்வை-யால் நனைந்திருந்தது உடம்பு. அவமானத்தால் கூனிக் குறுகி நடுங்கிக் கொண்டிருந்தேன். அருகில் நின்றிருந்து முதலாம் வகுப்பு மாணவர்களுக்கு பிரச்சனை என்ன என்பது புரிந்திருக்காவிட்டாலும் மேசையின் மீது சிலைபோல நின்றிருந்த என்னை ஆ என்று வாயைத் திறந்தபடியே அண்ணாந்து பார்த்தபடியே நின்றிருந்தார்கள். எனக்கு அவ்விடத்திலேயே உயிர்போகாதா என்னுமளவுக்கு அவமானத்தை உடலெல்லாம் உணர்ந்து கொண்டிருந்தேன்.

தொடரும் ...

இன்றைய நாளும் நல்லதே ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

### இயக்குசத்ய பிரபாஸின்

## "யாகாவாராயினும் நாகாக்க"

### ஆதி, நிக்கி கல்ராணி


நான்கு நண்பர்கள் அதில் ஹீரோ ஆதி மட்டும் middle class. வழக்கம் போல் ஒரு அழகான ஹீரோயின், நிக்கி கல்ராணி மீது காதல். புத்தாண்டு கொண்டாடத்தில் 4 நண்பர்களும் போதையில் ஒரு பிரச்சனையில் ஈடுபட அது அவர்களின் வாழ்க்கையையே புரட்டி போடுகிறது. பின் என்ன நடந்தது என்பதுதான் மீதி கதை. ஹீரோ ஆதி அசடு வழியும் காதலனாகவும், அன்பான நண்பனாகவும் வரும் காட்சிகளில் தனது நடிப்பின் மூலம் "ஈரம்" காட்டி, குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் பிரச்சனை வரும் போது மிருகமாக மாறுகிறார். ஆக்ஷன் காட்சிகளிலும் வில்லனிடம் நடந்ததை சொல்ல முயற்சிக்கும் காட்சிகளிலும், தனது நண்பர்கள் சரியானவர்களா தவறானவர்களா என்றும் யோசிக்கும் காட்சியிலும் அருமையாக பொருந்தியிருக்கிறார்.

டார்லிங்கில் பேய்யாக வந்து மிரட்டிய நிக்கி கல்ரானி இப்படத்தில் புல்லட் ஒட்டுவதிலிருந்து மதுபான கடையில் பீர் வாங்குவது வரை ஆதியை விழிபிதுங்க வைக்கிறார். இப்படி ஒரு bold entry தமிழ் ஹீரோயின்களுக்கு கிடைப்பது மிக கடினம். இப்படத்தில் வில்லன் "முதலியாராக" தோன்றியிருக்கிறார் 3 முறை தேசிய விருது வாங்கிய மிதுன் சக்கரவர்த்தி.

தனது கூர்மையான கண்களாலும் கம்பீரமான குரலாலும் மிரட்டுகிறார். இவர்களை தவிர நாசர், பசுபதி அவர்களின் மெருகேறிய நடிப்பால் தங்களது கதாபாத்திரங்களுக்கு உயிர்கொடுத்திருக்கிறார்கள்.

நிஜ சம்பவங்களின் தொகுப்பு என்பதால் கற்பனை சேர்க்கும் போது மிக கவனமாக இருக்க வேண்டும். தேவை-யில்லாமல் விடும் வார்தை-களால் எப்படி வாழ்க்கையே மாறும் என்பதை commercial படமாக கொடுக்க முயற்சித்திருக்கிறார்கள் யாகாவாராயினும் நா காக்க படக்குழுவினர்.

மொத்தத்தில் பொழுது-போக்கிற்காக குடும்பத்துடன் பார்க்கலாம்.




ஜீத்து ஜோசப்பின் இயக்கத்தில் வெளியான "பாபநாசம்" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



## கமலின் மனைவியானார் ஆஷா சரத்

பாபநாசம் வெற்றிக் களைப்பில் இருக்கும் கமல்ஹாசன் தற்போது ஈ.சி.ஆரில் நடித்து வருகிறார். கமல் இப்படத்தை மிக விரைவில் முடிக்க திட்டமிட்டு உள்ளதால் படப்பிடிப்பு வேகமாக நடந்து வருகிறது. பாபநாசம் படத்தில் போலீஸ் ஐ.ஜி வேடத்தில் நடித்த ஆஷா சரத்தை தனது மனைவியாக்கி உள்ளார். மேலும் இப்படத்தின் வில்லன் வேடத்தில் ஒரு பிரபல முன்னணி நடிகர் நடித்து வருவதாக தகவல் கசிந்துள்ளது,



## மீண்டும் திருமணமா??



என்னை புரிந்து கொண்டவர் கிடைத்தால் இரண்டாவது திருமணம் செய்து கொள்வேன்" என நடிகை சோனியா அகர்வால் கூறியுள்ளார். சோனியா அகர்வாலுக்கு தற்போது 33 வயது ஆகிறது. அவரை மீண்டும் திருமணம் செய்து கொள்ளும்படி நெருக்கமானவர்கள் வற்புறுத்தி வருகின்றனர். இதுகுறித்து கூறும்போது இரண்டாவது திருமணத்துக்கு ஓ.கே. சொல்லியுள்ளார்.

இவர் விவேக் ஜோடியாக நடித்த "பாலக்காட்டு மாதவன்" திரைப்படம் தற்போது வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அஜித்திற்கு ரசிகரானார் ரஜினி

அஜித் என்றாலே தமிழ் சினிமாவில் எப்போதும் ஸ்பெஷல் தான், அவரை பற்றி அறிந்து கொள்ள விரும்பாதவர்களே இருக்க முடியாது. தற்போது அந்த லிஸ்டில் இணைந்திருப்பவர் ரஜினி. வார இதழில் அஜித்தை பற்றி வந்த கட்டுரையை ரஜினி படிப்பது போல் ஒரு புகைப்படம் வந்துள்ளது. இதனை பார்த்த அஜித் ரசிகர்கள் மிகுந்த சந்தோஷத்தில் உள்ளனர். ஆனால் சிலர் இது உண்மையான புகைப்படம் இல்லை என்று கூறிவருகின்றனர்.

## ஆளப்பார்த்து எடை போடக் கூடாது

தனூடன் வி.ஐ.பி படத்தின் இரண்டாம் பாகத்தில் கே.எஸ். ரவிக்குமார் மற்றும் ராதிகா நடித்து வருவது அனைவரும் அறிந்ததே. இப்படத்தின் ஒளிப்பதிவாளர் வேல்ராஜ் தான் இயக்குனர் என்று கூறினாலும் உண்மையான இயக்குனர் தனு' தானாம், தனுஷை பார்த்து கே. எஸ். ரவிக்குமாரே வியந்த விஷயம் படப்பிடிப்பில் நடந்துள்ளது. கே. எஸ். ரவிக்குமாரை மிஞ்சும் அளவுக்கு முழு படப்பிடிப்பை வேகமாக முடித்துள்ளாராம் தனுஷ் காட்டிய ஈடுபாடு என்னை வியக்க வைத்தது என்று கூறியுள்ளார் கே.எஸ்.

## பிழைக்கத் தெரிந்த நடிகை



தெலுங்கு நடிகர் மகேஷ்பாபு நடித்த ஒரு திரைப்படத்தின் போஸ்டரில் ஹீரோயினை மிக மட்டமாக சித்தரித்திருப்பதாக இணையதளத்தில் செய்தி வெளியிட்டதை அடுத்து சமந்தாவுக்கு எதிராக போர்க்கொடி பிடித்தனர். பின்னர், மகேஷ்பாபுவை சந்தித்து மன்னிப்பு கேட்டார் சமந்தா. விளைவு தன்னுடன் சமந்தா ஒரு திரைப்படத்தில் நடிப்பதற்கும் சிபாரிசு செய்தார் மகேஷ்பாபு.

ஆனால் அதன்பிறகு அவர் எந்த ஹீரோக்களையும் விமர்சிக்கவில்லை. அது தனது வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் என்பதை உணர்ந்து செயல்படத் தொடங்கினார் சமந்தா. ஆக, பிழைக்கத் தெரிந்த நடிகையாகி விட்டார் சமந்தா.



## "பாகுபாலி"

பாகுபலி படம் பார்த்த தணிக்கைக் குழுவினர் பிரமிப்புடன் பாராட்டு தெரிவித்துள்ளனர். இந்திய திரைப்பட வரலாற்றில் அதிக செலவில் எடுக்கப்பட்ட பிரம்மாண்டமான திரைப்படம் எஸ்எஸ் ராஜமவுலியின் பாகுபலி. 3 டியில் உருவான இந்தப் படம் தமிழ், தெலுங்கில் நேரடியாகத் தயாராகியுள்ளது என்பது குறிப்பி-டத்தக்கது.

பாகுபலி பட தணிக்கை சான்றிதழில் தங்களின் பெயர் இடம்பெறுவது மிகவும் பெருமையா இருப்பதாகவும் கூறியு-ள்ளனராம் தணிக்கை குழுவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

## UV Ray சார்ஜ் செய்ய சோலர் பேப்பர்

MOBILE

கைப்பேசிகள் மற்றும் டேப்லட்கள் போன்ற மொபைல் சாதனங்களை சார்ஜ் செய்வதற்கு மிகவும் மெலிதானதும், எடை குறைந்ததுமான சார்ஜர் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. YOLK எனப்படும் இச் சார்ஜர் சூரிய சக்தியில் செயல்படக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் முதன் முறையாக விற்பனைக்காக சந்தைப்படுத்தப்படவுள்ள இச்சாதனம் தற்போது Kick starter தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.


## Face Book இன் முயற்சி

கூகுள் நிறுவனத்தைப் போன்று பல்வேறு முயற்சிகளில் சிரத்தை காட்டிவரும் பேஸ்புக் நிறுவனம் தற்போது காற்று சக்தியை அடிப்படையாகக் கொண்ட டேட்டா சென்டரை அமைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இத்திட்டம் இவ்வருடத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு 2018ஆம் ஆண்டு நிறைவு செய்ய தீர்மானிக்கப் பட்டுள்ள அதேவேளை இதற்காக காற்றின் மூலம் 200 ஆறு மின் சக்தியை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## விண்வெளியில் சோலர் நிலையம்

OTHER

விண்வெளி ஆராய்ச்சியில் பல சாதனைகளை படைத்துள்ள அமெரிக்காவை சேர்ந்த நாசா நிறுவனம், விண்வெளியில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்க முயற்சி மேற்கொள்கிறது. அமெரிக்காவின் விண்வெளி நிறுவனமான நாசா விண்வெளியை மையமாக வைத்து பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.அதுமட்டுமல்லாமல் விண்வெளியில் நாசாவுக்கு நிரந்தர ஆராய்ச்சி மையமே இருக்கிறது.இந்த அசாத்தியமான புதிய திட்டங்களின் மூலம் பூமியில் 24 மணி நேரமும் 365 நாட்களும் மின் உற்பத்தி செய்ய முடியும் என்று நாசா தெரிவித்துள்ளது



## உலகின் சிறிய கணனி

முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கணனிகள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஆனால் அத்தகைய கணணிகள் அளவில் பெரிதாக இருந்தன. நினைத்த இடத்திற்கு எடுத்துச் செல்லும் வகையிலும் இல்லை. அது மட்டுமல்லாது அதன் பயன்பாட்டு அளவும் மிகக் குறைவாகவே இருந்தது. நாளடைவில் இந்த கணனி வடிவத்திலும், பயன்பாட்டிலும் வியக்க வைக்கும் விதத்தில் மாறியது. ஆரம்ப கட்டத்தில் பல விதமான கணனிகள் உருவாக்கப்பட்டாலும், சார்லஸ் பாப்பேஜ் என்ற இயந்திர பொறியாளர் தான் programmable கணனிகளை உருவாக்கினார். அதில் இருந்து தான் கணனி தொழிநுட்பம் வளர்ச்சியடைத் தொடங்கியது.

Raspberry pi

Raspberry pi ஸ்மார்ட் போன் போன்றே யூஎஸ்பி மூலம் சக்தியூட்டப்படுகிறது. இதன் விலை குறைவு என்பதால் அதிக பேர் இதைப் பயன்படுத்துகின்றனர்.

Intel nuc

ஒரு சிறிய பெப்ஸி பாட்டிலின் உயரமே உள்ள இதன் விலையானது raspberry pi விட சற்று அதிகம். இதனை வெைநட நிறுவனம் தயாரித்துள்ளது.

Asus chromebox

asus chromebox சற்று பெரியதாக இருக்கும். ஆனால் கைகளுக்கு அடக்கமாக இருக்கும். இது சந்தைகளில் 160 டொலருக்கு கிடைக்கிறது.

Hp stream mini


hp stream mini கருவியின் பயன்பாடு அதிகமாக இருப்பதால் நல்ல வரவேற்பு இதற்கு உள்ளது. றுினெழறள 8.1 இயங்குதளத்தோடு அசத்தலாக இருக்கும் இதன் விலை 180 டொலர் ஆகும்.

Mintbox mini

mintbox mini கருவியின் hp stream mini விட அதிக பயன்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. பார்ப்பதற்கு அழகாகவும், அளவிலும் பொறுத்தமாக இருக்கிறது.



## பெப்பர் ரோபோ



**விதவிதமான** வகைகளில் மக்களின் பயன்பாட்டுக்கு ஏற்ற ரோபோக்களை தயாரிப்பதில் ஜப்பான் ரோபோ ஆராய்ச்சி நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஜப்பானைச் சேர்ந்த சாப்ட்பேங்க் ரோபோட்டிக்ஸ் கார்ப் நிறுவனம் சமீபத்தில் பெப்பர் என்கிற மனித வடிவிலான 1000 ரோபோக்களை விற்பனைக்கு கொண்டு வந்தது. அறிவிக்கப்பட்ட ஒரு நிமிடத்தில் அனைத்து ரோபோக்களும் விற்பனையாகிவிட்டது. இந்த ரோபோவுக்கு சமைக்கவோ, வீடுகளை சுத்தம் செய்யவோ தெரியாது. ஆனால் மனிதர்களோடு சகஜமாக பழகி நம்முடைய உணர்வுகளை புரிந்துகொள்ளும்.

## ஆபாச வீடியோ எச்சரிக்கை

ஒவ்வொரு ஸ்மார்ட் கைப்பேசி பாவனையாளர்களும் சராசரியாக 348 ஆபாச வீடியோக்களை பார்வையிட்டிருப்பார்கள் என புள்ளிவிபரங்கள் மூலம் அறியப்பட்டுள்ளது. இதேவேளை இந்த எண்ணிக்கையானது மேலும் ஐந்து வருடங்களில் 55 சதவீதத்தினால் அதிகரித்திருக்கும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## வெடித்தது iphone -6




கடந்த காலங்களில் ஸ்மார்ட் கைப்பேசிகளின் வெடிப்பு சம்பவம் அதிகமாக காணப்பட்டிருந்த போதிலும் அண்மைக் காலங்களில் குறைவடைந்திருந்தன. இதேவேளை அண்மைய வெடிப்புச் சம்பவமாக இந்தியாவின் குர்கான் பகுதியிலுள்ள கிஷான் யாதவ் என்பவருடைய iPhone 6 வெடித்துள்ளமை பதிவாகியுள்ளது.

## உலக சாதனையில் HONDA




உலகளவில் மக்களின் நம்பிக்கையை வென்ற மோட்டார் வாகன நிறுவனங்களுள் ஒன்றாக விளங்கும் Honda நிறுவனத்தினால், புதிதாக வடிவமைக்கப்பட்ட கார், எரிபொருள் பாவனையில் உலக சாதனை படைத்துள்ளது.

எரிபொருள் தாங்கியில் முற்றாக எரிபொருள் நிரப்பப்பட்ட நிலையில் கடந்த மாதம் 1 ஆம் திகதி இதற்கான சோதனை நிகழ்த்தப்பட்ட போது 24 ஐரோப்பிய நாடுகளின் ஊடாக சுமார் 8,287 மைல் தூரம் பயணம் செய்துள்ளது. அதாவது சராசரியாக ஒரு கலன் எரிபொருளில் 100.31 மைல்கள் தூரம் பயணித்துள்ளது. இதனை ஒரு புதிய கின்னஸ் சாதனையாக பதிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## மொபைலில் விற்பனை

**சம்சுங்** நிறுவனம் தனது உற்பத்திப் பொருட்களை ஒன்லைன் மூலம் பயனர்கள் இலகுவாகவும் விரைவாகவும் வாங்குவதற்காக மொபைல் கொடுக்கல் வாங்கல் முறைமையை உருவாக்கி வருகின்றது. இம்முயற்சி முடிவடையும் தருவாயில் இருப்பதுடன், இதற்கான இறுதிக்கட்ட சோதனைகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிர்ச்சியை தாங்கும் சக்தியை வழங்கும் டெட்ரிஸ்

சமகாலத்தில் பல வகையான கணனி ஹேம்கள் அறிமுகம் செய்யப்பட்டிருந்த நிலையிலும் "டெட்ரிஸ்" எனும் ஹேம் ஆனது பல வருடங்களுக்கு முன்னிருந்தே ஹேம் பிரியர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றிருந்தது. இக் ஹேமினை உயர் வேகத்தில் விளையாடி வருவதனால் திடீரென ஏற்படும் அதிர்ச்சிகளை தாங்கும் வல்லமையை பெற முடியும் என ஐக்கிய இராச்சியத்தை சேர்ந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.இதேவேளை இதற்கு முன்னர் மேற்கொண்ட ஆய்வி ஒன்றின்படி டெட்ரிஸ் ஹேமினை தொடர்ச்சியாக நான்கு மணித்தியாலங்கள் வரை விளையாடும் பொழுது பழைய நினைவுகளை மூளையில் இருந்து அழிக்கின்றது என தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## IOS சாதனங்களுக்கான புதிய வசதி

கூகுளின் கூகுள் மேப் சேவையானது தொலைதூர மற்றும் அறியாத இடங்களிற்கு பயணம் செய்யும் போது அவசியமானதாக மாறிவிட்டது.. இதனால் அனைத்து வகையான மொபைல் சாதனங்களுக்குமான கூகுள் மேப் அப்பிளிக்கேஷன் உருவாக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. இவ்வாறிருக்கையில் கூகுள் நிறுவனத்-தினால் தற்போது iOS சாதனங்களுக்காக புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட கூகுள் மேப் அப்பிளிக்கேஷ-னில் நாம் பயணம் செய்யும் இடங்களை பேஸ்புக் மற்றும் மெசஞ்சரினூடாக பகிரும் வசதி தரப்பட்டுள்ளது. பல மொழிகளில் செயல்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது.

## கண்பார்வையை பரிசோதிக்கும் ஸ்மார்ட்போன்

இங்கிலாந்தை சேர்ந்த விஞ்ஞானிகள் துல்லியமாக கண்பார்வையை பரிசோதனை செய்யும் புதிய ஸ்மார்ட்போன் அப்ளிகேஷன் ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். இங்கிலாந்தை சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சிறிய கண் பரிசோதனையில் கிட் (பீக்) என்ற பெயரில் அப் ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். போனின் கமெராவை கொண்டு கண் விழித்திரையை ஸ்கேன் செய்வதன் மூலமும், போனின் ப்ளா' லைட்டை கொண்டு கண்ணில் ஏற்படும் நோய்களையும் கண்டறிய முடியும்.. இது முழுமையான பயன்பாட்டுக்கு வரும்போது கண்பார்வை பரிசோதனை செய்ய வசதி அற்ற பல லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள் என இந்த அப்ளிகேஷனை உருவாக்கிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# பணம்.. பணம்... பணம்....

– பாலையூற்றான் –



***சிங்கள*** மக்களின் பெயர் ஏனைய இன மக்களின் பெயர்களை விட மிக நீளமானது. மேலும் குடும்பப் பெயரை தமது பெயருடன் சேர்ப்பதாலே அது நீளமாக காணப்படுகின்றது. சு.ஆ.ஆ பண்டா என்ற அவனது பெயர் மிக சுருக்கமாக பண்டா என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டு வந்தது. பாடசாலை கல்வியை முழுமையாக பெற்ற அவனை அன்று வயலுக்குள் இறங்கி வேலை செய்ய அவனது பெற்றோர் அனுமதிக்கவில்லை.

ஏனெனில் அவன் ஒரு கௌரவமான உத்தியோகத்தில் ஈடுபட வேண்டுமென்பதே பெற்றோரின் விருப்பமாக இருந்தது. அம்பாறை பிரதேசத்தில் பண்டா சிறந்த நேர்முக வர்ணனையாளராக திகழ்ந்தான். இளம் வயதில் அங்கு பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெறும் உள்ளக, வெளியக விளையாட்டுப் போட்டிகளில் அவனது குரல் ஒலிக்காத நாளே இல்லை. அவ்வாறே பல கிரிக்கெட் போட்டிகளிலும் நேர்முக வர்ணனையாளராக பணிபுரிந்து சகலரினதும் பாராட்டைப் பெற்று வந்தான் பண்டா. இருப்பினும் நிரந்தர தொழிலுக்காக பல முயற்சிகளை மேற்கொள்ள அவன் தவறவில்லை.

மகரகம இளைஞர் மேம்பாட்டு விவகார நிறுவனம் வருடா வருடம் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது வழமை. மேலும் அந்த நிறுவனம் கொழும்பு, கண்டி போன்ற பெரிய தலைநகரங்களில் இருந்து வேலைக்கு ஆட்சேர்ப்பதை விட கிராமிய அதுவும் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களிலிருந்து வேலைக்கு ஆட்களை சேர்க்க விண்ணப்பங்களை நாடளாவிய வகையில் கோரியிருந்தது. பண்டாவின் பெற்றோர் பரம்பரை விவசாயிகளாக இருந்தாலும் வெளிமாவட்டங்களில் ஏதாவது ஒரு உத்தியோகத்தராக பண்டா பணிபுரிய வேண்டுமென்பதில் இறுதி வரை இறுக்கமாக இருந்து வந்தனர்.

குறித்த வெற்றிடம் தொடர்பாக பண்டாவும் அந்த நிறுவனத்தின் பிரச்சார உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணப்பித்து இருந்தான். அது பட்டதாரிகளுக்கான பதவியாக இருந்தாலும் அன்று நேர் முகப் பரீட்சைக்கு தோற்றிய பல பட்டதாரிகளுக்கு பிற காரணிகள் தொடர்பில் அனுபவமும் திறமையும் இருக்கவில்லை.

பண்டாவின் ஆகக் கூடிய கல்வித் தகமை க.பொ.த(உயர்தரம்) ஆக இருந்தாலும் பல டிப்ளோமா சான்றிதழ்களை பெற்றிருந்தான். நேர்முக பரீட்சையின் போது பட்டத்தை விட அவற்றிற்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் வழங்கப்பட்டதால் பிரச்சார உத்தியோகத்தர் பதவிக்கான நியமனத்தை அவன் இலகுவாக பெற்றுக் கொண்டான்.

குறித்த நிறுவனத்தின் தலைமையகம் மகரகம பகுதியில் அமைந்திருந்ததால் அங்கேயே அவனுக்கு முதல் நியமனம் கிடைத்ததுடன் தங்கிக் கொள்ள விடுதியும் கிடைத்தது. மாதத்தின் இறுதியில் தான் ஊருக்குப் போவான். மேலும் அவனுக்கு ஓர் கௌரவமான தொழில் கிடைத்ததையிட்டு பெற்றோர் மகிழ்ச்சியடைந்தனர்.

பிரச்சார உத்தியோகத்தரான அவனுக்கு அனேகமாக வெளிக்களத்தில் தான் வேலைகள் இருந்தன. வெளிக்களத்திற்கு சென்று வருவதால் பல விடயங்களில் நல்ல அனுபவத்தை பெற்றுக் கொள்ள வாய்ப்பும் ஏற்பட்டது. அது மாத்திரமல்ல பலரின் தொடர்புகளுக்கும் குறைவு இருக்கவில்லை.

அவன் தொழில் புரியும் நிறுவனம் நாடளாவிய ரீதியில் அரசினால் பல பிரதேசங்களில் இளைஞர் யுவதிகளின் மேம்பாட்டிற்கான நிறுவனம் என்பதால் நாடளாவிய ரீதியில் திறன் கொண்ட இளைஞர் யுவதிகளின் புதிய நிர்மாணிப்புக்கள் அதியமிக்க ஆக்கங்கள் பலவற்றை அது கண்காட்சி நிகழ்வுகள் ஊடாக மக்களுக்கு காட்சி படுத்தி வந்தது. அதனூடாக நாட்டின் ஏனைய பகுதி இளைஞர்களும் யுவதிகளும் மேம்பாடு அடைய வேண்டும் என்பதே அந்த நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

ஒவ்வொரு கண்காட்சி நிகழ்வும் சுமார் ஒரு மாத காலம் இடம்பெறுவதால் அவற்றுக்கான ஆயத்தங்கள் மற்றும் உரிய பொருட்களை மீள தலைமையகத்திற்கு கொண்டு வருதல், போன்ற காலவரையறையற்ற வேலைகள் காரணமாக அதில் ஈடுபடும் ஊழியர்களுக்கு மட்டுப்படுத்தப்படாத மேலதிக நேர கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டு வந்தன. அதனால் குறித்த ஊழியர்கள் தமது மாதாந்த வேதனத்தை மிகுதிப் படுத்திக் கொண்டனர்.

பண்டாவும் கண்காட்சிப்பிரிவில் கடமையாற்றுவதால் அவனுக்கும் பணத்தட்டுப்பாடு என்றுமே இருக்கவில்லை. என்னவாக இருந்தாலும் மொத்த சம்பளத்தையும் மாதம் மாதம் வீட்டிற்கு அனுப்பி வைப்பான். மேலதிக நேரக் கொடுப்பனவைக் கொண்டு தனது பிரத்தியேக செலவை எப்படியும் சமாளித்துக் கொள்வான் பண்டா.

அவன் ஏனைய சில இளைஞர்களை போன்று மது அருந்துதல், புகைப்பிடித்தல் போன்ற பழக்கவழக்கங்களை பின்பற்றுபவன் அல்ல. மிக எளிமையாக நடந்து கொள்வதால் பணம் வீண்விரயமாவதற்கு சந்தர்ப்பமும் இருக்கவில்லை.

ஏனையோரிடம் கைநீட்டி கடன் வேண்டக் கூடாதெனும் வைராக்கியம் அவன் மனதில் திடமாக இடம்பிடித்து உள்ளதால் பண விடயத்தில் மிக கண்டிப்பாக இருந்து வந்தான். மகரகம, ஹோமாகம, பிலியந்தல போன்ற பகுதிகளை அண்மித்த கிராமங்களில் அரசாங்கம் கொடுத்த காணிகளில் பலர் வீடுகளை நிர்மாணிக்க ஆரம்பிப்பார்கள்.

ஏதோ ஒரு தவிர்க்க முடியாத காரணத்தினால் குறித்த நிர்மாணப் பணிகள் பாதியில் நின்று விடும். மேற்கொண்டு அதை முன்னெடுத்துச் செல்ல வசதியற்றதினால் அதைக் கைவிட்டு வேறு இடங்களுக்குச் சென்று ஓலைக் குடிசைகளை அமைத்து தமது வசதிக்கேற்றவாறு அங்கு வாழ்ந்து வருவார்கள். அதனால் குறித்த அரை குறை வீடும் காணியும் பாழடைந்து கைவிடும் நிலைக்கு உள்ளாகி விடும்.

அவ்விதமாக ஸ்தம்பிதமடைந்த பழைய வீடுகளை மிகக் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து அதில் போய் குடியிருந்து கொண்டு துரித அபிவிருத்தி கட்டுமான வேலைகள் ஊடாக அதை நவீன மயப்படுத்தி அப்பகுதியில் சகலரும் கவரும் வகையில் அதாவது குறித்த கட்டுமானத்தை ஏட்டிக்குப் போட்டியாக எவரும் நுகரக் கூடிய தன்மையை ஏற்படுத்தி அதை விற்று விடுவான் பண்டா.

இனி கேட்கவா வேண்டும். அவன் எதிர்பார்த்த வருவாயை விட கேள்வி அதிகமாக கொண்டவருக்கு அந்த நவீன மயப்படுத்தப்பட்ட வீடு உரித்தாகி விடும். அத்துடன் குறித்த வீட்டுப் பத்திரத்தை ஏற்கனவே வங்கியில் ஈடுவைத்துப் பெறப்பட்ட வீட்டுக் கடனையும் செலுத்தி விடுவான். மேலும் அவனது பணம் சம்பாதிக்கும் படலம் நின்று விட வில்லை. சுழற்சி முறையில் குறித்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்வான். இவ்விதம் தொடர்ந்தும் பழைய பாழடைந்த கட்டடங்களை கொள்வனவு செய்து அவற்றை நவீன மயப்படுத்தி கொள்ளை இலாபத்திற்கு விற்பதே மேலதிக வருவாயை பெறும் அவனது பகுதி நேர தொழில்.

மேலும் அந்த பகுதிநேர தொழிலில் கூடிய வருவாயை பெற்றுக் கொண்டு வந்ததால் அவனது நிரந்தர தொழிலில் ஈடுபாடு தளர்ந்து கொண்டே சென்றது. ஒரு வருடத்தில் அவனுக்குரிய அத்தனை லீவுகளையும் பெற்றுக் கொண்டதால் அவசர தேவைக்கு லீவு பெற முடியாமல் இருந்தான். அதனால் அவன் பெற்ற சகல லீவுகளும் வேதனமற்ற விடுமுறையாக கழிக்கப்பட்டு வந்தன. ஒரு நாள் அவனது பகுதிநேர தொழிலின் நிமித்தம் கடமைக்கு செல்ல முடியாமல் இருந்தது. அது தொடர்பில் முன்னறிவித்தல் விடுக்காத காரணத்தால் "தாமாகவே தொழிலை விட்டு அகன்று விட்டதாக" கருதி குறித்த நிறுவனம் பண்டாவை முற்றாக தொழிலில் இருந்து நீக்கியது.

மேலும் சேவையிலிருந்து ஓய்வு பெறும் வயதை அவன் அப்போது அடைந்திருந்ததால் தொழில் தனது கையைவிட்டு நழுவிப் போனதையிட்டு அவன் எள்ளளவும் கவலை கொள்ளவில்லை. தற்போது மகரகம பகுதியில் வசித்து வந்த வீட்டை நல்ல விலைக்கு விற்று விட்டு நேராக சொந்த ஊருக்கு சென்று விட்டான் பண்டா.

சுமார் இரு மாத காலத்திற்குள் குறித்த நிறுவனத்தில் கடமை புரிந்த காலப்பகுதிக்கான ஊழியர் சேமலாப நிதி உள்ளிட்ட அனைத்து கொடுப்பனவுகளும் அவன் கரம் வந்து சேர்ந்தன. அந்தப் பணத்திலே நிரந்தரமாக குடும்பத்தினருடன் தனது இறுதிக்காலத்தைக் கழிக்க சகல வசதிகளுடனான சொகுசு வீடொன்றை சொந்த ஊரிலே நிர்மாணித்து தான் சுமார் முப்பது வருடங்கள் சேவையாற்றிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்தை இறுதிவரை மறக்காமலிருக்க அந்த புதிய மனைக்கு 'தாருண்ய' (இளமை) எனும் பெயரை சூட்டியிருந்தான்.

திட்டமிடப்பட்ட அவனது வாழ்க்கைக்கு அத்திவாரமாக அமைந்த அந்த கடின உழைப்பு இறுதி காலத்தை இனிமையாக கழிக்க உதவியதை அவனால் இலகுவாக மறக்க முடியுமா என்ன?

# ஆசை யாரைத்தான் விட்டு வைத்தது??

**- - உண்மை! உண்மையைத் தவிர வேறேதுமில்லை - -**




ஓஜா போட் என அழைக்கப்படும் இவ்விளையாட்டு மனத்துணிவுடன் விளையாட வேண்டிய ஒன்று. இது இருவர் சேர்ந்து விளையாட வேண்டும். ( தயவு செய்து சிறுவர்கள் விளையாட வாய்ப்பளிக்க வேண்டாம் )

இவ்விளையாட்டைப் பற்றிக் கூறின், நடுவில் நாணயம் ஒன்றை வைத்து இருவரும் கையை அக்குற்றி மீது வைத்திருக்க வேண்டும். சற்று நேரத்தில் நாம் அசைக்காமலே கையுடன் சேர்ந்து நாணயம் அசையும். இதில் Hi எனும் ஒரு பெட்டியையும் உள்ளடக்கலாம். தங்களுடன் கதைக்க விரும்பும் ஓர் ஆத்மா உங்களை Hi எனும் இடத்திற்கு அசையச் செய்யும். பின்னர் தனது பெயரை அதில் காணப்படும் எழுத்துக்களின் மூலம் தெரிவிக்கும். பின்னர் நாங்கள் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் அது எமது கையை அசைப்பதன் மூலம் விடைகளை பகிர்ந்து கொள்ளும். கதைத்தது போதும் நிறுத்துவோமா எனக் கேட்கும் போது அதற்கும் போக விருப்பம் இருந்தால் yes இற்கு சென்று Good bye இற்குச் செல்லும். அதற்கு விருப்பமில்லை எனில் No சொல்லி விடும். பின்னர் தொடர்ந்து விளையாட வேண்டுமா என நீங்கள் எண்ணலாம்! இல்லை நாணயத்திலிருந்து கையை எடுத்துவிட்டால் அது போய்விடும். ஆனால் அதன் ஆசை நிராசையாக போய்விடுவதால் சில அசம்பாவிதங்கள் நிகழக்கூடும்.

இவ்வாறே திருகோணமலையில் உள்ள ஓர் சிங்களக் கிராமத்தில் அக்குடும்பத்தின் மூத்த மகன் [illegible] தனது தங்கையுடன் சேர்ந்து இவ்விளையாட்டை விளையாடுவான். ஆரம்பத்தில் சற்று நேர விளையாட்டாக இருந்த அவ்விளையாட்டு போகப் போக நேரம் அதிகரித்துச் சென்றது. நிகழ்ச்சிகள் பார்ப்பது, விளையாடுவது, கதைப்புத்தகம் வாசிப்பது என அவனுக்கிருந்த சகல பொழுது போக்குகளும் இல்லாது போய் எந்நேரமும் இவ்விளையாட்டு என ஆனது. தங்கைக்கோ இது விளையாடுவது என்றால் பயம். ஆகையால் அவன் நாளடைவில் தனியாகவே விளையாடி வந்தான். அவன் அதை விளையாடும் போதெல்லாம் அவனைப் பார்த்தால் பயமாக இருக்குமாம். ஏனெனில் அவன் அவைகளுடன் ஐக்கியமாகிப் போவதால் செய்கைகள் அனைத்தும் மாற்றமடைந்து காணப்படுமாம்.

ஒரு சில மாதங்களின் பின்னர் இதைக் கண்ணுற்ற அவனது பெற்றோர் அவனை கண்டித்து அவன் விளையாடி வந்த அவ்விளையாட்டை நிறுத்தும் படி கட்டளையிட்டனர். காலம் கடந்த ஞானம் எதற்கும் உதவாதே. அவன் தனியே நின்றவாறு கதைக்கத் தொடங்கினான்.

திடீரென்று ஒரு நாள் நான் "எனக்கு இரகசியங்கள் தெரியவந்ததால் நாளை இறந்து விடுவேன்" எனக் கூறிக் கொண்டே இருந்துள்ளான். இதைக் கேட்ட தங்கை ஓடிச் சென்று தாயிடம் முறையிட்டாள். ஆனால் தாயோ அதை அசட்டை செய்யாது அவன் மீண்டும் அதை விளையாடத் தொடங்கிவிட்டான் போலும் என அவனை திட்டித் தீர்த்தாள். அவனிடம் எவ்வளவோ கேட்டுப் பார்த்தும் அவனால் சரியாக கூறமுடியாது போனது. நேரம் இரவாகியதால் காலை எழுந்தவுடன் ஏதேனும் செய்யலாம் என பெற்றோர் திட்டமிட்டனர். ஆனால் ...

மறுநாள் அவன் எழுந்திருக்கவில்லை. அவன் கூறியவாறு நடந்தேறியது. இவ்விபரீத விளையாட்டினால் ஓர் உயிர் பறிபோனது.


– தன்யா –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீன் முரசு

# இஸ்லாம் கூறும் குற்றப் பரிகாரங்கள்

அல்லாஹ் ,வ்வாறு கூறுகின்றான். "ஈமான் கொண்டோரே! கொலைக்காக பழி தீர்ப்பது உங்கள் மீது விதிக்கப்பட்டுள்ளது. சுதந்திரமுடையவனுக்கு சுதந்திரமுடையவன் அடிமைக்கு அடிமை, பெண்ணுக்கு பெண் இருப்பினும் (கொலை செய்தவனுக்கு) அவனது (முஸ்லிம்) சகோதரன் அல்லது அவனது வாரிசுகளால் மன்னிக்கப்படுமானால் வழக்கமான முறையை பின்பற்றி ,தற்கு நிர்ணயிக்கப்பட்ட நஷ்ட ஈட்டு தொகையை கொலை செய்தவன் பெருந்தன்மையுடனும், நன்றியறிதலுடனும் செலுத்தி விடுதல் வேண்டும். ,து உங்கள் இறைவனிடமிருந்து கிடைத்த சலுகையும் கிருபையுமாகும். ஆகவே ,தன் பிறகு யார் வரம்பு மீறுகிறாரோ, அவருக்கு கடுமையான வேதனையுண்டு. (2:178)



வேண்டுமென்று கொலை செய்தவனுக்குரிய மறுமை தண்டனை மிகவும் கொடுமையானது.அல்லாஹ் ,வ்வாறு கூறுகின்றான்.

"எவரேனும் ஒருவன், ஒரு மு.ஃமினை வேண்டுமென்றே கொலை செய்வானாயின் அவனுக்குரிய தண்டனை நரகமே ஆகும். என்றென்றும் அங்கேயே தங்குவான். அல்லாஹ் அவன் மீது கோபம் கொள்கின்றான். ,ன்னும் அவனை சபிக்கின்றான். அவனுக்கு மகத்தான வேதனையையும் (அல்லாஹ்) தயாரித்திருக்கின்றான்." (4:93)

(2) கொலை தவறுதலாக நடந்திருந்தால், பின்வரும் பரிகாரத்தை முறைப்படி நிறைவேற்ற வேண்டும்.

தொடரும் .. .. – ஆசிரியர் : ஆரிஃப் –

# கத்தோலிக்கம் ஒரு மேலோட்டம்

கடந்தவார தொடர்ச்சி .. ..

தவக்கால நாட்கள், லௌகீகப் பயணத்திலிருந்து கொஞ்சம் விலகி ஆன்மீக நிழலில் இளைப்பாற வாய்ப்பளிக்கும் நாட்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி இந்தக் காலத்தை பயன்படுத்துவார்கள்.



தவக்காலத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் "சிலுவைப் பாதை" நடைபெறும். சிலுவைப் பாதையில் இயேசுவின் இறுதிப் பயணத்தில், அவர் சிலுவையில் அறையப்படுவதைச் சுற்றிய 14 நிலைகளை அல்லது நிகழ்வுகளை தியானிக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

பொதுவாக கத்தோலிக்க கோவில்களில் இந்த பதிநான்கு தலங்களின் படங்களும் பார்க்கக்கிடைக்கும்.

தவக்காலத்தின் நிறைவான வாரம் "புனித வாரம்". இதில் புனித வியாழன் (ஆயரனெல வுாரசளனயல), பெரிய.்.புனித வெள்ளி (புழழன குசனையல) எனும் நாட்கள் வருகின்றன. புனித வியாழன் இயேசுவின் கடைசி இரா உணவை நினைவு கூறும் நாள். அன்றைய வழிபாட்டில் இயேசு செய்ததைப்போல பாதிரியார் 12 பேரின் கால்களைக் கழுவுவார். "பணிவிடை செய்யவே வந்தேன்" என இயேசு சொன்னதன் நினைவாக.

அமெரிக்காவில் குடும்பத்தலைவர் மற்றவர்களுக்கு இதைச் செய்ய எல்லோரும் மாரி மாறி சேவகர்கலாவதைப் பார்த்திருக்கிரேன். இந்தியாவில் இந்தப்பழக்கம் இல்லை.

"புனித வெள்ளி" இயேசு இறந்த நாளை நினைவு கூறுகிறது. பெரிய அளவில் சிலுவைப்பாதையும், சிலுவையை முத்திசெய்யும் ஒரு வழிபாடும் நடைபெறும். இந்த வழிபாடுகளில் மெல்லிய சோக இழையோடும். மனம் வருந்தவும் மனம் திருந்தவும் நல்ல தருணங்கள் இவை.

புனித வெள்ளிக்கு அடுத்த சனிக்கிழமை நள்ளிரவு, சிறப்பு ஈஸ்டர் விழிப்பு பூசை நடைபெறும். பைபிளில் சொல்லப்பட்டிருக்கும் மனிதனின் மீட்பின் வரலாறு ஆதாம் ஏவாள் துவங்கி முழுவதும் வாசிக்கப்படும். சிறப்பாய் ஒரு பெரிய மெழுகுத் திரி ஏற்றிவைக்கப்படும்.

சரி கிறிஸ்த்துமஸுக்கு லீவ் கிடைக்கும் ஆனா ஈஸ்டருக்கு?

தொடரும் .. ..

www.tamiloviam.com

# அதிக தீர் அருந்துதல்



தண்ணீர் தாகத்தை தீர்ப்பதோடு உடலில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு தருகிறது. மனித உடலில் தண்ணீர் என்பது ஜீரணம், வியர்வை வெளியேற்றம், உடலுக்குள் சத்துணவை எடுத்துச் செல்வது, திரவ மற்றும் திடக் கழிவுகளை வெளியேற்றுவதற்கு, உடலின் வெப்பநிலையை சீராக வைத்திருப்பதற்கு போன்ற பல்வேறு ரசாயன மாற்றங்கள் நிகழ்வதற்கு அவசியமாகிறது.

ஒரு நாளைக்கு ஆண்கள் 3 லிட்டர் தண்ணீரும், பெண்கள் 2.2 லிட்டர் தண்ணீரும் அருந்த வேண்டும். உடலின் மொத்த எடையில் தண்ணீரின் பங்கு மட்டுமே எழுபது சதவிகிதமாகும். உடலின் அனைத்துப் பாகங்களிலும் அது நிறைந்திருந்தாலும் மூளை மற்றும் நுரையீரல் போன்ற உறுப்புகளிலும், இரத்தம், உமிழ்நீர், நிணநீர் போன்ற திரவங்களிலும், ஜீரண முறையில் உள்ள உறுப்புகளின் சுரப்பிகளிலும் அதிகப்படியாகவே அடங்கியுள்ளது. காலையில் எழுந்தவுடன் 1.5 லிட்டர் அல்லது 5-6 டம்ளர் தண்ணீர் அருந்த வேண்டும். அதன் பின்னரே பல் மற்றும் முகங்களை கழுவ வேண்டும். ஆனாலும் வெறும் வயிற்றில் 1.5 லிட்டர் தண்ணீர் குடிப்பதற்கு 1 மணி நேரத்துக்கு முன் னும், பின்பும், எதுவும் சாப்பிடக்கூடாது.

# பிறந்த எண் பலன்கள் 2

2ம் எண்ணில் பிறந்தவர்கள் சந்திரனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள் என்பதால் நீர் எப்படி நிலையில்லாமல் ஓடுகிறதோ அதுபோல சற்று சலன நெஞ்சம் கொண்டவர்களாவே காணப்படுவார்கள். சுறுசுறுப்பாக செயல்படுபவர்கள். எந்தவொரு காரியத்தையும் தீர ஆலோசித்து செயல்படுவார்கள். இதனால் எவ்வளவு எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் துணிந்து நின்று போராடி வெற்றியடைவார்கள். சுயநலம் இல்லாமல் எதையும் தியாகம் செய்யத் துணிவதால் வாழ்க்கையில் அவ்வப்போது ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடும். இவர்களுக்கு அபார ஞாபக சக்தி உண்டு. எப்போதும் சற்று குழப்பவாதியாகவே இருப்பார்கள். இரக்க குணம் உடையவர்கள் ஆதலால் எளிதில் உணர்ச்சி வசப்படுவார்கள்.

# சிரியுங்கோவன்.. ..

டெய்லி காலையில ஒரு டம்ளர் வெந்நீர் குடியுங்க சரியாகிவிடும்

கல்யாணம் ஆன நாளிலிருந்து காபி என்ற பேரில அத தானே டொக்டர் குடிக்கிறன்



*மாணவன் : செய்யாத தப்புக்கு தண்டனை தருவீங்களா சார்?*

ஆசிரியர் : தரமாட்டேன். ஏன்?

*மாணவன் : நான்* Home work *செய்யல சார்.*



ஒண்ணு நாம சேர்ந்து வாழணும். இல்லே

சேர்ந்து சாகணும்!"

"ரெண்டும் ஒண்ணுதான்யா!"

ஆசிரியர் : *எங்கட காலத்தில எல்லாம் நான் 7கி.கி நடந்து சென்று தான் படித்து வந்தேன்.*

*மாணவன் : அப்படீன்னா உங்களுக்கும் படிப்புக்கும் ரொம்ப தூரமா சார்.*

# இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : தைரியம் நிறைந்த செயலால் புகழ் பெறுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களால் உதவி உண்டு.

**ரிஷபம்** : செலவில் சிக்கனம் வேண்டும். கடன் வாங்குவதை தவிர்க்க வேண்டும். உறவினர்கள், புதிய சொந்தங்களை அறிமுகம் செய்வர்.

**மிதுனம்** : கிடைக்கிற சிறு நன்மையையும் பெரிதென போற்றுவீர்கள். குடும்ப உறுப்பினர்களிடம் பழைய விவகாரம் பற்றி பேச வேண்டாம்.

**கடகம்** : பேச்சில் சத்தியமும், வசீகரமும் மிகுந்திருக்கும். சமூகப்பணி புரிகின்ற ஆர்வத்தை வளர்க்கும். விருந்து, விழாவில் கலந்துகொள்வீர்கள்.

**சிம்மம்**: மனதில் தைரியம் அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கள நிகழ்வு உண்டாக்கும். உடன்பிறந்தவர்கள் அன்பு பாராட்டுவர்.

**கன்னி** : நல்ல முயற்சிகள் அத்தனையும் உரிய நன்மையை பெற்றுத்தரும். அளவுக்கு மீறி புகழ்ந்து பேசுபவர்களிடம் விலகுவது

**துலாம்** : வெகுநாள் நினைத்த திட்டங்களை செயல்படுத்துவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பயணங்களை பயன் அறிந்து மேற்கொண்டால் போதும்.

**விருச்சிகம்** : குடும்ப செலவு அதிகரிக்கும். புதிய அனுபவம் பெறுவீர்கள். வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும்.

**தனுசு** : மனதில் இரக்கமும், கருணையும் அதிகரிக்கும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். தாயின் அன்பு, ஆசி, புதிய பணிகள் நிறைவேற துணை நிற்கும்.

**மகரம்** :தந்தையின் பூர்வ புண்ணிய பலன், சில நன்மைகளைத் தரும். புதிய வாகனம், வீடு வாங்குகிற முயற்சி நிறைவேறும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

**கும்பம்** : பகைவர்களிடம் விலகுவதால், மன அமைதியை பாதுகாக்கலாம். தகுதி மீறிய செயலில் ஈடுபடக்கூடாது. கருத்துகளை மதிப்பதால், ஒற்றுமை வளரும்.

**மீனம்** : ஆடம்பர செலவுகளை தவிர்ப்பது நல்லது. பிறர் கருத்தில் உள்ள நியாயத்தை மதித்து நடக்க வேண்டும். வாகன பராமரிப்பு செலவு ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சமையல் சமையல்

## வெண்டைக்காய் சாம்பார்

**தேவையான பொருட்கள்**

துவரம்பருப்பு - 150 கிராம், வெண்டைக்காய் - ¼ கிலோ, பெ.வெங்காயம் - 1, ப.மிளகாய் - 3, தக்காளி – 3, புளி - 25 கிராம், சாம்பார் பொடி - 2 மே.கரண்டி, உப்பு - தேவையான அளவு, கொத்தமல்லி - தேவையான அளவு, சி.வெங்காயம் - 5, எண்ணெய் - தேவையான அளவு, கடுகு, உளுந்து - தேவையான அளவு, கருவேப்பிலை - தேவையான அளவு

**செய்முறை**



பருப்பை வேக வைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். வெண்டைக்காயை பெரிய துண்டுகளாக நறுக்கி, சிறிதளவு எண்ணெய்விட்டு வதைக்கி வைத்துக்கொள்ளவும். பின்னர் வேக வைத்த பருப்பில் சாம்பார் பொடியை போட்டு புளிக்கரைசலை விட்டு தக்காளி, வெங்காயம், ப.மிளகாய் ஆகியவைகளை சேர்த்து 10 நிமிடம் கொதிக்க வைக்க வேண்டும். பிறகு வெண்டைக்காய் சேர்த்து 5 நிமிடம் கொதிக்க வைக்க வேண்டும். அதன் பிறகு கடுகுஉளுந்து, கருவேப்பிலை, சி.வெங்காயம், ஆகியவைகளை சேர்த்து தாளிக்கவும். தாளித்தவுடன் தேங்காய் துறுவலை சேர்த்து 2 நிமிடம் கொதிக்க விடவும். பிறகு அடுப்பிலிருந்து இறக்கி வைத்து கொத்தமல்லியை சேர்க்கவும்.

## வெரிகோஸ் வெயின்



*கடந்தவார தொடர்ச்சி*

**வெரிகோஸ் வெயின் நோய் வருவதற்கான வாய்ப்புகள்**

- மேலும் பிள்ளைப்பேறு, மெனோபாஸ், குடும்ப கட்டுப்பாட்டுக்கான அறுவைசிகிச்சை போன்ற காரணங்களால், ஆண்களைவிட பெண்களுக்கே இந்நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகம்.
- அதிக நேரம் ஒரே இடத்தில் நின்று கொண்டே வேலை செய்பவர்கள், அசைவற்று ஒரே இடத்தில் அமர்ந்திருப்பது போன்ற வாழ்க்கை முறை உள்ளவர்களுக்கு வெரிகோஸ் வெயின் நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

**தடுக்கும் முறைகள்**

இந்த நோய் வந்துவிட்டால் அதனை அவ்வளவு எளிதில் அகற்ற முடியாது. ஒருவேளை மேலும் அதிகரிக் காமல் பார்த்துக்கொள்ளலாம். எனவே முடிந்தவரை இந்த நோயை வராமல் தடுப்பதே நலம்.

எனவே எடை அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதிக நேரம் ஒரே இடத்தில் அமர்ந்திருப் பதையோ, நின்றுகொண்டு இருப்பதையோ தவிர்த்து எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டே இருப்பது நல்லது. தொடைகளை இறுக்கும் ஆடைகளை அணியக் கூடாது.

**முற்றும் . . .**


## கரும்புள்ளிகளை விரட்டும் உப்பு

**அழகாக இருக்கும் நம் முகத்தில் கரும்புள்ளிகள் வந்து அலங்கோலப்படுத்துகின்றன.**

**இந்த கரும்புள்ளிகளை விரட்ட பலவிதமான அழகு குறிப்புகள் உள்ள நிலையில் அதில் ஒன்றான கரும்புள்ளிகளை நீக்கும் உப்பு பற்றி தெரிந்துகொள்வோம்.**

அழகு

1. 1 மே.கரண்டி உப்பை ஒரு கோப்பையில் போட்டு, அத்துடன் 1 மே.கரண்டி ரோஸ் வாட்டர் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். பின் முகத்தை நீரில் கழுவிக் கொள்ள வேண்டும். பின்பு கலந்து வைத்துள்ள கலவைக் கொண்டு முகத்தை மென்மையாக ஸ்கரப் செய்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப்படி வாரம் ஒரு முறை செய்து வந்தால், முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் நீங்கிவிடும்.






2. 1 மே.கரண்டி உப்பு மற்றும் 1 மே.கரண்டி சர்க்கரையை கலந்து, ஈரமான முகத்தில் அவற்றைக் கொண்டு மென்மையாக மசாஜ் செய்து, 15 நிமிடம் கழித்து, ஈரமான கொட்டன் கொண்டு துடைத்து எடுத்து, பின் முகத்திற்கு மாஸ்சுரைசர் தடவவும். இப்படி செய்வதால், கரும்புள்ளிகளின் வளர்ச்சியைத் தடுக்கலாம்.

3. 1 மே.கரண்டி தேனில், 2 மே.கரண்டி கல் உப்பு சேர்த்து கலந்து, பாதிக்கப்பட்ட பகுதியில் தடவி மென்மையாக ஸ்கரப் செய்ய வேண்டும். இப்படி வாரத்திற்கு இரண்டு முறை செய்து வந்தால், நல்ல பலனைக் காணலாம்.

4. முதலில் உப்பை நீரில் கலந்து, கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தடவி மென்மையாக மசாஜ் செய்து, பின் 15 நிமிடம் கழித்து, குளிர்ச்சியான தயிரை தடவி 10 நிமிடம் உலர வைத்து கழுவ வேண்டும். இப்படி செய்வதால் கரும்புள்ளிகள் நீங்குவதோடு, சருமம் வறட்சியடையாமல் குளிர்ச்சியுடன் இருக்கும்.

## டிசைன்ஸ்



# குறுக்கெழுத்து புதிர் 067

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ன | 15 | | 2 | 16 | | பு | 17 |
| 3 | | | | 20 டு | ■ | ■ | | |
| | ■ | 4 | ண் | | 23 | | | ம |
| 18 | ■ | 5 | | 21 | | ■ | ■ | 25 |
| 6 | ப | 19 | | | 7 | | | |
| ■ | ■ | 8 ப | | 9 | | | 24 வ | |
| 10 | | 11 | டி | 22 | | ■ | | |
| | ■ | 12 ஹி | | | | | | ண |
| | ■ | 13 | | 14 த | | | | |

### இடமிருந்து வலமாக

1. எதற்குப் பயப்படாரிடினும் இதற்குப் பயப்பட்டுத்தான் ஆக வேண்டும்
2. ஆபத்தின் நிறம்
3. கிளிநொச்சியில் உள்ள ஓர் இடம் - ஓரெழுத்து குழம்பியுள்ளது
4. புகையிரதம் செல்லும் பாதை
5. பெண்கள் புகுந்தவீட்டிற்கு எடுத்துச் செல்வது - குழம்பியுள்ளது
6. கமலின் அண்மையில் பாரிய சர்ச்சைக்குள்ளான திரைப்படம் - திரும்பியுள்ளது.
7. சாப்பிடும் போது இதுவும் உண்டாகலாம் - குழம்பியுள்ளது
8. திருமண வீட்டில் போடப்படுவது
9. சேகரிக்கப்படுவது தரவு அல்ல - குழம்பியுள்ளது
10. கண்ணாடியின் விஞ்ஞான பெயர்
11. ரெஸ்ட் ஹவுஸ் இன் தமிழ்ப்பதம்
12. அண்மையில் திருமணம் செய்யவிருக்கும் சிங்கள பெண் அமைச்சர்
13. அண்ணாவின் மனைவியை முஸ்லிம்கள் அழைப்பது
14. கூரை இடுவதற்கு இதுவும் பயன்படுத்தப்படும்

### மேலிருந்து கீழாக

1. தவசிகள் அணிவது
2. 12 ஒரே வகை பொருட்களை குறிக்கும் ஓர் சொல் - குழம்பியுள்ளது
10. பால் திரைந்து உருவாவது 15. அமைதி
16. காயம்
17. த.தே.கூ விற்கு போட்டியாக இறங்கியுள்ள கட்சியின் சுருக்கம்
18. சைக்கிளின் ஓர் பாகம்
19. அரசாங்க தொலைக்காட்சி அலைவரிசை
20. குருவினிடத்து கல்வி பயில்பவன் - திரும்பியுள்ளது
21. வெண்ணெய்கட்டியை ஆங்கிலத்தில் இவ்வாறு கூறுவர்.
22. குழந்தைகள் நித்திரை செய்யும் போது வாயிலால் வடிவது
23. மழைநேரத்தில் வானத்தில் தெரிவது
24. மீன்பிடிக்க இதிலும் செல்வர்
25. சிவனை இவ்வாறும் அழைப்பர்

**விடையை அனுப்ப வேண்டிய முகவரி :**

*முடிவுத்திகதி : 16.07.2015*

**மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.**

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## புதிர் 066ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | 20 வ | ன | யீ | ர் | ப் | 2 பு | 22 த | 23 ர் |
| 3 த | ல | ■ | ■ | 4 க | 21 வி | தை | யி | 29 பா |
| 5 க | 24 ம் | ப | ர் | ■ | ம | ய | ர் | 30 பா |
| 6 ளி | ன | 26 ம் | ந | ■ | ர் | 7 ல் | ய | அ |
| 8 யா | ச | க | ம் | ■ | 9 ச | ங் | 10 கு | ழி |
| ட் | 11 ஆ | த | ன | 28 ம் | ன | ■ | ங் | கு |
| 12 ட் | 25 ம | 13 பா | 27 ண் | ட | ம் | ■ | கு | ன் |
| ம் | 14 ன் | ல | க | 15 வ | ளை | 16 கு | ம | ரி |
| 17 க | ய | 18 ர் | வ | த | 19 யா | க | ம் | ■ |

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:**

*செல்வி. தனுஷா மத்தியூஸ், 4ம் குறுக்குத்தெரு, திருகோணமலை*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அரசியல் அலசல்

# இனவாத நிகழ்ச்சி நிரலுக்குள் இனப்பிரச்சினை விவகாரம்

## புதிய பானைக்குள் புதிய கள்ளு எனக்கூறி பழைய கள்ளு



**திருகோணமலை** அரச அதிபராக சிங்களவர் நியமிக்கப்பட்டது போன்று இன்று வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கும் அந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை வடக்கு கிழக்கில் இனப்பரம்பல் பற்றிய கேள்வியை எழுப்பியுள்ளது.

இலங்கையில் வாழும் மக்களின் பிரச்சினைகள் பொதுவானவை என்ற அடிப்படையில் ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் செயற்படுகின்றன. இந்த இரண்டு பிரதான கட்சிகள் தான் இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சி புரிந்தும் வருகின்றன. மக்களின் பிரச்சினைகள் பொதுவானவை என்ற கருத்து இந்த இரு கட்சிகளிடமும் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று தமிழ் மக்களின் 60 ஆண்டுக்கும் மேற்பட்ட அரசியல் கோரிக்கைகளின் முக்கியத்துவத்தை குறைப்பது. இரண்டாவது தமிழ் மக்கள் சார்ந்து சர்வதேச ரீதியாக வரக்கூடிய அழுத்தங்கள், யோசனைகளை தவிர்ப்பது.

**பிரதானநோக்கம்**

இந்த இரண்டு காரணங்களின் அடிப்படையில் மக்கள் பிரச்சினைகள் பொதுவானவை என்று கூறி தமிழ் மக்களையும் அவர்கள் சார்ந்து நிற்கின்ற அரசியல் கட்சிகளையும் சாதாரண கட்சி அரசியல் செயற்பாட்டிற்குள் கொண்டுவருவது பிரதான நோக்கமாகும். 2009ஆம் ஆண்டு மே மாதத்திற்கு பின்னரான அரசியல் சூழலில் இந்த நோக்கத்தை இரு பிரதான அரசியல் கட்சிகளும் திட்டமிடப்பட்டு ஒழுங்குபடு-த்தப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்குள் நின்று கொண்டு நிறைவேற்ற முற்படுகின்றன.

இந்த நோக்கத்தை நிறைவேற்ற அரச அதிகாரிகளும் உடந்தையாக இருக்கின்றனர். 1920இல் தேசிய இயக்கத்தின் பிளவுடன் ஆரம்பித்து நீடித்து வருகின்ற இனமோதல் அல்லது இன முரண்பாடு பின்னர் அரசியல் யாப்பு ரீதியாகவும் சிங்களம் அல்லாத ஏனைய சமூகங்களை ஓரம் கட்டியது எனலாம். தற்போது நடைமுறையில் உள்ள 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் இருக்க கூடிய சட்ட ஏற்பாடுகள் கூட சிங்களம் அல்லாத ஏனைய சமூகங்களின் அபிலாசைகளுக்கு நேர்மாறானதாகவே உள்ளது என்பது எல்லோருக்கும் தெரிந்த தகவல்.

**சில உதாரணங்கள்–**

அரசியல் யாப்பில் உள்ள சட்டங்களை திருத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு சரியான அரசியல் தீர்வு காண முடியாது என்பதை இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரான காலத்தில் இருந்தே அனுபவ ரீதியாக கண்ட உண்மை. இலங்கைத் தேசியம் என்ற வரையறைகளுக்குள் நின்று கொண்டு சிங்களம் அல்லாத ஏனைய சமூகங்களும் வாழவேண்டும் என்ற நோக்கத்தில் மேற்படி இரு கட்சிகளும் செயற்படுகின்றனர் என்பதற்கு இன்றுவரை உதாரணங்கள் நீண்டுகொண்டே செல்கின்றன. இலங்கையில் வாழும் மக்களின் பிரச்சினைகள் பொதுவானவை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுவதற்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூறுவதற்கும் இடையே பாரிய வேறுபாடுகள் இல்லை.

தமிழ் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள குடியேற்றத்தை ஆரம்பித்தது அமரர் ஜே.ஆர் ஜயவர்த்தனா தலைமை-யிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் தான். அத்துடன் திருகோணமலை மாவட்டத்துக்கான அரசாங்க அதிபரையும் சிங்களவராக நியமித்ததும் ஜே.ஆர்தான். ஆனால் அப்போது எதிர்க்கட்சியாக இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதனை எதிர்த்தது. ஆனால் 1994ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொது ஜன மக்கள் முன்னணி அரசாங்கம் சிங்கள அரசாங்க அதிபரை மாற்றி தமிழ் ஒருவரை நியமிக்கவில்லை.

**இன்றும் அதே நிலைமைதான்**

அதேபோன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் ஜனாதிபதியாக பதவி வகித்த மஹிந்த ராஜபக்ச முற்று முழுதாக தமிழ் மக்கள் வாழுகின்ற வவுனியா, மன்னார் மாவட்டங்களில் சிங்கள அரசாங்க அதிபரை நியமித்தார். 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதி நல்லாட்சி என கூறி ஆட்சிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் இதுவரை மாற்றங்கள் எதனையும் செய்யவில்லை.

இரண்டு மாவட்டங்களின் அரச அதிபர்களையும் தமிழர்களாக நியமிப்போம் என்று ஜனாதிபதி தேர்தலின்போது தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு வாக்குறுதி வழங்கிய ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்ததும் வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்தை தொடர்ந்தும் இராணுவ நிர்வாகத்திலேயே நடத்தி வருகின்றது.

இதன் காரணத்தினால்தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மக்கள் பிரச்சினை என்று கூறி தமிழர்களின் அரசியல் பிரச்சினையை பத்தோடு பதினொன்றாக மாற்ற முற்படுகின்றனர். இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் பிரச்சினைகள் உண்டு. ஆனால் இனமுரண்பாட்டு விடயத்தை மக்களின் சாதாரண அடிப்படை பிரச்சினைகளுடன் ஒப்பிடுவது ஒரு தேசிய இனத்தின் இறைமையை அந்த தேசிய இனத்தின் அரசியல் உரிமையை திட்டமிட்டு அழிக்கும் செயற்பாடு என கூறலாம்.

**நல்லாட்சியிலும் மாற்றமில்லை**

ஆகவே மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் நல்லாட்சி என்பது ஒரு இனத்துக்குரியதாக மட்டும் இருப்பதுடன் மக்களின் பொதுவான பிரச்சினைகள் என்ற வரையறைக்குள் இனப்பிரச்சினையை கொண்டு வந்து அபிவிருத்தியை மட்டும் செய்தால் போதும் என்ற நிலை உருவாக்கப்படு-கின்றது. இந்த அணுகுமுறையைத்தான் ஜே.ஆர் ஜயவர்த்தனாவும் சந்திரிக்கா-வும் மஹிந்த ராஜபக்சவும் செய்து வந்தனர்.

இந்த நிலையில் 2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான அரசியல் சூழல் என்பது மேற்படி இரண்டு கட்சிகளுக்கு மேற்படி அணுகுமுறை-யை தங்கு தடையின்றி பின்பற்ற வசதியாக அமைந்து விட்டது என்ற முடிவுக்கு வரலாம்.

பழைய பானைக்குள் புதிய கள்ளு என்ற பழமொழியின் அர்த்தம் என்ன என்று அரசியல் விஞ்ஞான மாணவன் ஒருவன் கேட்டான். அதற்கு விளக்கமளித்த விரிவுரையாளர் தமிழ் மொழியில் உள்ள பழமொழிகளுக்கு பல்வேறு வகையான விளக்கங்களை கொடுக்கலாம். ஆனால் நீ கேட்ட அந்த பழமொழிக்கு தமிழர்களின் அரசியலுக்குள்ளேயே விளக்கம் உண்டு என்று கூறி முடித்தார். இப்போது பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது.

பல தமிழ் அரசியல்வாதிகள் 60 ஆண்டுகளுக்கு முன்னர் பேசிய வீர வசனங்களை மீண்டும் கூற ஆரம்பித்து விட்டனர். புலிகளை மாவீரர்கள் என்றும் வெளிப்படையாக பேசுகின்றனர்.

மாற்றுச் சிந்தனை இல்லாத இந்த அரசியல் செயற்பாடுகளினால் தான் தமிழர் பிரச்சினையை உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும் மூடி மறைக்க சிங்கள தலைவர்களுக்கு வாய்ப்பாகவும், புதிய கள்ளு என்று கூறி பழைய கள்ளை புதிய பானைக்குள் ஊற்றுவதற்கு வசதியாகவும் உள்ளது.

இதற்கிடையில் மீண்டும் கட்சிக்குள் தாவியுள்ளார் மகிந்த ராஜபக்ச அவர்கள். அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வேட்பு மனுவில் மகிந்த ராஜபக்ஷ கைச்சாத்திட்டுள்ளார். அக்குறித்த கட்சியின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த முறை குருணாகலை தேர்தல் தொகுதியில் போட்டியிடவுள்ளார். இதற்கிடையில் பிரசன்ன ரணதுங்க, துமிந்தசில்வா உள்ளிட்டவர்களுக்கு இந்த முறை சுதந்திர கட்சியில் வேட்புரிமை வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது மகிந்த மற்றும் மைத்திரி தரப்புக்கு இடையில் மீண்டும் குழப்பத்தை தோற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனில், தமிழ் மக்கள் எமது பிரச்சினை அப்படியே கிடப்பில் போடப்பட்டு விடலாம். தமிழர்கள் நாமும் நம் தலைமை என இருக்கும் சில அரசியல்வாதிகளும் மைத்திரியை நம்பி இருந்தால் எம் இனவொறுப்புக்கான பதில் கிட்டுமா?

- www.ibctamil.com -

– – தொகுப்பு : தன்யா– –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. சுட்டுக 82 + 8.2

02. காரணிகளைக் காண்க 2ab + 3a

03. தீந்தை கொண்ட ஒரு தகரப் பேணியின் உயரம் 20cm ஆகும். அத்தகைய 5 தகரப் பேணிகளை ஒன்றன் மேல் ஒன்றாக கைக்கும் போது மொத்த உயரம் மீற்றரில் எவ்வளவு?

04. ஒரு பேனையின் விலை ஒரு பென்சிலின் விலையின் மூன்று மடங்காகும். ஒரு பேனையின் விலை ரூ12 எனின், ஒரு பென்சிலின் விலையைக் காண்க.

05. 2,3,6,6,8 என்னும் எண்களின்
1. இடையத்தைக் காண்க
2. இடையைக் காண்க

06. மூலங்கள் 2,-3 ஆன இருபடிச்சமன்பாட்டினை எழுதுக

**பகுதி 02**

a. மாணவன் ஒருவன் முதலாம் மாதத்தில் ரூ10, இரண்டாம் மாதத்தில் ரூ15, மூன்றாம் மாதத்தில் ரூ 20 என்றவாறு பணத்தை சேமித்தான்.
1. அவெண்களின் மூலம் வகைக்குறிக்கப்படும் விருத்தி யாது?
2. அவ்விருத்தியில் 21ம் உறுப்பு யாது?
3. மாணவன் சேமிக்கும் மொத்தத் தொகை எத்தனை மாதங்களுக்குப் பின்னர் ரூ450 ஆக இருக்கும்?
4. மேலதிகமாக 131 மாணவர்கள் பங்குபற்றினால் மேலதிகமாக காட்சியில் 3 நிரைகளைச் சேர்க்கத்தக்கதாக இருக்கும் என அதிபர் கூறுகின்றார். இக்கூற்று உண்மையன்று எனக் காட்டுக.

b. பெருக்கல் விருத்தி ஒன்றின் இரண்டாம் உறுப்பு 5 உம், ஐந்தாம் உறுப்பு 40 உம் ஆகும்.
1. பொதுவிகிதம் 2. முதலாம் உறுப்பு 3. முதல் ஏழு உறுப்புக்களின் கூட்டுத் தொகை என்பவற்றைக் காண்க.

## பாடம் : வரலாறு

01. மகாவலிகங்கை பாயும் சமவெளியிலும் சிவனொளிபாதப் பாதை சந்திக்கும் இடத்திலும் இருப்பதும் தலைநகராவதற்கு முன்பாக உப நகராக இருந்ததுமான இலங்கை இராச்சியம் எது?
1. தம்பதெனியா 2. யாப்பகூவ 3. குருநாகல் 4. கம்பளை

02. வரலாறு ஒரு தனிப்பாடமன்று. எல்லாப் பாடங்களும் அடங்கும் ஒரு கூட்டாகும் என எடுத்துரைத்த வரலாற்று ஆசிரியர் யார்?
1. ஜீ.எம்.திரெவெலியன் 2. மகாவம்சம் 3. கற்கருவிகள்
4. கட்டடத்தின் சிதைவுகள்

03. தனது இனம் தூய ஆசிரியர்களிடமிருந்து வரும் உலகத்தில் மிக உயர்ந்த மனித இனமென மக்களை நம்பவைக்கச் செயற்பட்ட அரசுத் தலைவர் பின்வருவோரில் யார்?
1. இத்தாலியின் பெனிற்றோ முசோலினி
2. ஜேர்மனியின் அடொல்ப் ஹிட்லர்
3. ரூசியாவின் விளாடி மீர் லெனின் 4. சீனாவின் மாவோ - சே - துங்

04. சிகிரியா, அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி முதலான இடங்கள் பாரம்பரிய சின்னங்கள் அடங்கிய தலங்களாக பிரகடனப்படுத்தப் பட்டிருப்பது?
1. தேசப் பண்பாட்டு பெருமையும், மகிமையும் பிரதிபலிப்பதால்
2. வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பலர் அங்கு வருவதால்
3. அவர்கள் இலங்கையின் புராதன இராசதானிகள் என்பதால்
4. இந்நடவடிக்கை இவ்விடங்களிலே தொல் பொருள் ஆய்வுகளைச் செய்வதற்கு உதவியாகும் என்பதால்

05. உள்நாட்டு நீர் வலயத்திலும் வானிலும் செய்த தவறுகள் தொடர்பான முக்குகளை விசாரிக்கும் நீதிமன்ற அதிகாரம் இலங்கையில் பின்வரும் எந்நீதிமன்றத்திடம் உள்ளது?
1. மேல் நீதிமன்றம் 2. உயர் நீதிமன்றம்
3. மாவட்ட நீதிமன்றம் 4. நீதவான் மன்றம்

04. வடமேற்குத் தேசவெல்லையினூடாக இந்தியப் பிரதேசங்களில் நடைபெற்ற படையெடுப்புகளும் புலப்பெயர்ச்சிகளும் பெரும்பாலும் நடைபெற்ற கணவாய்?
1. கைபர் 2. கோமல் 3. போலான் 4. மக்ரான்

## பாடம் : விஞ்ஞானம்

### பகுதி - 02

01. மின்வடங்கள் இணைக்கப்பட்ட ஒரு கம்பத்தில் ஏறி பழுது பார்க்கும் போது மின் வழங்கும் நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் நிலத்தில் விழுந்தார். அவரை உடனடியாக ஒரு கதிரையில் இருத்தி சில நிமிடங்களில் மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு சிகிச்சை பெற்ற போதிலும் அவரின் இடுப்பின் கீழ்ப்பகுதி செயலற்றுப் போய்விட்டது.

1. விபத்தின போது இடுப்பின் கீழ்ப்பகுதி செயலற்றுப் போகும் நிலைமை ஏற்படுதற்கு அருடைய உடலின் எக்கட்டமைப்பு சேதமடைந்தமை காரணமாகும்?

2. கதிரையில் அமரச் செய்வதற்கு பதிலாக நோயாளியை ஒரு பலகையில் மேல் நோக்கி பார்க்குமாறு படுக்க வைத்துக் கொண்டு வந்திருந்தால் நோயாளியின் இடுப்பின் கீழ்ப்பகுதி செயலற்றுப் போகும் நிலைமை அடையமாட்டாதென மருத்துவர் கூறினார்.
நோயாளியை படுக்கையில் படுக்க வைத்துக் கொண்டு வரும் போது இடுப்பின் கீழ்ப்பகுதி செயலற்றுப் போகும் அபாயம் ஏன் குறைவாக இருக்கும்?

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் எழுத்தியல்

**இனவெழுத்துக்கள்.**

மெய்யெழுத்துக்களுள் வல்லினம் ஆறுக்கும் முறையே மெல்லினம் ஆறும் இனவெழுத்துக்கள் ஆகும். அந்த இனமுறை வருமாறு
க் - ங், ச் - ஞ், ட் - ண், த் - ந், ப் - ம், ற் - ன்
இடையினம் ஆறும் இனவெழுத்துக்கள் இல்லாதவை.

**குறுவிடை வினாக்கள்**

1. முதலெழுத்து சார்பெழுத்து என்பவற்றை விளக்குக?
2. மாத்திரை என்றால் என்ன?
3. சார்பெழுத்தின் வகைகள் பத்தும் எவை?
4. 'அளபெடை' என்றால் என்ன?
5. 'சந்தியாக்கரம்' என்பதை விளக்குக?
6. தமிழில் கிரந்த எழுத்துக்கள் பயன்படுத்தப்படுதலை சில எடுத்துக் காட்டுகளினூடாக விளக்குக?
7. குற்றியலுகரத்தின் வகைகளை உதாரணத்தின் மூலம் விளக்குக?
8. அகச்சுட்டு, புறச்சுட்டு என்பவற்றிற்கு ஐவைந்து உதாரணம் தருக?
9. வினாவெழுத்துக்கள் ஐந்தினையும் குறிப்பிட்டு ஒவ்வோர் உதாரணம் தருக?
10. வல்லின மெய்கள் எவை? அவற்றின் இனவெழுத்துக்கள் எவை?



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

**Fill in he blanks with the correct forms of 'be' in the following passage. You may have to use a word more than once.**

I (1) ........................ a butterfly. Can you guess who my friend is? He (2) .................. also a butterfly. We fly from flower o flower. They (3) ........................ our source of food. Although we (4) ............................ butterflies now, at an earlier stage we (5) ............................ caterpillar on the same plant. At that time, my friend (6) ............................ a little longer than I He (7) ............................ very proud of it. He once laughed at me and said, "Look at yourself. You (8) ............................ shorter than I" I (9) ............................ a bit hurt.
"No, I (10) ............................ not short", I argued.
In time both of us wings and beautiful bodies, but now my friend (11) ........................ more beautiful than I.

**Forms of 'be' :- am, is, are, was, were**

3. நோயாளியின் சிறுநீர் வெளியேற்றத்தையும் கட்டுப்படுத்த முடியவில்லை. இதற்கான காரணம் யாதாக இருக்கலாம்?

02. மனிதனின் உடலில் ஒரு சீர்த்திட நிலையைப் பேணும் போது குருதிக் குளுகோசின் மட்டம் மிகவும் முக்கியம் வாய்ந்தது. குளுகோசு மட்டத்தை சீராக்கல் இரு ஓமோன்களின் மூலம் நடைபெறுகின்றது.

1. இந்த இரு ஓமோன்களையும் குறிப்பிடுக.

2. இந்த ஓமோன்கள் சுரக்கப்படும் அங்கத்தை அங்கங்களை குறிப்பிடுக.

3. ஒவ்வொரு ஓமோனின் மூலமும் நிறைவேற்றப்படும் தொழிலை தனித்தனியாக எழுதுக?

03. ஒரு செடி முளைக்க வைக்கப்பட்ட சாடியை திறந்த சூழலில் வைக்கும் போது அதன் தண்டு மேல் நோக்கி நேராக வளர்கின்றது. எனினும் அதன் ஒரு பக்கத்திற்கு மாத்திரம் ஒளியைக் கிடைக்கச் செய்யும் போது தண்டு ஒளியை நோக்கி வளைந்து வளரும்.

1. தண்டு நேராக வளர்வதற்கும் வளைந்து வளர்வதற்குமான காரணங்களை விளக்குக.

2. புளி போன்ற அவரையக் குடும்பத்திற்குரிய தாவரங்களின் இலைகள் இராக்காலங்களிலும் சுருங்குகின்றன. அவ்வசைவிற்கு வழங்கும் பெயரை எழுதுக.

3. பொதுவாக தாவரங்களின் வேர்கள் நேர்ப் புவித்திருப்பதற்குரிய வித்தில் வளர்கின்ற போதிலும் எதிர் (மறை)திருப்பத்திற்குரிய விதமாக வளரும் தாவர வேர்களும் உள்ளன. அத்தகைய வேர்கள் உள்ள ஒரு தாவரத்திற்கு ஓர் உதாரணத்தை தருக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 28

01. சித்திரை புத்தாண்டு காலத்தில் பூக்கும் தாவரம்
i. பலா ii. தென்னை iii. மா iv. வேம்பு

02. தண்டின் மூலம் இன்ப்பெருக்கம் செய்யும் தாவரம்
i. தூத்து மக்கொத்தான் ii. சோலியாஸ்
iii. பெப்ரோமியா iv. மரவெள்ளி

03. வாசனைப்பொருளாகப் பயன்படும் தாவரம்
i. குரோட்டன் ii. வெட்டிவேர் iii. சென்சேவியா iv. மிளகு

04. ஊர்ந்து செல்வதன் மூலம் இடம்பெயரும் பிராணிகளின் கூட்டம்
i. தவளை, பாம்பு, நத்தை ii. ஆமை, வாத்து, பூரான்
iii. முதலை, எறும்பு, நீர்நாய் iv. அட்டை, நத்தை, மண்புழு

05. தவளை முட்டையின் நிறம்
i. மஞ்சள் ii. வெள்ளை iii. கறுப்பு iv. செம்மஞ்சள்

06. வெடிபொருட்களை கண்டுபிடிக்க உதவும் பிராணி
i. எலி ii. குதிரை iii. மரநாய் iv. காகம்

07. தாவரங்களின் வேர்கள் தண்டுகள் என்பவற்றை சேதப்படுத்தும் பிராணி?
I. கறையான் ii. மயிர்க்கொட்டி iii. செவ்வெறும்பு iv. நத்தை

08. மயக்கம் அடைந்த ஒரு நோயாளிக்கு செய்யக்கூடிய முதலுதவி அல்லாதது
i. நீரினால் முகத்தை துடைத்தல்
ii. காற்றோட்டமுள்ள இடத்தில் படுக்க வைத்தல்
iii. நோயாளிக்கு நீரை பருக வைத்தல்
iv. சுவாசிப்பதற்கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்தல்

**பகுதி - 02**

**01. பின்வரும் தொடர்களுக்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக**
1. கோட்டையைச் சூழ்ந்த அரணாய் அமைந்த காடு – ...............
2. அறுபதாவது ஆண்டில் இறுதியில் கொண்டாடப்படும் விழா
.........................................................................

**02. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

மீனினம் ஓடிப் பறக்குதம்மா! – ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா!
வானுங் கடலாக மாறுதம்மா! - இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா!

அம்புயம் வாடித் தளர்ந்தம்மா! – அயல்!
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா!
இம்பருலகின் இயல்பிதம்மா! – மதில்
கின்னார் இனியாரும் உண்டோ அம்மா?

சின்னஞ்சிறு வில்லாய்க் கண்டதம்மா! – பின்னர்
செம்பொற் குடபோலே தோன்றுதம்மா!
என்ன அதிசயம் பாராயம்மா! - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா!

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா! –உடல்
வட்டந்திருந்தி வருகுதம்மா!
தளர்ந்து தளர்ந்து பின் போகுதம்மா! – கண்ணல்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா!

1. பாடலில் கவிஞரால் வருணிக்கப்படும் வான் பொருள் எது? .............
2. "மீனினம்" எனும் சொல்லை பிரித்து எழுதுக? ..............................
3. "தாமரை" என்ற சொல்லின் ஒத்த சொல்லை எழுதுக? ....................
4. "வளர்ந்து" என்ற சொல்லுக்குரிய எதிர்க்கருத்தை எழுதுக? ..................
5. இங்கு இடம் பெற்றுள்ள உவமை ஒன்றை எழுதுக? ...................
அடுக்கு மொழிச்சொல் ஒன்று தருக? .................
6. இங்கு கடலாக மாறுவது எது? ..........................
7. பாடலிலுள்ள குணப்பெயர்ச் சொல்லொன்று எழுதுக? ..........................

---

**சென்றவார விடைகள்**

01. 1 02. 1 03. 2 04. 1 05. 4 06. 1

**பகுதி 02**

01. 1. நான் 2. அருவிகள் 3. அழகான 4. பச்சைக் கம்பளம் 5. கிளி
02. 1. ✗ 2. ✓ 3. ✓ 4. ✗
03. 24KM



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

---


# சிறுவர் முரசு



## குட்டிக் கதை

## தூய்மையான நட்பு





ஒரு காட்டிலே காகம் ஒன்றும் மான் ஒன்றும் நல்ல நண்பர்களாக இருந்தன. இருவரும் ஒரு மரத்தடியில் பேசிவிட்டு மரத்தின் கிளையில் காகமும் அம்மரத்தடியில் மானும் உறங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தன. இவ்வாறு இருவரும் ஒருவருக்கொருவர் நல்ல நண்பர்களாக இருந்தன. அன்றைய தினம் நடந்தவற்றை இருவரும் பரிமாறிக்கொள்வது வழக்கம்.

ஒரு நாள் மான் மரத்தடிக்கு வரவில்லை. சற்று நேரம் பொறுத்திருந்து பார்த்துவிட்டு காகம் யோசித்தது. மானுக்கு என்ன நடந்ததோ என கவலையுற்றது. ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ என அஞ்சி உடனடியாக பறந்து மானைத் தேடி அங்கும் இங்கும் அலைந்து திரிந்தது அந்த காகம். தனது நண்பனுக்கு என்ன நேர்ந்ததோ என்ற பயம் அதனை மிக வேகமாக பறக்க வைத்தது.

கடைசியில் மான் ஒரு வேடன் விரித்த வலையில் சிக்கி இருப்பதைக் கண்டது. காகத்தைக் கண்டதும் மான் விம்மி விம்மி அழத்தொடங்கியது. என்னை எப்படியாவது காப்பாற்று நண்பா எனக் கூறியது.

மான் அழுவதைக் கண்டதும் காகத்திற்கும் அழுகை வந்தது. காகம், கவலைப்படாதே நண்பா நான் உன்னை எப்படியாவது காப்பாற்றுவேன் எனக் கூறி சற்று நேரம் யோசித்தது. ஆ... ... ஒரு யோசனை, நீ நான் சொல்வதைப் போல் நடித்தால் போதும் என்றது. மானும் ஆர்வமாகக் கேட்கத் தொடங்கியது. இன்னும் சற்று நேரத்தில் வேடன் வந்து விடுவான். நீ செத்தவன் போல கிட நான் உனது கண்களை மெதுவாகக் கொத்துவேன். வேடன் நீ இறந்துவிட்டாய் என எண்ணி வலையில் இருந்து உன்னை வெளியே எடுப்பான். அவன் வலையை முழுவதுமாக கழட்டி முடிக்கும் அந்த சமயத்தில் "கா.... கா.." எனக் கரைவேன். அப்போது நீ எழுந்து வேகமாக ஓடித் தப்பித்துக் கொள் எனக் கூறி ஓர் மரக்கிளையில் சென்று உட்கார்ந்து வேடனின் வருகைக்காக காத்திருந்தது.

சற்று நேரத்தில் வேடன் வந்தான். வேடனின் வருகையை சைகை மூலம் தெரிவித்த காகம் தமது திட்டத்தை செய்யத் தொடங்கியது. வந்த வேடன் மானைப் பார்த்தான். மான் இறந்து விட்டது என எண்ணி வலையை மானிலிருந்து அகற்றினான். தகுந்த தருணம் பார்த்திருந்த காகம் கா.. கா.. எனக் கரையத் தொடங்கியதும் மான் மிக வேகமாக ஓடி உயிர் தப்பியது. வேடன் ஏமாற்றத்துடன் சென்றான்.

தன்னை பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றிய காகத்திற்கு நன்றி கூறியது மான். இருவரும் சேர்ந்தே தாம் தங்கியிருந்த மரத்திற்குச் சென்றன. காகமும் மானும் சந்தோசமாகவும் மிகுந்த பாசத்துடனும் வாழ்ந்தன.

**- நல்ல நண்பர்கள் கிடைப்பது அரிதானதே -**

**சிந்திக்க .. ..**
கஷ்டங்களை
தாங்கிக் கொள்ளும்
திடமனம் இல்லையென்றால்
கடமைகளை நிறைவேற்ற முடியாது



சி.பிரவீனா, தரம் - 05, கோபாலபுரம்



மெ.தனுஷா, தரம் - 09



ஜெ.பிரசாலினி, தரம் - 10 திருகோணமலை

## பொது அறிவு - 30

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. LCD என்பதன் விரிவாக்கம் என்ன?
Liquid crysal Display

02. ஊக்கப்படுத்தப்பட்ட கரியானது அசுத்த கரைசல்களில் உள்ள நிறமிப் பொருட்களை நீக்குவதற்கு பயன்படுகிறது. அவ்வாறு செயல்படுவதற்குக் காரணம்? சாயம் வெளுத்தல்

03. பின்ருவனற்றுள் எவ்வுலோகம் மின்காந்தத்தை உருவாக்க மிகவும் சிறந்தது? தேனிரும்பு

04. ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் தினம்? செப்டம்பர் 05

05. அணுக்கரு ஒன்றினுள் இருப்பது?
புரோத்தன்களும், நியூத்திரன்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைந்த பின்னும் வழிபாடு



கடந்த 30 வருடங்களுக்குப் பின்பு பன்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலிப்பூசை அருட் தந்தை S.பிலிப் அடிகளார் அவர்களினால் திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவ்வாலயம் உடைந்த நிலையிலும், அங்கே வாழும் கத்தோலிக்க மக்களினால் வழிபாடுகளும், திருப்பலிப்பூசைகளும் நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

## குருப்பெயர்ச்சி பூசை

- சேனையூர் நிரூபர் -

குருமாற்றத்தை முன்னிட்டு 06.07.2015 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு வரலாற்றுச்சிறப்பு மிக்க திருகோணமலை அருள்மிகு இரத்தினசிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட கும்ப பூசை, யாக பூசை





## புதிய தலைவர் தெரிவு

மட்டக்களப்பு றொட்டறிக் பாடும் மீன் கழகத்தின் 56ஆவது புதிய தலைவரின் பதவியேற்பு நிகழ்வு கல்லடி ஓசியானிக் ஹோட்டலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட றொட்டறியன் எஸ்.சிவரூபனுக்கான அடையாளச் சின்னம் மற்றும் பதவி முத்திரைகளை, விடுகை பெற்றுச் செல்லும் 55ஆவது தலைவர் றொட்டறியன் டொமிங்கோ ஜோர்ஜ் கையளித்தார். இந்நிகழ்வில் கூடுதல் கணிசமான பணத் தொகையை சர்வதேச ஹொட்டறிக் கழகத்துக்கு வழங்கியமைக்காக றொட்டறியன் எம்.டி. வினோபா இந்திரனுக்கு ஞாபகச்சின்னம் ஒன்றையும், 2015-2016 ஆம் ஆண்டுக்கான கபினட் சபையின் உறுப்பினர்களுக்கு விருதுகளையும் மற்றும் சிறந்த பொருளாளராக பணிபுரிந்தமைக்காக றொட்டறியன் பீ. முத்துலிங்கத்துக்குரிய விருதையும் றொட்டறியன் டொமிங்கோ ஜோர்ஜ் வழங்கிக் கௌரவித்தார்.




## சின்னஞ் சூட்டும் விழா

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கருவப்பங்கேணி விபுலானந்தா மகா வித்தியாலய மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும், பாடசாலை ஆசிரியர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்வும் இன்று பாடசாலையில் இடம்பெற்றது .

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கருவப்பங்கேணி விபுலானந்தா மகா வித்தியாலய சமூகம் மேற்கொண்ட முயற்சியாலும் ,வலய கல்விப் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைவாகவும் இப்பாடசாலை எதிர் வரும் தினங்களில் புதிய மாற்றத்துடன் கல்லூரியாக பெயர் மாற்றப்பட்டு எதிர்வரும் காலங்களில் செயல்படவிருகின்றது .

இம்மாற்றத்தின் பாடசாலை செயல்பாடுகளுக்கு அமைவாக வித்தியாலய அதிபர் ஞா. சபேஸ்வரன் தலைமையில் மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும், பாடசாலை ஆசிரியர்களுக்கும் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது .





## இஞ்சி பயிர்ச்செய்கை பயிற்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள செவிப்புலன் அற்றோரின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் விசேட திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. மட்டக்களப்பு மாவட்ட செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிறுவகமும் சமூக வர்த்தக தொழில்நுட்ப அபிவிருத்தி அமைப்பும் இணைந்து செவிப்புலனற்றோரை, இஞ்சி செய்கையில் ஈடுபடுத்தும் வகையில் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இஞ்சி செய்கை வெற்றியளித்துள்ள நிலையில் அதிக வருமானம் ஈட்டும் துறையாகவும் விளங்கிவருகின்றது. இதன்காரணமாக இத்துறையில் செவிப்புலனற்றோரையும் உள்ளீர்த்து அவர்களின் வருமானத்தினை அதிகரிக்கும் வகையில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



### கல்விக் கருத்தரங்கு

## புலமைப் பரிசில் பரீட்சைக்கானது

சக்தி FM அகரம் செயற்திட்டத்தினூடாக ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை மூதூரில் அமைந்துள்ள சேனையூர் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அக்கருத்தரங்கில் வளவாளர்களாக திரு.செல்வரெத்தினம் அவர்களும் திரு.ஜெயமதன் அவர்களும் பங்குபற்றினர். மூதூர் மற்றும் மூதூரை அண்மித்த ஏறத்தாழ 2000 பேர் வரையில் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வானது குறித்த பாடசாலை அதிபராகிய திரு.இரத்தினசிங்கம் அவர்களின் கோரிக்கையின் கீழ் வலயக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியன் தலைமையில் சக்தி சிரேஸ்ட அறிப்பாளர் திரு.டீ.மோகன் மற்றும் விரிவாக்கல் பிரிவு சிரேஸ்ட உத்தியோகத்தர் திரு.சே.சதாகரன் ஆகியோரின் ஏற்பாட்டில் இனிதே இடம்பெற்றது. காலை 9.00 மணியளவில் ஆரம்பித்து மதியம் 2.00 மணி வரையில் மிகவும் பயனுள்ள முறையில் நடந்தேறியமை குறிப்பிடத்தக்கது. கையேடுகளும்

Shakthi சக்தி FM

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக்....

தேர்வில் கட்சிச் செயற்பாட்டாளர்களுக்கான ஆசன ஒதுக்கீட்டில் இரு புதிய முகங்களை உள்ளீர்க்கும் முயற்சிளைக் கட்சித் தலைமைப் பீடம் மேற்கொண்டதை அடுத்து கட்சிக்காக இறுதிவரை உழைத்த உறுப்பினர்கள் அதிருப்தியடைந்தனர். இதேவேளை சில உறுப்பினர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைக் கடிதங்களை சில பிரதேசங்களில் உள்ள விவசாய அமைப்புக்கள், கோயில் பரிபாலனசபைகள் மற்றும் விளையாட்டுக்கழகங்கள் ஊடாகப் பெற்றுக்கொண்ட உறுப்பினர்கள் சிலர் அவற்றையும் திருகோணமலைக் கட்சித் தலைமைப் பீடத்திடம் வழங்கியதாகவும் அவற்றைக்கூட தலைமைப் பீடம் கருத்திற்கொள்ளவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்தே அவ்வாறு அதிருப்தியடைந்தவர்கள் கட்சியை விட்டு வெளியேறத் தீர்மானித்தனர்.

இதேவேளை திருக்கோணமலை மாவட்டத்தில் த.தே.கூ உடன் போட்டியிடுவதற்கு நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் என்ற முஸ்லிம் கட்சியுடன் காணப்பட்ட இணக்கமானது அவர்களின் மேலதிக வேண்டுகோளை அடுத்து முறிவடைந்துள்ளது.

நல்லாட்சிக்கான மக்கள் முன்னணியினர் மட்டக்களப்பிலும் தமக்கு ஒரு இடம் வழங்கப்பட வேண்டும் என்று விடுத்த கோரிக்கையினை த.தே.கூ நிறைவேற்றவில்லை என்பதால் திருக்கோணமலையில் த.தே.கூ. உடன் போட்டியிடுவதனைத் தவிர்த்த அக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியால் முஸ்லிம் காங்கிரசுக்கு வழங்கப்பட்ட இரண்டு இடங்களில் ஒன்றினைப் பெற்று போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கைவிடப்பட்ட....

ஆரம்பித்தனர்.

பொதுவைத்தியசாலைக்கு அருகில் குழந்தை கண்டுபிடிக்கப்பட்டதால் இக்குழந்தையின் பிரசவம் பொதுவைத்தியசாலையிலேயே நிகழ்ந்திருக்க வேண்டும் என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட போதே கடந்த வியாழக்கிழமை (09) குழந்தையின் தாயைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

தம்பலகாமம் காவல்துறைப் பிரிவிற்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ள பெண்ணுக்கு ஒரு குழந்தை உள்ளதாகவும் அப்பெண் கணவரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் வைத்திய பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## திருகோணம....

சாஜித் ஆகிய மாணவர்களும், கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிலாகே ஜோன் ரீட், மன்னார் அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அமலன் லியோன், ரொ'ான் லியோன், கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த அன்டனி கஸ்தூரி ஆரச்சி, திருகோணமலையைச் சேர்ந்த கணகராஜா ஜெகன், தெஹிவளையைச் சேர்ந்த மொஹம்மட் அலி அன்வர் ஆகிய 11 பேருமே இவ்வாறு கடத்தப்பட்டு கொழும்பு சைத்திய வீதியில் உள்ள புட்டு பம்பு எனும் ரகசிய தடுப்பு இடத்திலும் திருகோணமலை கடற்படை தளத்தின் கன்சைட் எனும் இரகசிய நிலத்தடி சிறைக் கூடத்திலும் தடுத்து வைக்கப்பட்டிருந்துள்ளமைக்கான சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந் நிலையில் கோட்டை நீதிவான் நீதிமன்றில் விசேட அனுமதி ஒன்றினைப் பெற்றுக்கொண்டு புலனாய்வுப் பிரிவின் கூட்டு கொள்ளைகள் தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி காவல் பரிசோதகர் நிஸாந்த டி சில்வாதலமையிலான குழு இவ்விரு ரகசிய தடுப்பு முகாம்களையும் ஆய்வு செய்துள்ளது.

## ஒரு நாடு....

பிரதான விடயமாகக் கொண்டிருக்கும்.

சுயநிர்ணய உரிமையுடன் தனித் தேசத்தில் தனித்துவமாக வாழ்வதே கடந்த காலத்தில் தமிழ் மக்களின் தியாகங்களுக்கு விலையாக அமையும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். அத்துடன் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் போருக்கு முன்னரும் பின்னரும் காணாமல்

போனவர்கள் விடயம் தமிழ் அரசியல் கைதிகள் விடயம் தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் காணிகள் அபகரிப்பு, இராணுவ மயமாக்கல், திட்டமிட்ட குடியேற்றங்கள், பொருளாதார ரீதியில் எம்மை சுரண்டுதல் ஆகிய விடயங்களும் உள்ளடக்கப் படவுள்ளன.

வட-கிழக்கில் திட்டமிட்ட கட்டமைப்பு சார் இன அழிப்புக்கு எதிராக உள்நாட்டிலும்சர்வதேச மட்டத்திலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வந்துள்ளது. இச் செயற்பாட்டை நாம் தொடர்ந்தும் மேற்கொள்ளவுள்ளோம். மக்கள் தமிழ்த் தேசியத்தின் பால் நின்று எமக்கான ஆணையை நிச்சயம் வழங்குவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## புதைகுழியிலி....

படியே தற்போது மீண்டும் உரிய இடத்தைச் சுற்றி அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வகழ்வு நடவடிக்கையின் மூலம் நேற்றுவரை பத்துச் சடலங்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இன்றும் நாளையும் அகழ்வுப்பணிகள் நடைபெறாது என்றும் மீண்டும் 13ம் திகதி அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகும் என்றும் தெரிகின்றது.

## நியமனம்....

கடந்த 8ம் திகதி ஆரம்பிக்கப்பட்டள்ள இப்போராட்டமானது நேற்று 10ம் திகதி வரை மூன்று நாட்களாகத் தொடர்ந்து நிகழ்கின்றது.

திருகோணமலை உட்துறைமுகவீதியில் மாகாண முதலமைச்சரின் அலுவலகத்திற்கு முன்புறமாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும் அதற்குரிய எவரும் நேற்றுவரை அப்போராட்டத்தைக் கண்டுகொள்ள வில்லை என போராட்டத்தில் ஈடுபடும் சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 3ம் திகதி மாகாண சபையின் சுகாதார அமைச்சால் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு இரவோடு இரவாக நியமனங்கள் வழங்கப்பட்டடுள்ளதாகத் தெரிவித்துள்ள சுகாதாரத் தொண்டர்கள் இந்நியமனங்களுக்கு உரித்தான பலருக்கு வழங்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டி இருந்தனர்.

இதேவேளை மலேரியா தடுப்புத் திட்டத்தில் பணியாற்றியவர்களுக்கு உரிய நியமனம் சொற்ப காலத்தில் வழங்கப்படும் எனத் தெரியவந்துள்ள போதும் அந் நியமனங்களின் தற்போதைய நிலை தொடர்பாக அறியமுடியாதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சம்பூர்...

நீதிமன்றத்தீர்ப்பின் மூலம் இத்தடை நீங்கியுள்ளது. கடற்படைமுகாம் மாற்றிடத்துக்கு நகர்த்தப்படுவதில் இருந்த தாமதமும் சம்பூர் மக்கள் சிலரின் விட்டுக் கொடுப்பின் மூலம் சிலதினங்களுக்கு முன்னர் விலக்கி வைக்கப்பட்டு அதற்கும் தீர்வு காணப்பட்டு மூன்று கட்டங்களாக அப்பகுதிக்குள் மக்கள் குடியேற்றப் படக்கூடிய சூழ்நிலை உறுதிபடுத்தப்பட்ட நிலையில் ஏற்கெனவே விடுவிக்கப்பட்ட 818 ஏக்கர் நிலத்தில் மக்கள் குடியேற்றப்படுவதை எதிர்த்து கேற்வே நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு காணிகளை மக்களுக்கு வழங்கும் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தல் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது, நீதி நிலைநாட்டப் -பட்டுள்ளது, உண்மை உணர்த்தப்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் தமது கட்சியே இம் மீள்குடியேற்றத்திற்கு முழு முயற்சியுடன் செயற்பட்டது என்று தெரிவித்துள்ள அவர் 2008ல் தொடங்கி இன்று வரை நீதிமன்றத்தில் பல வழக்குகளை தொடுத்து வாதாடியும் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் குரல்கொடுத்தும் ஜனாதிபதி தேர்தலின் போது தந்திரோபாயமான முடிவை மேற்கொண்டும் தேர்தலின் பின்னர் பதறாமலும் பக்குவமாகவும் ஆனால் உறுதியாகவும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டும் சம்பூர் குடியேற்றத்தை சாதகமாக்கியமை கூட்டமைப்பினதும் அதன் தலைவர் சம்பந்தரினதும் அணுகுமுறைக்கு கிடைத்த வெற்றி என்றும் தெரிவித்துள்ள அவர் வாய்க்கு வந்ததை எல்லாம் பேசியும் எழுதியும் மனசாட்சி யை குழிதோண்டிப் புதைத்துவிட்டு அபாண்டமான பழிகளையும் கட்டுக்கதைகளையும் செய்திகளாக பரவவிட்டு அற்பசுகம் கண்டவர்களுக்கு உண்மை உச்சந் தலையில் ஓங்கி அடித்திருக்கின்றது என்றும் இதனை அரசியலாக்கி வாக்குச் சேகரிக்க எண்ணியவர்கள் தோல்வியடைந்துள்ளதாகவும் நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## 2000....

ஒவ்வொரு சபையின் எல்லைக்குள்ளும் இரண்டாயிரம் (2000) பேர் வீதம் 45 சபைகளுக்கும் 90000 ஆட்களை நியமிக்கவும், அதற்கான ஆளணிகளுக்கான இடங்களைத் தேர்வு செய்யவும் சபைகளின் செயலாளர்களுக்கு முதலமைச்சரினால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களின் கண்காணிப்பிலும் ஒவ்வொரு (காமன்பெக்டரிகளை) ஆடைத் தொழிற்சாலைகளை உருவாக்கி அதன் மூலம் 650 வேலையாட்களை நியமிக்கும் பணிகளுக்காக முதலீட்டாளர்களுடனும், தொழிற்சாலைச் சங்கத்தினருடனும் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியில் முடிந்துள்ளதால் அவசரமாக அதற்கான வேலைகளை ஆரம்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளன.

கிழக்கிலிருந்து ஒவ்வொரு வருடமும் 15000 பதினையாயிரம் பணிப்பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். அவர்களை அங்கு செல்வதை நிறுத்தும் வகையில் இத்தொழில் வாய்ப்பின் மூலம் முற்றாக பணிப்பெண்கள் வெளிநாடு செல்வதை நிறுத்திவிடலாம், வறுமை நிலையினை முடிவுக்குக் கொண்டுவந்து வாழ்வாதாரத்தைக் கூட்டலாம் என்ற நல்ல நோக்கோடு அத்தொழில் வாய்ப்பினை ஏற்படுத்த கிழக்கு மாகாண முதலமைச்சர் முன்வந்துள்ளார்.

அந்தவகையில் கிழக்கு மாகாணத்தில் வழங்கப்படவுள்ள இத்தொழில் வாய்ப்புகள் மூலம் கிழக்கில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்படுவதுடன் சுபீட்சமான வாழ்வியலுக்குள் மக்கள் திரும்பி விடுவர் என்ற நல்லெண்ணம் முழுமையாக இருப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

ஒரு நாடு இரு தேசம்
தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
TAMIL NATIONAL PEOPLE'S FRONT
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
ALL CEYLON TAMIL CONGRESS
VoteForTNPF

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு

சில வேளை விபரீதமாக யோசித்ததுண்டு. எப்படி என்கிறீர்களா? முன்னாள் இலங்கை ஜனாதிபதியை அல்லது கருணாநிதியை அல்லது தமிழக முதல்வரை எல்லாம் கொண்டு போய், அமெரிக்க ஜனாதிபதி சீட்டில் உட்காரவைத்தால் அமேரிக்கா என்ன பாடு படும் என்று? முதல்வன் படத்தில் வருவது போல ஒருநாள் ஜனாதிபதி சீட் என்று கொடுத்தால் கூட, அடுத்தநாள் அமேரிக்கா நடுத்தெருதான்...

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த இருக்கிற ஒவ்வொருவரும் தமது தேசத்தை ஒரு படி மேலே கொண்டுபோய் விட்டுதான் அவர்கள் சென்றிருக்கிறார்கள் என்றால் பொய்யில்லை. இப்பொழுது 44வது ஜனாதிபதியாக இருக்கிற ஒபாமாவும் அப்படித்தான். பெரும்பாலும் நவீன அமெரிக்காவில் பொதுவாக ஒரு சட்டம் படித்த, பொருளாதாரம் பற்றி அறிவுகொண்ட, உலக நாடுகள் பற்றி தெரிந்து கொண்ட ஒருவர் தான் ஜனாதிபதியாக வந்திருக்கிறார்கள். வருகிறார்கள். இங்க அப்படியா? கொஞ்சம் இனவாதம் தெரிந்தால் அவர் ஜனாதிபதி. தமிழ்நாட்டுப் பக்கம் முதல்வர் ஆக இப்ப எல்லாம் சினிமா தகுதி வேணும்... பிறகெப்படி நாடு உருப்படும்...

சரி நாம் இனி அமெரிக்காவின் 1801 - 1900 வரையான முக்கிய போர்கள் பற்றி சுருக்கமாக பார்க்கலாம். இந்த நூறு வருட காலப் பகுதியில் ஏறக்குறைய 63 போர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக ஒருநாள் குறையாமல் முழு நாட்களும், ஆண்டுகளும் போரிட்டுக் கொண்டிருந்திருக்கிறது. வாய் பிளக்க வேண்டாம்... அதிலும் முக்கியமாக 1812-1815 நடந்த அதாவது கனடாவை ஆட்சி செய்த பிரித்தானியாவுடன் நடந்த யுத்தம். (இந்த யுத்தம் நடந்த பொழுதுதான் வெள்ளை மாளிகை எரிக்கப்பட்டு வெள்ளை நிறம் மீள அடிக்கப்பட்டு வெள்ளை மாளிகையானது தனி வரலாறு.) அடுத்து 1846-1848 வரை தெற்கே மெக்ஸிகோ நாட்டுடன் போர் செய்து மிகப்பெரிய நிலப்பரப்பை தனதாக்கிக் கொண்டது... அந்த பறித்த நிலப்பரப்புக்குள் இன்று இருக்கும் மாநிலங்களாக Texas, California, Nevada, Utah, Arizona வில் பெரும் பகுதி, New Mexico வில் அரைவாசி, கால்வாசி Colorado, Wyoming இல் சிறு பகுதி.. அதாவது அமெரிக்க வரை படத்தின் கால்வாசி என்றும் சொல்லலாம். இந்த காலப் பகுதிக்குள் தான் நீண்ட போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு rio grand ஆற்றுடன் இரு நாடுகளும் தேச எல்லையை வரையறுத்துக் கொண்டன...

1898 கியூபா நாட்டுக்காக ஸ்பானிய நாட்டின் காலனித்துவத்துக்கு எதிராக போர் செய்து வெற்றி அடைந்தது. அதனையும் விட அடிமைகளாக இருந்த ஆபிரிக்க இனத்தவர் எழுச்சி பெற்றதும், ஆதி பூர்வீகக் குடிகள் அழிக்கப்பட்டு ஒரு சில மாநிலங்களுக்குள் கலைக்கப்பட்டதும், ஜனாதிபதி ஆபிரஹாம் லிங்கோன் அடிமைகளுக்கு சுதந்திரம் கொடுத்ததற்காக வெள்ளை முதலாளி வர்க்கத்தினை சேர்ந்த ஒருவனால் சுட்டுப் படுகொலை செய்யப் பட்டதும், தென்னமெரிக்க கண்டங்களின் சில நாடுகளின் உள்நாட்டுப் போர்களுக்காக உதவி செய்து போர் செய்ததும் நடை பெற்றன. மொத்தத்தில் அமெரிக்கா செய்த போர்களில் 98% வீதமானவை வெற்றியே அடைந்திருக்கிறது. (உள்நோக்கம் நல்லது கெட்டது என்பதெல்லாம் வேற கதை)

இதுநாள் வரை அதாவது முதலாம் உலகப் போர் தொடங்கிய 1914ம் ஆண்டு வரை அமேரிக்கா போர்களை செய்ததே தவிர வியாபாரமாக்கவில்லை. அதுவரை எப்படியோ சமாளித்துக் கொண்டுதான் இருந்திருக்கிறார்கள் அந்த நாட்டு அரசாங்கமும் மக்களும். இந்த நூற்றாண்டு-களுக்குள்தான் டாலர் உலகமயமாக்கப் பட்டதும், பல கண்டுபிடிப்புகள் நடைபெற்றதும், தொழித் துறையில் இயந்திர சாதனங்களை பயன்படுத்த முற்பட்டதும், கல்வி வளர்ச்சி அதிகரித்ததும் என்று அமேரிக்கா வளர்ச்சி கண்டு கொண்டிருந்தது. தொழில் நுட்ப பாடத்தை தனிக் கல்வி அலகாகவும் பாடசாலைகளில் சேர்த்துவிட்டது. அந்த நூற்றாண்டில் அமெரிக்காவின் பெரும் வளர்ச்சிக்கு முக்கிய மூன்று காரணங்களை சொல்கிறார்கள். 01. வற்றாத நீர்வளம் 02. உழைப்பு என்பதைத் தவிர வேறு எதுவும் தெரியாத மக்கள், அல்லது சமூகம் 03. இந்த தொங்கலில் இருந்து அந்தத் தொங்கல் வரை தேசமெங்கும் போடப்பட்ட இரயில் பாதைகள்... (குதிரை வைத்து இழுக்கத்தான் முதலில் தண்டவாளம் போட்டார்கள்)

இவைதான் நவீன அமேரிக்கா என்கிற நிலைக்கு அமெரிக்காவை உந்தித் தள்ளியதாக சொல்கிறார்கள். உள்ளுக்குள் என்ன பிரச்சனை என்றாலும் தொழித் துறையை என்றைக்கும் அந்த அரசு சரிய விட்டதில்லை. அப்படி ஒரு ஜனாதிபதி சரிய விட்டாலும் அடுத்து வருபவர் தூக்கி நிறுத்தி விட்டு போவார்... அது அமெரிக்க தேசத்துக்கு கிடைத்த வரம் என்றும் சொல்லலாம். புதிய கண்டு பிடிப்புகளுக்கு எக்கச் செக்கமாக பணமும் உதவியும் செய்தது.

இதனையும் விட அந்த நூற்றாண்டில் அமெரிக்காவிற்கு கிடைத்த மிகப்பெரிய வரம் அலாஸ்கா. காடுகள், இயற்கை வளங்கள் கனிமங்கள் என்று பனிக்கட்டிகள் மூடி பாதுகாத்துக் கொண்டிருக்கும் மிகப்பெரிய நிலப்பரப்பு அது. இரண்டாம் உலக யுத்தம் முடிந்து பனிப்போர் காலத்தில்தான் ரசியா இழந்த அலாஸ்காவை நினைத்து அழுததும் உண்டு. ரசியாவும் அமெரிக்காவும் சேர்ந்து செய்த கூட்டு வணிகத்தில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக அடிமாட்டு விலைக்கு அந்த நிலப்பகுதியை அன்றைய ரசிய மன்னர் தாரைவார்த்துக் கொடுத்தார். அமேரிக்கா இன்றுவரை அதிஷ்டத்திலேயே வாழ்ந்து கொண்டு இருக்கிறது.

எமது நாட்டில் யுத்தம் என்றால் எல்லா நிதியும் போருக்குத்தான் போகும். அரச மக்கள் வளங்களும் அங்கதான் போகும்... மக்கள் தலையில் துண்டப் போடவேண்டிய நிலை. பொருள்கள் அடிப்படை தேவை விலையேற்றம் என்று மக்களை படாத பாடு படுத்தும். ஒவ்வொரு போரிலும் எமது தேசம் பல தசாப்தம் பின்னோக்கித்தான் போயிருக்கிறது.

இப்படி எல்லாம் யோசிக்கும் பொழுது என்னதான் யுத்தம் என்றாலும் தன்னிறைவாக வாழ்ந்த காலம் என்று ஒன்று எமது மண்ணில் நடந்துதான் இருக்கிறது. பாதுக்காப்பு உணர்வு, மருந்து தடை என்றாலும் பெரிய நோய்கள் இல்லாத தேசம். உணவுத்தடை என்றாலும் மூன்று நேரமும் சாப்பிட்ட காலம். தட்டி வான்களும், சைக்கிள் டைனமோ ரேடியோக்களும் 90 மோட்டார் சைக்கிளும் இப்படி எல்லாம் இருந்ததும் ஒரு தன்னிறைவான காலம்தான். "இன்னுமொரு நாடு" என்ற உணர்வு எம் உள்ளத்துள் இருந்தது மட்டுமல்லாமல் உணர்ந்து கொண்டதும் இந்த காலத்தில்தான் என்றால் அது மிகையில்லை.

அமேரிக்கா இப்படி எல்லாம் வளர்ந்தது என்று ஒற்றைச் சொல்லில் சொல்லலாம். ஆனால் அவர்கள் வரலாற்றில் சில பக்கங்களை திருப்பி பார்க்கவே முடியாதவை. ஏன் அந்த அமெரிக்க மக்கள் கூட பார்க்க அஞ்சுகிற பக்கங்களும் இருக்கத்தான் செய்கின்றன. மிகவும் கேவலமானவை... ஆனால் ஊருக்கு உபதேசம் நமக்கில்லை என்பதற்கப்பால், அவற்றிலிருந்து பாடங்களைப் படித்து இன்றைய ஜனநாயகத்தை தமது நாட்டிற்குள் மட்டும் சரியாக வைத்துக் கொண்டிருக்கிறது... வல்லரசு அமேரிக்கா... அடுத்த நூறாண்டு - உலகப்போராண்டு. அமெரிக்காவிற்கு மட்டுமல்ல... முழு உலகத்திற்குமே... அமேரிக்கா வல்லரசு என்பதை தொட்டுக் காட்டிய நூற்றாண்டு... காத்திருங்கள். தொடரும்...

**வருகை - 06**




வித்தியா சாகரன்

முகப்பக்கத்திலிருந்து...

## வினோதங்கள்

### மிதக்கும் பொருட்கள் பூமிக்குள்

பூமியின் சுற்றுவட்ட பாதையில் மிதந்து வரும் லட்சக்கணக்கான பொருட்களால், பூமிக்கும் செயற்கை கோளிற்கும் எதிர்காலத்தில் ஆபத்து ஏற்படும் என்பதால் அவற்றை தனியாக பிரித்து பூமிக்கு கொண்டு வரும் முயற்சியில் சுவிஸ் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

சுவிஸில் உள்ள ஆய்வு கூடத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும், Hepia Geneva-வை சேர்ந்த நுண்ணிய பொறியியல் துறை மாணவர்களும் Pacman net என்ற செயற்கை கோள் கருவியை உருவாக்கி வருகின்றனர்.

### இறந்த தாய் ஸ்கேனில்

கருவுற்றிருக்கும் ரெபேகா மலியா என்பவர் கடந்த யூன் மாதம் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு சென்றுள்ளார். அப்போது, இவருக்கு ஸ்கேன் செய்தபோது அதில் இறந்துபோன தனது தாயின் முகம் பதிவாகியிருந்துள்ளது.

**இப்படியும் நடக்கலாம்**

### பாலியலை கட்டுப்படுத்த அரசு திட்டம்




பிரான்ஸ் நாட்டின் நடத்தப்பட்ட ஒரு வாக்கெடுப்பில் பேருந்து, ரயில் போன்றவற்றில் பயணிக்கும் பெண்களுக்கு எதிராக பாலியல் தொல்லைகள் அதிகளவில் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் பெண்களின் உரிமைகளுக்காக போராடும் அமைப்புகளும் பெண்களுக்கு எதிராக பாலியல் தொல்லைகளை கட்டுப்படுத்த கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தது. இந்நிலையில் பேருந்து, ரயில் போன்றவற்றில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாலியல் தொல்லைகளை கட்டுப்படுத்த பிரான்ஸ் அரசு புதிய திட்டங்களை வெளியிட்டுள்ளது.

### இறந்து உயிர் பிழைத்த குழந்தை

பிரித்தானியாவினைச் சேர்ந்தவர்கள் எபி மற்றும் லாரா என்போர் ஓரினச்-சேர்க்கை தம்பதிகளான இவர்கள் குழந்தை பெற்று கொள்வதற்கு முடிவு செய்தனர். இதையடுத்து 10,000 பவுண்ட் செலவு செய்து அதற்கான சிகிச்சையை மேற்கொண்டு கர்ப்பமடைந்த லாராவை பரிசோதனை செய்த மருத்துவர்கள் குழந்தையின் மூளையில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக கூறினர். இந்நிலையில் அவருக்கு குழந்தை இறந்து பிறந்துள்ளது. பின் 22 நிமிடங்கள் கழித்து குழந்தையின் மூச்சு இயங்க ஆரம்பித்துள்ளது. இதனால் ஆச்சரியம் அடைந்த மருத்துவர்கள் தகுந்த சிகிச்சைகள் அளித்து குழந்தையின் உயிரை காப்பாற்றினர்.



- சீனாவினைச் சேர்ந்த ஷாங், வாங் நி தம்பதியினருக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்தும் வரும் ஷாங், தனக்கு ஆண் குழந்தை இல்லையே என தனது மனைவியுடன் சண்டை போட்டு வந்துள்ளார். இந்நிலையில், தனது மனைவிக்கும் வேறு ஒரு நபருக்கும் இடையே தொடர்பு இருப்பதாக அறிந்த அவர் மனைவியை அடித்து உதைத்ததுடன் நிர்வாணமாக்கிய-தோடு, "நான் எனது உடலை விற்க விரும்புகிறேன்" என எழுதப்பட்ட அட்டையை அவரது கையில் கொடுத்து தெருவில் ஊர்வலமாக அனுப்பிவிட்டு பின்தொடர்ந்து சென்று பார்த்துள்ளார்.

- நாசா விண்வெளி ஆய்வு மையத்திற்கு கடந்த புதன்கிழமை காலை கமெராவில் பதிவு செய்த புகைப்படத்தை அனுப்பியது. அதில் புளூட்டோவின் மேற்பரப்பில் உலக காதலர்களின் காதல் சின்னமான இதயம் போன்ற தோற்றம் இருப்பதைப் பார்த்து நாசா விஞ்ஞானிகள் ஆச்சரியமடைந்-துள்ளனர்.

- சமீபத்தில் குவைத்தில் உள்ள அல் இமாம் அல் சித்திக் மசூதியில் தாக்குதல் ஒன்று இடம்பெற்றதையடுத்து அங்கு காவல்துறையினர் பலத்த பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ளனர், இந்நிலையில் அப்பகுதியில் பர்தா அணிந்திருந்த நபர் ஒருவர் மீது சந்தேகம் அடைந்து விசாரித்த போது தனது காதலியை பார்ப்பதற்காக வந்ததால் தான் பர்தா அணிந்து வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## "முதலூர் முழக்கம்" உதைப்பந்தாட்ட சுற்று

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக்கழகம்



தனது 54வது ஆண்டு நிறைவினை முன்னிட்டும் உயிர்நீத்த உறவுகளின் ஞாபகார்த்தமாகவும் நடாத்திய "முதலூர் முழக்கம்" உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக்-கழக அணி இந்த ஆண்டுக்கான சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடமாக முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக்கழகம் இந்த சுற்றுப்போட்டியை நடாத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கராட்டியில் 43 பதக்ககங்கள்

சிகான் கே.இராமச்சந்திரன் முதலாவது ஞாபகார்த்த தேசிய கராட்டி சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அணிகள் 18 தங்கப்பதக்கங்கள் அடங்கலாக 43 பதக்கங்களை பெற்றுக் கொண்டதாக அம்பாறை மாவட்ட பிரதம போதனா-சிரியர் சென்சி கே.கேந்திரமூர்த்தி தெரிவித்தார். இலங்கை ஜே.கே.எம்.ஓ. சங்கத்தின் ஒழுங்கமைப்பில கடந்த 27ஆம் திகதி காலி வெலிகம நகர மண்டபத்தில் இடம் பெற்ற சுற்றுப்போட்டிகளிலேயே தங்களது மாணவர்கள் பங்குபற்றி 43 பதக்கங்களை பெற்றுக் கொண்டதாக அவர் தெரிவித்தார்.

## கராட்டியில் 43 பதக்ககங்கள்

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழா வவுனியா தேசியக்கல்வியியல் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியது. வட மாகாணத்தின் 12 வலயங்களை சேர்ந்த பாடசாலைகளின் மாணவர்கள் பங்கேற்கவுள்ள இவ் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக வட மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார். இவ் விளையாட்டு விழாவில் தடகள போட்டிகள் உட்பட உள்ளக விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மாணவன் சாதனை

**கடந்த** வாரம் மட்டக்களப்பில் நடைபெற்ற மாகாணமட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் திருகோணமலை விபுலானந்தா கல்லூரியிலிருந்து கலந்து கொண்ட மாணவன் செல்வன் சந்திரன் சந்தோஸ் தான் கலந்து கொண்ட மூன்று போட்டிகளிலும் சாதனை பெற்றுள்ளார். 17 வயது பிரிவில் 100M ஓட்டம், 200M ஓட்டம், 400M ஓட்டம் ஆகிய மூன்று போட்டிகளிலும் முதலாம் இடத்தை பெற்று மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் கிண்ணியா ஆலங்கேணி சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்தில் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்து கடந்த மாதம் தி/விபுலானந்தா கல்லூரியில் க.பொ.த (உ/த) தொழில்நுட்பப் பிரிவில் அனுமதி பெற்று கல்விகற்று வருகின்ற புதிய மாணவன் ஆவார்.

இவரை பாராட்டி கல்லூரி அதிபர், விளையாட்டுப் பொறுப்பாசிரியரும் பதக்கம் அனுவிக்கின்ற நிகழ்வை படத்தில் காணலாம்.



## மத்திய மாகாண விளையாட்டுப் போட்டி

மத்திய மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நேற்று கண்டி- போகம்பறை மைதானத்தில் ஆரம்பமானது. இதற்கான ஒலிம்பிக் தீபங்கள் தெல்தெனிய கல்வி வலயத்திலுள்ள ஹஸலக மகா வித்தியால-யத்திலிருந்து ஆரம்பமாகி கண்டி வரை பாடசாலை வீரர்களால் கொண்டுவரப்பட்டது.

முதலாவது

ஒலிம்பிக் தீபத்தை மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கா ஏற்றி வைத்ததுடன் ஹஸலக தேசிய பாடசாலை மாணவர்களிடம் அதனை கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு பாடசாலைகளும் இப்போட்டியில் கலந்து கொண்டன.



## ராயுடு அபார சதம்

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 6 விக்கெட்டுக்கு 255 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ரஹானே தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 3 ஒருநாள் போட்டி மற்றும் இரண்டு டி20 போட்டிகளில் விளையாடுவதற்காக ஜிம்பாப்வே சென்றுள்ளது.

இதன் முதல் ஒருநாள் போட்டி இன்று ஹராரேயில் தொடங்கியது. இதில் நாணய சுழற்சியில் வென்ற ஜிம்பாப்வே அணி பந்துவீச முடிவு செய்தது. ராயுடு சதம் அடித்ததால் இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்கு 255 ஓட்டங்கள் எடுத்தது.



## 23ம்நிலை – செரீனா – 4ம் நிலை

செரீனாவை எதிர்த்தாடுகிறார் ரஷ்யாவின் மரியா ஷர போவா. இந்தப்போட்டி டென்னிஸ் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. உலகின் முதல் நிலை வீராங்கனையும் விம்பிள்டன் பட்டத்தை 5 முறை வென்றவருமான செரீனா வில்லியம்ஸ் கால் இறுதியில் 23ஆம் நிலை வீராங்கனையான விக்டோரியா அசரென் காவை எதிர் கொண்டார்.

இதில் செரீனா வென்று அரை இறுதிக்கு தகுதி பெற்றார். பின் செரீனா வில்லியம்ஸ் அரை இறுதியில் பரம்பரை எதிரியும்இ 4ஆம் நிலை வீராங்கனையுமான மரியா ஷரபோவாவை சந்திக்கிறார்.





## பாகிஸ்தான் வெற்றி

கண்டி பல்லேகல மைதானத்தில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இடம்பெற்று வந்த மூன்றாவது டெஸ்ட் போட்டியை ஏழு விக்கெட்களால் வெற்றி கொண்டதையடுத்து மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2 : 1 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி கைப்பற்றியுள்ளது. [illegible] ஆட்டத்தை 2 விக்கெட் இழப்புக்கு 230 ஓட்டங்களை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி வெற்றிக்கு மேலும் 147 ஓட்டங்கள் தேவையென்ற நிலையில் நான்காம் நாள் ஆட்ட முடிவில் சதம் பெற்றிருந்த ஷன் மசூட்டின் விக்கெட்டினை மாத்திரம் பறிகொடுத்து வெற்றியிலக்கை

## இலங்கை அணியில் புதிய வீரர்கள்

இலங்கை – பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்றுடன் முடிவடைந்தது.

இதையடுத்து இரு அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதற்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சிறிவர்தன, பதிரண என்ற இரண்டு புதுமுகங்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

## இலங்கை அணியில் புதிய வீரர்கள்

பெண்கள் உலகக் கிண்ணக் கால் பந்து இறுதி ஆட்டத்தில் ஜப்பானை வீழ்த்தி, அமெரிக்கா சம்பியன் ஆனது. கனடாவில் 7ஆவது பெண்கள் உலக கிண்ணக் கால்பந்து போட்டி கடந்த மாதம் 6 ஆம் திகதி தொடங்கியது. இந்த போட்டியில் 24 அணிகள் பங்கேற்றன. 3ஆவது முறையாக அமெரிக்க பெண்கள் அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைகுழியில் இருந்து இன்றுவரை 10 உடல் எச்சங்கள் மீட்பு !



திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு அரங்கில் கண்டு பிடிக்கப்பட்டிருந்த மனிதப்புதை குழியானது மீண்டும் கடந்த ஜுலை 6ம் திகதி தொடக்கம் தோண்டப்பட்டு புதைக்கப்பட்டதாகக் சந்தேகிக்கப்படும் சடலங்களைத் தேடும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 10ம் திகதி வரைக்கும் பத்து உடலங்களின் எச்சங்கள் இம் மனிதப் புதைகுழியில் இருந்து எடுக்கப் பட்டுள்ளது.

மக்கெய்சர் அரங்கில் உருவாக்கப்பட்டு வரும் விளையாட்டுக் கட்டடத் தொகுதியின் கட்டட நிர்மாணப் பணிகளுக்காக விளையாட்டரங்கின் ஒரு பகுதியில் குழியொன்றை வெட்டியபோது அக் குழிக்குள் இருந்து மனித உடலமொன்றின் எச்சங்கள் கடந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே மனிதப் புதைகுழி தொடர்பான தகவல்கள் வெளிவரத் தொடங்கின.

கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் இரசாயனப்பகுப்பாய்விற்கு அனுப்பப் - பட்டு அவ்விசாரணை அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதன் 21

## நியமனம் மறுக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம்

பலகாலமாகப் பணியாற்றிவரும் சுகாதாரத் தொண்டர்களைத் தவிர்த்து புதியவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ள கிழக்கு மாகாணச் சுகாதாரத் தொண்டர்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். 21




## சம்பூர் காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டன

### திரு. நாகேஸ்வரன் மா.உ

சம்பூர் காணிகள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கு நேற்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள கிழக்கு மாகாண சபை உறுப்பினர் திரு. நாகேஸ்வரன் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மக்கள் அக்காணிகளில் குடியேற முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாகத் தனது முகப்பக்கத்தில் தகவலொன்றை வரைந்துள்ள தமிழத் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினரான திரு.



நாகேஸ்வரன் ''சம்பூர் மீள்குடியேற்ற த்திற்கு இருந்த இறுதித்தடையும் இன்று விலக்கப்பட்டுள்ளது 21

## கைவிடப்பட்ட சிசுவின் தாய் கைது



பெற்ற தன் குழந்தையை பள்ளிவாசலில் பரிதவிக்கவிட்டுச் சென்ற தாயை திருகோணமலைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

திருகோணமலை ஏகாம்பரம் வீதியில் உள்ள முஹைதீன் ஜும்மா பள்ளி வாசலுக்கு அருகில் கடந்த வாரம் அனாதரவாகக் குழந்தையொன்று கண்டுபிடிக்கப்பட்டது. பிறந்து மிகச் சொற்ப நாட்களேயான அக்குழந்தையானது பொதுவைத்தியசாலைக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து காவல்துறையினர் குழந்தையை மீட்டதுடன் விசாரணைகளையும் 21

## 2000 வேலைவாய்ப்புக்கள்!

### கிழக்கின் முதல்வர் அதிரடி அறிவிப்பு!

கிழக்குமாகாணத்தில் இரண்டு வருடத்திற்குள் ஒரு இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பினை வழங்கவுள்ளதாக கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபையின் மிகுதியாக உள்ள 2 வருட ஆட்சியில் கிழக்கிலுள்ள 45 உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகையிலும் 21



முதத்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738

## ஒரு நாடு இரு தேசம்

### கொள்கையில் மாற்றமில்லை



தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்- பட்டு சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட சமஸ்டி முறையை வலியுறுத்தியே எமது தேர்தல் விஞ்ஞாபனம் அமையும் என தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.அத்துடன் ஒரு நாடு இரு தேசங்கள் என்ற கொள்கையில் மாற்றமில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வட-கிழக்குத் தமிழர் தாயகங்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனித்துக் களமிறங்கவுள்ளது. நாம் ஒரு நாடு இரு தேசங்கள் என்ற கொள்கையிலிருந்து விலகாது தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றோம். இதில் எவ்வித மாற்றமுமில்லாது தொடர்ந்தும் மக்கள் சேவையினை மேற்கொள்வோம். எமது தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கும் பணிகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன. தமிழர் தேசம் அங்கீகரிக்கப்பட்டு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இறைமையைக் கொண்ட சமஸ்டி முறையை எமது விஞ்ஞாபனம் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 02.05.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.